AR
534

அழகர்கோயில்

ஆசிரியர்: முத்து பிச்சை

T.7450

பதிப்பாசிரியர்
தி.ஸ்ரீ.ஸ்ரீதர், இஆப
சிறப்பு ஆணையர்

வெளியீடு:
தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை -600 008
2005

T·7450

நூலகம் மற்றும் ஆய்வு மையம் ★ சென்னை-85 ★ கோட்டூர்புரம்
5 SEP 2018

அழகர்கோயில்

அழகர்கோயில்

பதிப்பாசிரியர்

தி.ஸ்ரீ.ஸ்ரீதர், இஆப,

சிறப்பு ஆணையர்

ஆசிரியர்

முத்து.பிச்சை

வெளியீடு
தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை - 600 008

BIBLIOGRAPHICAL DATA

Title	:	Alagarkoil
Author	:	Muthu Pichai
Copy right	:	Tamil Nadu State Department of Archaeology
Subject	:	History
Language	:	Tamil
Edition	:	First
Publication No. & Year	:	170 - 2005
Type point	:	11
Number of pages	:	X+187
Paper used	:	80 GSM
Type setter	:	Vijay Softech Academy 33/4, Medavakkam Main Rd Madipakkam, Chennai-91.
Printer	:	The Chennai Printers Indl. Coop. Society Ltd., 118, Big Street, Triplicane, Chennai - 600 005

Publisher: State Department of Archaeology,
Tamil Valarchi valagam,
Halls Road, Egmore – 600 008

Price : Rs. 52.00

பதிப்புரை

தமிழகத்தில் பழம்பெருமை வாய்ந்த கோயில்களும், கலைச் சின்னங்களும் இல்லாத ஊரே இல்லை எனலாம். அவையெல்லாம் காலத்தையும் வென்று வரலாறு பேசுகின்றன. கோயில்களும், கோயில்களில் உள்ள கல்வெட்டு, சிற்ப, செப்புத் திருமேனிகளும் நம் முன்னோரது கலைத்திறனையும் அறிவியற் பூர்வமான அறிவினையும், நனி சிறந்த நாகரிகத்தையும் வெளிப்படுத்துகின்ற வாயில்களாக உள்ளன. எனவே அவை என்றென்றும் பாதுகாக்கப்பட வேண்டும், போற்றப்பட வேண்டும் என்ற உயர்ந்த நோக்கின் அடிப்படையில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை தமிழகத்திலுள்ள கோயில்கள், பழஞ்சின்னங்களைப் பாதுகாத்து வருகின்றது. மேலும் இந்த வரலாற்றைப் போற்றும் எண்ணம் இளைஞரிடையே வரவேண்டும் என்ற நோக்கத்துடன் முதுநிலைப் பட்டம் பெற்ற மாணவர்களுக்கு ஓராண்டு பட்டயப் பயிற்சியினை நடத்தி அதன் வழி கல்வெட்டு, கட்டட, சிற்ப, ஓவியக் கலைகளின் வரலாறுகளைச் சொல்லித் தந்து வருகின்றது. அவ்வாறு அவர்கள் பெறும் பயிற்சியின் இறுதியில் மாணவர்கள் ஒரு கோயிலைத் தெரிவு செய்து அக்கோயிலின் கல்வெட்டுகள், கட்டட, சிற்ப, செப்புத்திருமேனிகளின் மூலம் பெறப்படும் அரசியல் வரலாறு ,கலைவரலாறு மற்றும் ஊர் வரலாறு அதன் பெருமை, அங்கு நிலவி வந்த பண்பாடு, மரபுகள்

போன்றவற்றைக் கால வாரியாக ஆய்வு செய்து ஓர் ஆய்வேடு சமர்ப்பித்தல் வேண்டும். அவ் ஆய்வேடு வரலாற்று அறிஞர்களுக்கும் பல்கலைக் கழகங்களில் முனைவர் பட்டம் பெற ஆய்வு செய்யும் மாணவர்களுக்கும் ஒரு கையேடு போல் அமைவதாகவும் இருக்கும்.

களப்பணியே இங்கு முதன்மைப் படுத்தப்படுவதால் அனைத்து வரலாறும் இதனுள் உண்டு என்பது போல் மாணவர்களுடைய ஆய்வேடு அமையும் என்பதால் தொல்லியல் துறை அவ்வப்போது சிறந்தவற்றைத் தெரிந்தெடுத்து அனைவரும் பயனுறும் வண்ணம் நூலாக வெளியிடும் பணியினைச் செய்து வருகின்றது.

அவ்வகையில் மதுரைக்கருகே அமைந்துள்ள 'அழகர்கோயில்'வரலாறு இன்று நூல் வடிவமாக உங்கள் கைகளில் தவழ்கின்றது. அழகர்கோயில் என்றே கோயிற் பெயரும் ஊர்ப் பெயருமாக அமைந்த இப் பெருங்கோயிலை அறியாதவர் இருக்க முடியாது. சமய ஒற்றுமைக்குச் சான்றாகத் திகழும் மலை. 108 வைணவத் தலங்களுள் ஒன்று. சோலைமலை, இருஞ்சோலை, இருங்குன்றம் எனச் சங்க நூல்களில் குறிப்பிடப்பட்ட இம்மலை திருமால் குன்றமாகப் பரிபாடலிலும், பழமுதிர் சோலைமலை என அறுபடை வீடுகளுள் ஒன்றாகத் திருமுருகாற்றுப் படையிலும் போற்றப்பட்டுள்ளது. இதே கால கட்டத்தில் சமணத் துறவியரும் இங்கு வாழ்ந்துள்ளனர். எனவே சமய ஒற்றுமைக்கு இலக்கணமாகத் திகழ்ந்துள்ள இம்மலை இன்றும் அதே ஒற்றுமையுடன் விளங்குகிறது. கள்ளழகர், மதுரைச் சொக்கநாதர், சித்திரைத் திருவிழா இவற்றை அறியாத மக்களே இல்லை எனலாம். பல அரசு மரபுகள் இக்கோயிலுக்குச் செய்துள்ள திருப்பணிகள் ஏராளம். அதன் வழி நாம் அறியும் சமுதாயச் செய்திகளும் ஏராளம். அந்த அளவு வரலாற்றின் தொடக்க காலம் முதல் இன்று வரை பெருமைப்படத்தக்க தொடர்ச்சியான பல வரலாற்றுச் சிறப்புகளை உள்ளடக்கிக் கொண்டிருக்கும் அழகர்மலை, அழகர்கோயில், கள்ளழகர் பற்றிய வரலாற்றுத் தொகுப்புகளை ஆய்வேடாகத் தொகுத்து எழுதியவர் திரு முத்து.பிச்சை. அவர் 1976-77 ஆம் ஆண்டுக் கல்வெட்டு மற்றும் தொல்லியல் முதுகலைப் பட்டயப் படிப்பின் ஒரு தேர்வுத் தாளாக எழுதியுள்ளார். அனைத்து வரலாற்றுச் செய்திகளையும் தொகுத்துச் சிறப்பாகப் படைத்துள்ளார். மிகப் பழமை வாய்ந்த இக்கோயிலைப் பற்றி உள்ளது உள்ளபடி விளக்கினாலே பக்கங்கள் நீளும். விளக்கங்களை அறிந்தாலே அறிவு பெருகும். அந்த அளவு செய்திகள் ஏராளம். அவற்றையெல்லாம் தொகுத்து அளித்துள்ள ஆய்வேட்டை நூலாக வெளியிடுவதில் மகிழ்ச்சி கொள்கிறேன்.

ஆய்வேட்டைப் பெருமுயற்சியுடன் திருத்தம் செய்து சுருக்கிச் செறிவாகத் தேவையான நிழற்படங்களுடன் அளித்துள்ள துறையின் சிறப்பு நிலைக் கல்வெட்டாய்வாளர் திருமதி அர.வசந்தகல்யாணி அவர்களை மனமாரப் பாராட்டுகிறேன்.

வரலாற்றுலகிற்குக் கிடைத்துள்ள அடிப்படைச் சான்றுகளின் தொகுப்பான இந்நூலை ஆய்வாளர்களும் அறிஞர்களும் படித்துப் பயனுற வேண்டும் என்பதே எமது விருப்பம்.

தேதி:10-10-2005

இடம்: சென்னை-8

சிறப்பு ஆணையர்

உள்ளுரை

1. ஊரும் பேரும் 1
2. தொன்மைச்சான்றுகள் 7
3. கோயில் அமைப்பு 14
4. செப்புத் திருமேனிகள் 28
5. சிற்பங்கள் 51
6. ஓவியங்கள் 73
7. கோட்டைகளும் கோபுரங்களும் 78
8. திருவாராதனைகளும் திருவிழாக்களும் 82
9. கோயிலும் சமுதாயமும் 103
10. தமிழக வரலாற்றில் அழகர் கோயில் 113
11. கல்வெட்டுச் செய்திகள் 128
12. இலக்கியச் செய்திகள் 165
13. நாகர் வழிபாடு 179
14. நாட்டுப்புறப் பாடல்களில் அழகர் 182

அழகப்பிரானார்
(சுந்தரராஜப்பெருமாள்)



1 ஊரும் பேரும்

அமைவிடம்:

அழகர்கோயில் மதுரைக்கு வடகிழக்கே 21 கி.மீ. தொலைவில் உள்ள அழகர் மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ளது. இங்கு கோயிற் பெயரும், ஊர்ப்பெயரும் அழகர்கோயில் என்பதே ஆகும்.

உலக வரைபடத்தில் இதன் இருப்பிடத்தை வடக்கு அட்சரேகை 10-3° - 10-10°, தீர்க்கரேகை 78-12° , 78-20° என்று குறிப்பர்.

இம்மலை, கடல் மட்டத்திலிருந்து 900 அடி உயரத்தில் உள்ளது. இதன் பரப்பளவு 26-31 சதுர மைல் அல்லது 16838.4 ஏக்கர் என்று கூறப்படுகிறது.

இம்மலையினை ஒட்டி ஆலையூர்மலை, காந்தமலை, நத்தமலை முதலான மலைகள் அமைந்துள்ளன. இம் மலைத்தொடர்ச்சி கிழக்கு மேற்காகச் சுமார் 15 மைல் நீளமுடையது. இம் மலைத்தொடர்ச்சியின் சுற்றளவினை சுமார் 45 மைல் என்று குறிப்பர். இம்மலையைப் பெரியாழ்வார் பின்வருமாறு குறிக்கிறார்.

“ பலபல நாமம் சொல்லிப் பழித்த சிசுபாலன் தன்னை
அலவலைமை தவிர்த்த அழகன் அலங்கார மலை
குலமலை கோலமலை குளிர்மாமலை கொற்றமலை
நிலமலை நீண்ட மலை திருமாலிருஞ் சோலையதே”

ஊரும் பேரும்:

அழகர்கோயிலில் உள்ள இறைவனின் பெயர் அழகர். இக்கோயிலின் பெயர் அழகர்கோயில். கோயிலைச் சுற்றி அமைந்துள்ள ஊரின் இன்றைய பெயரும் அழகர்கோயில்.

இது திருமால் இருக்கின்ற இடமாகையால் இதனைப் பரிபாடல் திருமாலிருங்குன்றம், இருங்குன்றம், திருமாலிருஞ்சோலை, சோலைமலை, திருவரை என்ற பெயர்களால் குறிப்பிடும். சிலப்பதிகாரம் 'திருமால்குன்றம்' என்று குறிப்பிடுகிறது. கி.பி.6 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த முதலாழ்வார்களுள் ஒருவரான பூதத்தாழ்வார், தமது பாடலுள் 'இருஞ் சோலைமலை, இருஞ்சோலை' என்று குறிக்கின்றார்.

கி.பி.8 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த நம்மாழ்வார் இம்மலையினை 'மாலிருஞ் சோலை' என்றும் 'திருமாலிருஞ் சோலை மலை' என்றும் பாடுவார். ஓர் இடத்தில் இம்மலை பற்றி அவர் "திருமாலிருஞ் சோலைமலை என்றேன் என்ன, திருமால் வந்து என்னெஞ்சு நிறையப் புகுந்தான்" என்று பாடுகின்றார்.

நம்மாழ்வாரின் சமகாலத்தைச் சார்ந்த திருமங்கை ஆழ்வார் இம்மலையினை "மாலிருஞ் சோலை" என்றும், "இருஞ் சோலை" என்றும், "திருமாலிருஞ்சோலை மலை" என்றும் பாடுவார். இப்படித் திருமாலிருஞ் சோலை என்றிருந்தது நம்மாழ்வார், பெரியாழ்வார் காலங்களில் அழகர்கோயில் என்று பெயர் பெறத் தொடங்கியது எனலாம். எடுத்துக்காட்டாக

"சதிரிள மடவார் தாழ்ச்சியை மதியாது
அதிர்குரல் சங்கத்து அழகர் தம் கோயில்"

(10-ஆம் திருவாய்மொழி 2-ஆம் பத்து)

"பலபல நாமம் சொல்லிப் பழித்த சிசுபாலன் தன்னை
அலவலமை தவிர்த்த அழகன் அலங்காரன் மலை"

என்ற அடிகளைக் கூறலாம். மேலும் சூடிக் கொடுத்த சுடர்க்கொடியான நாச்சியார் இம்மலைப் பிரானை

"அழகப் பிரானார் தம்மை என் னெஞ்சத் தகப்படத்
தழுவ நின்று என்னைத் ததைத்துக் கொண்டு ஊற்றவும்
வல்லையே" (10-ஆம் திருவாய்மொழி 2-ஆம் பத்து)

என்று ஆராக் காதலுடன் அழைத்து மகிழ்கின்றார்.

அழகிய மணவாளதாசர் இயற்றிய அஷ்டபிரபந்தத்தில் அழகர் அந்தாதி என்ற 100 பாடல்கள் இடம் பெறுகின்றன. ஆழ்வார் பாசுரங்கள் போன்றே இந்த நூறு பாடல்களிலும் அழகர்மலை 'மாலிருஞ் சோலை' என்றும், 'மாலிருஞ் சோலைமலை' என்றும், இம்மலையில் உறையும் திருமால் 'அழகன்' என்றும், 'அலங்காரன்' என்றும், 'சோலைமலை அழகன்' என்றும் அழைக்கப்பட்டுள்ளதை அறிகிறோம். குறிப்பாகப் பெரியாழ்வாரின் 'அழகன் அலங்காரன் மலை' என்னும் சொற்றொடரே அழகர் திருவந்தாதியில் மீண்டும் மீண்டும் இடம் பெறுகின்றது எனலாம். பெரியாழ்வாரின் பாடலை அடிப்படையாகக் கொண்ட, அஷ்டப் பிரபந்தத்தைப் பின்பற்றியே 'சோலைமலை' அழகர்மலை ஆயிற்று என்பதில் ஐயமில்லை.

சோலை மலையா? பழமுதிர் சோலை மலையா?

திருமுருகாற்றுப்படை ஆசிரியர் நக்கீரர்,

"இழுமென இழிதரு மருவி
பழமுதிர்சோலை மலைகிழவோனே"

என்று பாடுவதால், இம்மலையின் மற்றொரு சிறப்பு முருகன் உறைவிடமாகக் குறிக்கப்படுவதாகும். "பழமுதிர் சோலை மலை கிழவோனே" என்று நக்கீரர் பாடும் மரபு சங்க இலக்கிய மரபாகும். சங்க இலக்கியத் தொகுதியான பத்துப்பாட்டுள் இடம்பெறும் ஏனைய பாட்டுகளான பொருநராற்றுப்படையின் பாட்டுடைத் தலைவன், "காவிரி புரக்கும் நாடு கிழவோனே" என்றும் பெரும்பாணாற்றுப்படையின் பாட்டுடைத் தலைவன், "ஒளிர் இலங்கு அருவிய மலை கிழவோனே" என்றும், மலைபடுகடாத்தின் பாட்டுடைத்தலைவன் "குன்று சூழிருக்கை நாடு கிழவோனே" என்றும் குறிக்கப்படுகின்றனர். இதே சங்க இலக்கிய மரபினில் ஊறித் திளைத்த நக்கீரர் தமது பாட்டுடைத் தலைவனைப் "பழமுதிர் சோலைமலை கிழவோனே" என்று பாடுகின்றார். மதுரையின் ஒரு புறத்தே திகழும் பரங்குன்றில் உறையும் குமரனைப் பரிபாடல் பாடுவது போன்று, மறுபுறத்தே திகழும் சோலைமலைக் குமரனை முருகாற்றுப்படை பாடுகின்றது. "பழமுதிர் சோலை மலை கிழவோனே" எனும் வரிக்கு நச்சினார்க்கினியார் "பழம் முற்றின சோலைகளை உடைய மலைக்கு உரிமையுடையோன்" என்று பொருள் கூறுவார். இப்பொருளை "பழம் உதிர்கின்ற சோலை மலையின் கிழவன், உரிமையுடையவன்"என்றும் கூறுவர். 'சோலை மலை' என்ற பெயரைப் பரிபாடலும் பின் வருமாறு குறிக்கும்.

"சிலம் பாறணிந்த சீர்கெழு திருவின்
சோலையொடு தொடர் மொழி மாலிருங்குன்று"

(பரி 15 22-23) என்று சோலை என்னும் சொல் தொடர்மொழியாக வந்ததைக் குறிக்கிறது.

அருணகிரியார் தமது பாடல்களில் "சோலைமலை

நின்ற பெருமாளே" என்று பாடுவார். தமது பாடல்களின் எண்ணிக்கையில் பத்தில் 'சோலை மலை' என்றும், இரு பாடல்களில் "பழமுதிர் சோலைமலை" என்றும், ஒரு பாடலில் "பழமுதிர் சோலை" என்றும், மூன்று பாடல்களில் "குலகிரி" என்றும், சில இடங்களில் அஷ்ட பிரபந்த ஆசிரியர் போல அருணகிரியாரும் "சோலை மா மலை" என்றும் பாடுவார். சோலைமலையில் உள்ள ஆற்றினைச் சங்க காலந்தொட்டு ஆசிரியர்கள் சிலம்பாறு என்று பாடுவதைப் போல் அல்லாது அருணகிரியார் தமது பாடலில் சிலம்பாறு என்று குறிக்காது "நூபுர கங்கை" என்று குறிக்கின்றார்.

எனவே சோலைமலை சங்ககாலத்தில் முருகன் எழுந்தருளி இருந்த இடம். காலப்போக்கில் திருமாலுக்கும் உரியதாகி அழகர்கோயில் என்று வழங்கப்பட்டது. இரு கோயில்களும் சோலைமலையினில் அமைந்து இன்று வரை அருள் வழங்குகின்றன.

ஊர் அமைப்பு

அழகர்கோயிலை மையமாக வைத்து ஊரும் கோட்டையும் அமைந்துள்ளன. அழகாபுரிக் கோட்டைக்குள்ளேயே ஊரின் தோற்றம் அடங்கி விடுகின்றது. ஊரில் நம்மை வரவேற்கும் வாயில் தலைக்கோட்டை வாயிலே. இக்கோட்டை வாயிலைத் தாண்டியவுடன் "நடுத்தெரு" ஆரம்பமாகின்றது. இந்த நடுத்தெருவில் இரு புறமும் குடியிருப்புகள் அமைந்துள்ளன. இச்சாலையின் மேற்குப்புறம் வடக்கு நோக்கிய வாயிலில் அமைந்துள்ள திருமலை நாயக்கர் மண்டபத்திற்குக் கிழக்கே "அமைத்த நாராயணன்" என்ற தேர் நிற்கும் தேரடி அமைந்துள்ளது.

திருமலை நாயக்கர் மண்டபத்திற்கு வடக்கே, வடக்காடி வீதி அமைந்துள்ளது. இந்த வடக்காடி வீதியில் ஆடித் திருவிழாவில்

தேர் செல்லும். இந்த வீதியினை அடுத்து சதிரிள மடவார் சன்னதித் தெரு அமைந்துள்ளது. இந்தத் தலைக் கோட்டையை அடுத்து இரண்யன் கோட்டை என்னும் இரண்டாவது கோட்டை ஆரம்பமாகின்றது. இக்கோட்டைக்கு இரு வாயில்கள் ஒன்று இரண்யன் கோட்டை வாயில் மற்றொன்று அழிந்த நிலையில் உள்ள "திருமலா தேவர்" எனும் ஆரவீடு வம்சத்து மன்னரால் கட்டப் பெற்ற இராயர் கோபுர வாயில் ஆகும்.

இரண்யன் கோட்டை வாயிலைக் கடந்து சென்றால் அடுத்தது யானை வாகன மண்டபம். இம்மண்டபத்தினை இப்பொழுது மாங்குளத்து மக்கள் ஆடித் திருவிழாவில் அழகனது யானை வாகனப் புறப்பாட்டிற்குப் பயன்படுத்தி வருகின்றனர். இம்மண்டபத்திற்கு மேற்கே வசந்த அக்ரஹாரத் தெரு அமைந்துள்ளது. கிழக்கே அமைந்துள்ள தெரு "இரண்யன் கோட்டைக் கிழக்குத் தெரு" ஆகும். இதனை அடுத்து 18ஆம் படி கோபுரம் உள்ளது. இப்பதினெட்டாம் படி கோபுர வாயில் எப்பொழுதும் அடைத்தே இருக்கும். ஆடித் திருவிழாவில் சில நாள்களில் தான் திறந்திருக்கும்.

பதினெட்டாம் படி கோபுரத்தின் முன்பு "சந்தன வாவி" என்ற பொய்கை இருந்துள்ளது. பதினெட்டாம் படி கோபுர வாயிலை அடுத்த வாயில் "வண்டி வாசல்" வண்டிகள் செல்வதற்கு ஏற்பப் படிகள் இல்லாமலிருப்பதால் இப்பெயர். இந்த வாயிலில் தான் சித்திரைத் திருவிழாவில் அழகரும், ஏனைய அனைத்து நாள்களும் பொது மக்களும் சென்று வருகின்றனர்.

2

தொன்மைச் சான்றுகள்

தமிழிக் கல்வெட்டுகளில்

அழகர்மலையில் உள்ள சுமார் 2,200 ஆண்டுகட்கு முற்பட்ட தமிழிக் கல்வெட்டுகள், இம்மலையின் தொன்மைக்கு எடுத்துக்காட்டாக உள்ளன. தெற்கு நோக்கிய குகையின் மேல் முகப்பில் படிக்கக் கூடுமையான தூரத்தில் இக்கல்வெட்டுகள் அமைந்துள்ளன. இயற்கையாய் அமைந்துள்ள குகைத் தளத்தில் படுக்கைகள் அமைத்துள்ளனர். கிராமத்தார் இப்படுக்கைகளைப் பஞ்சபாண்டவர் படுக்கைகள் என்று வழங்குகின்றனர். பெரியதாக அமைந்துள்ள இக்குகையில் அழகிய சுனையும் அதனருகில் ஆலமரம் ஒன்றும் உள்ளது. படுக்கையிருக்கும் தளத்திற்கும், பாறை முகப்பிற்கும் உயரம் மிக அதிகம். முகப்பின் மேற்பகுதியில் உள்ள பண்டைய கல்வெட்டுகள் பின்வருமாறு:

1) மதிரய் பொன் கொல்வன் அதன் அதன்
2) . . . அ னாகன் த . . .
3) கணி நாகன் கணிய் நதன்
4) மத்திரைய் கே. . .
5) உபு வணிகன் வியகன் கனதிகன்
6) கனக அதன் மகன் அதன் அதன்
7) ஸபமித இன பமித்தி
8) பணித வணிகன் நெடுமலன்
9) கொழுவணிகன் எளசந்தன்
10) . . ஞ்சி கழுமாறந்தன்

11) தார அணிஇ கொடுபித அவன் (படம் 1, 2, 3)
12) தந்மந் காஸபன் அவ்விரு அ
13) . . அர் உம் கொடுபிதோ . .
14) வெண்பளியஅறுவை வணிகன் எளஅ அடன்
15) . . . தியன் சந்தன்

இக்கல்வெட்டுகள் வாயிலாக அவர்கள் பொன்வணிகன்– ஆதன், உப்புவணிகன்–இயக்கன், கணதிகன், அறுவை(துணி) வணிகன்–எளஅ அடன், பணித(சர்க்கரை) வணிகன்– நெடுமலன், கொழு(இரும்பு) வணிகன்–எள சந்தன் மற்றும் கனக அதன் மகன் அதன் அதன், ஸபமிதா இன பமித்தி,கழுமாறநதன், காஸபன் முதலிய பல வணிகர்களை அறிகின்றோம். அவர்கள் மதுரையைச் சார்ந்தவர்கள். அவர்கள் சமண சமயத்தவராக இருந்தனர்.

இக்கல்வெட்டின் காலம் பற்றி முனைவர் இரா.நாகசாமி, அவர்கள் "இக்கல்வெட்டில் எழுத்தின் மேல் கோடு உள்ள வடிவங்கள் அகர உயிர் மெய்யாகவும், கோடு இல்லாதவை மெய்யாகவும் கொண்டு படிக்க வேண்டும். ஆதலின் மேலே குறிக்கப் பெற்றுள்ள கல்வெட்டு கிறிஸ்துவிற்குச் சுமார் 200 அல்லது 300 ஆண்டுகட்கு முற்பட்டவையாக இருத்தல் வேண்டும் என்று கருதுகின்றார்".

இக்கல்வெட்டு வாயிலாக மதுரையைச் சார்ந்த பல சமண சமய வணிகர்கள், சமண முனிவர்களுக்கு அழகர் மலையில் அல்லது திருமாலிருஞ் சோலைமலையில் படுக்கைகளை அமைத்துக் கொடுத்தனர் என்பது தெளிவுறுகிறது. மேலும் சங்ககாலத்தில் முருகன், திருமால் போல் சமண முனிவர்களுக்கும் உறைவிடமாகவும் விளங்கியது என்றும் தெரிகிறது.

இக்கல்வெட்டுகளுக்கு அருகில் பாறையில் தீர்த்தங்கரர் சிலை ஒன்று உள்ளது. இவருக்கு அருகில் வெட்டப்பட்டுள்ள கி.பி.8 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த வட்டெழுத்துக் கல்வெட்டில் "அச்சணந்தி செயல்" என்று குறிக்கப்பெற்றுள்ளதால் இத்திருமேனி அச்சணந்தி என்பவரால் படைக்கப்பட்டது எனலாம்.

வான்மீகி இராமாயணத்தில் அனுமன் இலங்கை செல்லும் பொழுது இம்மலையினைக் கடந்து சென்றதாகக் கிஷ்கிந்தா காண்டத்தில் (41-21) செய்தி வருகின்றது. அதில் இம்மலை ஏனைய மலைகளைப் போல் அல்லாது உயரமற்ற தாழ்வான மலை என்ற செய்தி குறிக்கத் தக்கது.

மகாபாரதம் வனபர்வதத்தில் (83–21) யுதிஸ்திரா என்பவன் தீர்த்த யாத்திரையின் போது விருஷபாத்ரியில் உள்ள பல தீர்த்தங்களில் தீர்த்தமாடினான் என்பதை

ऋषभ पर्वतं गत्वा पाण्ढयेषु नृपपूजित भ ।
वाजपेयमवाप्नोति नाकपृष्ठे थ मोदन

என்ற வரிகளால் அறிகிறோம்.

பரிபாடலில் :

" . . . கடலும் கானலும் போலவும்
புல்லிய சொல்லும் பொருளும் போலவும்
எல்லாம் வேறு வேறு உருவின் ஒருதொழில் இருவர்த்
தாங்கு நீள்நிலை ஓங்கிருங் குன்றம் "

என்று இம்மலையின் சிறப்புப் பற்றியும், இங்குள்ள தெய்வங்களான திருமால், பலராமன் பற்றியும் குறிப்பிடப்படுகிறது.

திருமுருகாற்றுப்படையில் :

பத்துப்பாட்டுள் முதலாவது நூலான திருமுருகாற்றுப்

படையின் ஆசிரியர் நக்கீரர் இம்மலையை

"இழுமென இழிதரும் அருவிப்

பழமுதிர் சோலைமலை கிழவோனே"

என்று பாடுவதால் நக்கீரர் காலத்திலேயே இம்மலையும், இம்மலையில் வாழ் கிழவனும் (தலைவனும்) இங்குள்ள அருவியும் சிறப்புப் பெற்றிருந்தன என்பதறிகிறோம்.

சிலம்பில்:

இம்மலையும், இம்மலையில் நின்ற வண்ணம் உள்ள இறைவனும், இறைவனின் முன்புள்ள கொடிமரமும், இங்குள்ள சிலம்பாறும் பற்றி இளங்கோவடிகள்

"கடம்பல கிடந்த காடுபன் கழிந்து
திருமால் குன்றத்துச் செல்கு விராயின்" (11-90-91)
"நிலம்பக வீழ்ந்த சிலம்பாற் றகன்றலை" (11-108)
"மற்றவை நினையாது மலைமிசை நின்றோன்
பொற்றாமரைத்தாள் உள்ளம் பொருந்துமின்" (II, 133-134)
"உள்ளம் பொருந்து விராயின் மற்றவன்
புள்ளணி நீள்கொடி புணர்நிலை தோன்றும்
தோன்றிய பின்னவன் துணை மலர்ந்தாளிணை
ஏன்று துயர் கெடுக்கும் இன்பம் எய்தி
மாண்புடை மரபின் மதுரைக் கேகுமின்" (II: 87-138)

என்று சிலப்பதிகாரத்தில் குறித்துள்ளார். இவ்வரிகள் காடுகாண் காதையில் கோவலன், கண்ணகி ஆகிய இருவரும் மதுரை செல்லும் வழியில் ஓர் அந்தணனைக் கண்டு, அவனிடம் வழி கேட்குங்கால், அந்தணன் திருமால் குன்றத்தையும், அங்குள்ள சிலம்பாற்றினையும், அம்மலையில் நின்ற வண்ணம் உள்ள இறைவனையும், இறைவன் முன்புள்ள கொடி மரத்தினையும், முறையே கண்டு தொழுது பின்பு

செல்லுங்கள் என்று கூறும் பான்மையில் அமைந்துள்ளது.

மேலும் அவர் வாயிலாக இங்கு புண்ணியசரவணம், பவகாரணி, இட்டசித்தி முதலான மூன்று பொய்கைகளும், சிறப்புடைய கோங்கமரம் ஒன்றும் இருந்தது என்றறிகிறோம்.

வாமன புராணத்தில்:

வாமன புராணம் உள்ளிட்ட அனைத்துப் புராணங்களும் இம்மலையினை "விருஷபாத்ரி" என்று அழைக்கின்றன. இந்த வாமன புராணத்தில் இந்த மலையின் கண் உள்ள அழகர் சுந்தரராஜர் என்று குறிக்கப்படுகிறார். பொதுவாக அனைத்துப் புராணங்களும் இவரை சுந்தரராஜர் என்றே கூறுகின்றன. இந்த வாமன புராணத்தில் இச்சுந்தரராஜரின் சிறப்பும் பெருமையும், நூபுர கங்கையின் நுவலற்கரிய சிறப்பும் பேசப்படுகின்றன. வாயிலாக எமனுடைய கிளைக்கதை கூறப்படும் பொழுது, மார்க்கண்டேயன் சுந்தரராஜரின் பேரருள் பெற்ற விதமும், சிலம்பாற்றின் சிறப்பும் பேசப்படுகின்றன.

பிரம்மாண்ட புராணத்தில்:

இப்புராணத்தின் வாயிலாக குப்தபாண்டிய மன்னனின் செய்திகளும், விருஷபாத்ரியின் மகாத்மியமும் நூபுரகங்கையின் சிறப்பும் பேசப்படுகின்றன எனலாம்.

வாராஹ புராணத்தில்:

இறைவன் மண்டூக மாமுனிக்கு அருள் பாலித்த நிலையும், இம்மலையின் பெருமையும் இங்குள்ள தீர்த்தங்களின் பெருமையும் பேசப்படுகின்றன.

ஆக்னேய புராணத்தில்:

அர்ச்சுனன் தீர்த்தயாத்திரை செல்லுங்கால், இம்மலையில் வந்து தீர்த்தமாடியதாகக் குறிப்பு உள்ளது.

ஹாலாஸ்ய மகாத்மியம்:

இந்நூலில் 35-வது அத்தியாத்தில் வரிகள் 19 முதல் 57 வரையுள்ள செய்யுளில் அழகரின் பெருமை, சுந்தரராஜரின் திருவருள், நூபுர கங்கையின் தீர்த்தச் சிறப்பு முதலானவை பேசப்படுகின்றன.

வில்லிபுத்தூர் ஸ்தல புராணத்தில்:

மண்டூக மாமுனி நூபுரகங்கைக் கரையில் துருவாசரின் சாபத்திற்கு இலக்கான செய்தி பேசப்படுகின்றது. இதிலும் இம்மலை, தீர்த்தம், மூர்த்தியின் சிறப்புகள் பேசப்படுகின்றன.

ஜகந்நாத மகாத்மியம்:

இந்நூலின் ஐந்தாவது அதிகாரத்தில் விருஷபாத்ரியின் சிறப்பு, இங்குள்ள தீர்த்தம், சோலைமலை பிரானின் சிறப்பு முதலானவை கூறப்படுகின்றன.

ஸ்ரீசனத் குமார சம்ஹிதை:

இது ஸ்ரீசத்யகிரி மகாத்மியம் என்று அழைக்கப் பெறும். இதில் நான்காவது அதிகாரத்தில் மலை, இறைவன், தீர்த்தம் முதலியவற்றின் சிறப்புகள் பேசப்படுகின்றன.

பிரம்மசம்ஹிதை:

இதிலும் இம்மலை மூர்த்தி, தீர்த்தம் முதலியவற்றின் சிறப்பு பேசப்படுகின்றன.

ஸ்கந்தபுராணம்:

இதில் 34- ஆவது அதிகாரத்தில் மலை, தீர்த்தம், மூர்த்தி சிறப்புக்கள் பேசப்பட்டுள்ளன.

பழநி ஸ்தல புராணத்தில்:

இம்மலை சோலைமலை என்று அழைக்கப்படுகின்றது. 23 வது பாடலில்

"கண்ணோ ராயிரம் மேற்கொடு காண்பதரிதாம் எம்

மண்ணாரை யிலுதித்த கண்ணர் இரண்டுடையோன்
விண்ணாறாத கார் மேனியன் வீற்றிருப்பது பூந்
தண்ணொருவுமிழ் பழமுதிர் சோலை வேதண்டம்"

என்ற பாடல் வாயிலாகக் கார்மேனியன் கட்டழகைக் காண்பதற்கு ஆயிரங்கண் போதாது என்பது நயமாகக் கூறப்பட்டுள்ளது.

சிலர் ஒரே மலையில் எங்ஙனம் முருகனும், மாலும் இருக்க முடியும் என்று ஐயுறுவர். பி.டி.சீனிவாச சாஸ்திரி இம்மலை முருகனுக்கே உரியது என்பார். இதற்கு முனைவர் இரா.நாகசாமி பின்வருமாறு பதில் கூறுகிறார்.

இப்பாடல்கள் பாடப்பட்ட காலம் எம்மதமும் சம்மதம் என்று வாழ்ந்த காலம்.

ஒரு மலையில் ஒரு தெய்வந்தான் இருக்க வேண்டும் என்ற நியதி அன்று இல்லை. பல சமயத்தினரும் ஒரே மலையில் பல பகுதிகளைத் தேர்ந்தெடுத்துத் தங்கள் தங்கள் தெய்வத்தைத் தொழுததற்குச் சான்றுகள் பல உண்டு. திருப்பரங்குன்றத்தில் ஒரே காலத்தில் முருக வழிபாடு இருந்துள்ளது. சமணர்களும் வழிபட்டுள்ளனர். சிவன், துர்க்கை, முருகன், கணபதி, திருமால் முதலான ஐந்து தெய்வங்களுக்கும் கோயில் எடுத்து வழிபட்டுள்ளனர். இத்தகு வழிபாட்டு நிலை அன்றைய மக்களின் சமயப்பொறையை நமக்குக் காட்டுகின்றது. ஆனைமலையில் சமணம், வைணவம், கௌமாரம் முதலான மூன்றும் ஒரே காலத்தில் தழைத்தோங்கியிருந்தற்குச் சான்றுகள் உள்ளன. அவ்வாறே ஆனைமலைக்கு அருகில் உள்ள அழகர்மலையிலும் சமணம், கௌமாரம், வைணவம் மூன்றும் திகழ்ந்தன எனலாம்.

3 கோயில் அமைப்பு

வைகானச ஆகமப்படி அழகர்கோயில் அமைக்கப்பட்டுள்ளது.

முதல் திருச்சுற்றும் மூலவரும்:

திருமாலிருஞ் சோலைமலையில் அமைந்துள்ள முதல் திருச்சுற்று "நங்கள் குன்றம்" என்று, நம்மாழ்வாரின் (ஏழாம் திருவாய்மொழி-பத்தாம் பத்து) பாசுரப் பெயரில் அமைந்துள்ளது. உண்ணாழிக்குள்ளே அமைந்த மிகக் குறுகலான இத்திருச்சுற்று வட்டமாக அமைந்துள்ளது.

மூலவரும் தேவியரும்:

பிரணவ வடிவில் வட்டமாய் அமைந்த இந்தத் திருச்சுற்றினுள்ளே கல்வெட்டு குறிப்பிடும் மூலவரான "திருமாலிருஞ் சோலை நின்றருளிய பரமசுவாமிகள்" ஸ்ரீதேவி, பூதேவியருடன் சக்கரம், சங்கு, வில், கதை, கத்தி என ஐந்து வகையான ஆயுதங்கள் ஏந்தி நின்ற நிலையில் காட்சி தருகின்றார்.

திருவல்லிக்கேணியில் உள்ள பார்த்தசாரதிப் பெருமானுக்கும் பஞ்ச ஆயுதங்கள் உள்ளன என்பது இங்கு ஒப்புநோக்கத் தக்க ஒன்றாகும். இங்குள்ள மூலவருக்குப் பிரயோகச் சக்கரம் அமைந்துள்ளதைப் போன்று, பரமேஸ்வரமங்களம், அரியம்பாக்கம் முதலான இடங்களிலுள்ள இறைவனுக்கும் பிரயோகச் சக்கரம் அமைந்துள்ளது.

இராமன் சீதையுடன் எழுந்தருளியது போன்று திருமாலிருஞ் சோலைமலையில் பரமசுவாமிகள் எழுந்தருளியுள்ளார் என்று ஆச்சார்ய நம்பிள்ளை கூறுவார். நம்மாழ்வார் இப்பரம சுவாமியின் சிறப்புகளைக் கீழ்வருமாறு கூறுகிறார்,

தேனே பாலே கன்னலே யமுதே திருமாலிருஞ் சோலைமலைக்
கோனேயாகி நின்றொழிந்தான் என்னை முற்றும் உயிருண்டே
(திருவாய்மொழி 7: 10-2)

இங்குள்ள மூலவர் சிலா - சுதத்தால் (கல் + சுதை) ஆனவர். இவருக்கு மூன்று ஆண்டுகட்கு ஒருமுறை தைலக்காப்பு நிகழும். இந்தத் தைலம் அசல் சாம்பிராணி, சந்தனக் கட்டையால் ஆனது. இவர் தம் அருகில் உள்ள ஸ்ரீதேவியும், பூதேவியும் இருகரங்களுடன் முறையே லோல ஹஸ்தம் தாமரையுடனும், நீலோற்பவம் லோல ஹஸ்தத்துடனும் இருபுறமும் நின்ற கோலத்தில் உள்ளனர். இம்மூலவருக்கு முன்பு அர்த்தமண்டபத்தில் உள்ள உற்சவரே அழகர் என்றும் சுந்தரராஜர் என்றும் அழைக்கப்படுகின்றார்.

மூலவர் அமைந்துள்ள கருவறையில் தான் வேலைப் பாடமைந்த மூன்று கற்சாளரங்கள் உள்ளன. அடுத்துள்ள அர்த்தமண்டபத்தில் இரண்டு கற்சாளரங்கள் உள்ளன. இந்த அர்த்தமண்டபத்தில் உற்சவரான அழகர், ஸ்ரீதேவி, பூதேவியுடன் வைக்கக் கருங்கல் மேடை ஒன்று உள்ளது.

சோமச்சந்த விமானம்:

கருவறை மீதமைந்த விமானத்தின் அடிப்பகுதி உபானம், பத்ம ஜகதி, குமுதம், யாளி வரியுடன் அமைந்துள்ளது. இதன் மேற்பகுதியில் அமைந்துள்ள பூதவரியும் குறிக்கத் தக்கது. அதற்கு மேலுள்ள பகுதி பத்மஜகதி விருத்த குமுதம், கண்டம்

ஆகியவற்றுடன் அமைந்துள்ளது. கீழிருந்து மேல் வரை இந்த விமானம் முற்றிலும் வட்டமான வேசர அமைப்பு ஆகும்.

பிற மூன்று பக்கங்களில் திருமால் சங்கு சக்கரத்துடன் நின்ற வண்ணம் உள்ளார். இதை சோமச்சந்த விமானம் என்கின்றனர். இந்த விமானத்திற்குப் பிற்காலப் பாண்டிய மன்னர்கள் பொன் வேய்ந்துள்ளனர்.

இரண்டாம் திருச்சுற்று:

இந்த இரண்டாம் திருச்சுற்றில் அர்த்தமண்டபமும், மகாமண்டபமும் அமைந்துள்ளன. அர்த்தமண்டபத்தில் உள்ள யாளி வரி குறிக்கத்தக்க அழகுடன் உள்ளது. இந்த மண்டபம் உபானம், ஜகதி, குமுதம், பட்டிகை எனும் அமைப்பில் உள்ளது. மகாமண்டபம் முனையதரையன் என்பவனால் கட்டப்பட்டது. இது முனையதரையன் மண்டபம் என்று இன்றளவும் அழைக்கப்படுகின்றது. இது கல்வெட்டில் அலங்கார மண்டபம் என்றழைக்கப்படுகிறது. இந்த முனையதரையன் மண்டபத்தில் சிம்மத் தூண்கள் 10 உள்ளன. இத்தூண்களின் போதிகைகளின் அமைப்பு தாமரை மொட்டுப் போன்று அமைந்துள்ளன. இம்மண்டபத்திற்கான வாயில் ஆர்யன் வாயில் எனப்படுகிறது.

சேத்ரபாலர் சன்னதி:

முனையதரையன் மண்டபத்தின் வடபுறம் இந்தச் சன்னதி அமைந்துள்ளது. இது வைகானச் ஆகமப்படி 7-வது திருச்சுற்று மாளிகையில் இருக்க வேண்டும். இந்த சேத்ரபாலர் நீளமான கோரைப் பற்களுடனும், நாய் வாகனத்துடனும் காட்சி தருகிறார். இங்கு விபூதி பிரசாதமாகக் கொடுக்கப்படுகின்றது.

வலம்புரி விநாயகர் சன்னதி:

இந்தச் சன்னதி முனையதரையன் மண்டபத்தின் தென்புறம் உள்ளது. இவரது தும்பிக்கை வலப்பக்கம் அமைந்துள்ளது.

இந்த விநாயகருக்கு ஒவ்வோர் ஆண்டும் விநாயக சதுர்த்தி அன்று நூபுரகங்கை நீரால் திருமஞ்சனம் ஆகி, சிறப்பு வழிபாடு நிகழும். இங்கும் விபூதி பிரசாதமாகக் கொடுக்கப்படுகின்றது.

தென்புறம் பள்ளியறை நாச்சியார் சன்னதியும் வடபுறம் ஸ்ரீநிவாசர் சன்னதியும் உள்ளன. இவை தற்காலத்தில் கட்டப்பட்டவை. இத்திருச்சுற்றில் விஸ்வக்ஷேனர் ஜெயதேவியுடன் உள்ள ஆலயமும் உள்ளது.

இத்திருச்சுற்றின் காலம்:

இந்தச் திருச்சுற்றின் வெளிப்புறம் காணப்படும் கல்வெட்டுகளில் பழமையானது ஜடாவர்மன் முதலாம் குலசேகரன் காலத்தது. இவனது கல்வெட்டுகளே இப்பிரகாரத்தில் பழமையானதும், அதிகமானதும் ஆகும். எனவே இம்மன்னனின் காலமான கி.பி.1190-1216 ல் அல்லது அதற்குச் சற்று முன்பு இது கட்டப் பெற்றிருக்க வேண்டும்.

மூன்றாம் பிரகாரம்:

ஆர்யன் வாயில் எனப்படும் இந்த மூன்றாம் பிரகாரத்தில் பின்வரும் சன்னதிகள் அமைந்தள்ளன. 1) ஆழ்வார்கள் சன்னதி, (2) கல்யாண சுந்தரவல்லித் தாயார் சன்னதி, (3) சுதர்சனர் சன்னதி, (4) யோக நரசிம்மர் சன்னதி, (5) சிறிய அளவில் நாகர் சன்னதி, (6) ஆண்டாள் சன்னதி, (7) விஸ்வரூப கிருஷ்ணன் சன்னதி, (8) சரஸ்வதி சன்னதி, (9) தசாவதார சன்னதி,

(10) மேட்டுக் கிருஷ்ணன் கோயில், மேலும் (1) பூவராகர் சன்னதி, (2) லட்சுமி நரசிம்மர் சன்னதி, (3) லட்சுமி நாராயணர் சன்னதி, (4) கோதை இரங்கமன்னார் சன்னதி, (5) பார்த்த சாரதி சன்னதி ஆகிய சிறு சன்னதிகளும் உள்ளன.

1) ஆழ்வார்கள் சன்னதி:

இது ஆச்சார்யர்களின் சன்னதி என்றும் வழங்கப் பெறும். இங்கு பேயாழ்வார், பூதத்தாழ்வார், பொய்கை ஆழ்வார், திருமழிசை ஆழ்வார், மதுரகவி ஆழ்வார், குலசேகர ஆழ்வார், பெரியாழ்வார், நம்மாழ்வார், தொண்டரடிப்பொடி ஆழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கை ஆழ்வார், மணவாள மாமுனிகள், கூரத்தாழ்வார், இராமானுசர் ஆகியோர் வீற்றிருக்கின்றனர்.

2) கல்யாண சுந்தரவல்லித் தாயார் சன்னதி:

இச்சன்னதி உண்ணாழிகை, அர்த்தமண்டபம், மகா மண்டபத்துடன் கூடியது. மகாமண்டபத்தில் வெள்ளிக்கிழமை கொறடு எனப்படும் மரத்தாலான ஊஞ்சல் மண்டபம் உள்ளது. இந்த ஊஞ்சல் மர மண்டபத்தின் மேல் இறக்கையுடன் கூடிய தேவ கன்னிகளின் உருவங்கள் இருப்பதால் மண்டபம் கி.பி.19 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதலாம்.

3) சுதர்சனர் சன்னதி:

கிழக்கு நோக்கிய வாயிலுடன் உண்ணாழி, அர்த்த மண்டபம், மகாமண்டபத்துடன், வேசர விமானமாக அமைந்துள்ளது. பத்ம ஜகதி, விருத்த குமுதம், கண்டம், கபோதத்துடன் இதனது அதிட்டானம் விளங்குகின்றது. கட்டடக்கலையமைதி கொண்டு இதனை கி.பி.14, 15 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதலாம்.

4) யோக நரசிம்மர் சன்னதி:

மூன்றாம் பிரகாரத்தின் மேற்குப்புறம் அமைந்துள்ளது. இறைவன் ஜ்வாலா நரசிம்மர் என்றும் உக்கிர நரசிம்மர் என்றும் அழைக்கப்படுகின்றார். இவர் ஜ்வாலா மகுடம் அணிந்து யோகப்பட்டம் தரித்துக் காட்சி தருகின்றார்.

5) ஆண்டாள் சன்னதி:

ஆண்டாள் சன்னதி கருவறை, அர்த்தமண்டபம், மகா மண்டபத்துடன் அமைந்துள்ளது. விமானம் வேசர அமைப்புடையது. அதிட்டானம் பத்மஜகதி முப்பட்டைக் குமுதம், கண்டம் கபோதத்துடன் அமைந்துள்ளது. இச்சன்னதி கி.பி.15-16 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

6) குழலூதும் பிள்ளை சன்னதி:

இந்த சன்னதி பிற்காலத்தில் ஏற்பட்டது. இச்சன்னதியில் குழலூதும் பிள்ளையும், இவர் தம் வலப்புறமும், இடப்புறமும் ருக்மிணி சத்யபாமாவும் உள்ளனர். ருக்மிணிக்கு அருகில் சுதபஸ் என்னும் முனிவர் இருக்கிறார். சத்யபாமாவுக்கு அருகில் உறயக்ரீவர் நிற்கின்றார். இச்சன்னதி தெற்கு நோக்கி உள்ளது.

7) அஷ்டபுஜ கிருஷ்ணன் சன்னதி:

காலத்தால் பிற்பட்டது. இங்கு அஷ்டபுஜ கிருஷ்ணன் எட்டுக் கரங்களுடன் உள்ளதால் இதனை விஸ்வரூப கிருஷ்ணன் சன்னதி என வழங்குவர். 8 கரங்களில் சங்கு, சக்கரம், குமுதம், கத்தி, கேடயம், அம்பு, வில்லுடன் விளங்குகிறார்.

மேலும் சரஸ்வதி சன்னதியும், தசாவதார சன்னதியும் இங்கு உள்ளன. சரஸ்வதி மேற்கு நோக்கி அமர்ந்துள்ளாள். இம்மூன்றாம் திருச்சுற்றில் தான் திருமடைப் பள்ளி

அமைந்துள்ளது.

யாகசாலை:

இத்திருச்சுற்றில் உள்ள யாகசாலை திருமலை நாயக்கர் காலத்தில் கட்டப் பெற்றிருக்க வேண்டும். ஏனெனில் யாகசாலையில் உள்ள தூண் சிற்பங்கள் திருமலை நாயக்கர் உருவத்தை ஒத்துள்ளன.

திருச்சுற்றின் காலம்:

இந்தத் திருச்சுற்றில் காணப்படும் கல்வெட்டுகளில் ஜடாவர்மன் குலசேகரனின் காலத்துக் கல்வெட்டுகளே பழமையானவை. இத்திருச்சுற்றின் உள்ளும் புறமும் இவனது கல்வெட்டுகள் சுமார் 8–க்கு மேல் உள்ளன.

மூன்றாம் திருச்சுற்றின் திருப்பணியாளர் திருமலை:

பொதுவாகப் பெரும்பாலும் திருமலை நாயக்கர் கட்டிய பகுதிகளில் எல்லாம் அவர்தம் உருவச் சிலையை வைத்தல் அவர் மரபாகும். மூன்றாம் திருச்சுற்றில் நான்கு இடங்களில் இவர் தம் உருவச் சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. மூன்றாம் திருச்சுற்றில் உள்ள யாகசாலை திருப்பள்ளியறை முதலானவை இவர் காலத்தில் கட்டப்பட்டன எனலாம். ஏனைய பகுதிகள் இவர் தம் காலத்தில் திருப்பணி செய்யப்பட்டன எனலாம்.

த்வஜஸ்தம்பம், பலிபீடம்:

இந்த மூன்றாம் திருச்சுற்றிலேயே த்வஜ ஸ்தம்பம், பலிபீடம் அமைந்துள்ளன. இங்குள்ள த்வஜ ஸ்தம்பம் முழுவதும் பொன்தகடு போர்த்தப்பட்டுள்ளது. இதன் முன்பு அமைந்துள்ள பலிபீடம் மிக உயரமானது. இது பிற்காலத்தில் அமைக்கப்பட்டது போல் உள்ளது.

ஆர்யன்மண்டபம் அல்லது சுந்தரபாண்டியன் மண்டபம்:

இந்த மண்டபத்தின் கட்டடக் கலை அமைப்பு சோழ பாண்டியர் தம் சிறப்பான கலை அமைப்பாகும்.

இம்மண்டபத்தில் உள்ள பழைய கல்வெட்டு சுந்தர சோழ பாண்டியன் (முதலாம் வீரராஜேந்திரன்) கல்வெட்டாகும். இவனது பெயராலேயே எல்லாக் கல்வெட்டுக் குறிப்புகளும் இம்மண்டபத்தை “சுந்தர பாண்டியன் மண்டபம்” என்று அழைக்கின்றன. இதன் காலம் கி.பி.11 –ன் இறுதிப் பகுதி எனலாம்.

இம்மண்டபத்தில் கி.பி.14 ஆம் நூற்றாண்டில் திருப்பணி நடந்துள்ளது. இத்திருப்பணியினைச் செய்தவர் தம் உருவம், சுந்தர பாண்டியன் மண்டபத்தில் தெற்குப்புறம் அமைந்துள்ள வாயிலில் உள்ள தூணில் உள்ளது.

சுந்தரபாண்டியன் மண்டபக் கட்டடக் கலை அமைப்பு:

இந்த சுந்தர பாண்டியன் மண்டபத்தின் கட்டடக் கலை அமைப்பு தென்னகக் கட்டடக் கலை வரலாற்றில் குறிப்பிடத் தக்க ஒன்றாகும். இக்கோயிலின் கட்டடக் கலை பற்றி இதுவரை யாரும் குறிக்கவில்லை.

உபானம்:

உபானத்தில் பத்மம் அமைந்துள்ளது. அதற்கடுத்தது கண்டம், கபோதம் இம்மூன்று பகுதிகளும் நல்ல உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

உபானத்திற்கு மேல் பத்ம ஜகதி, விருத்த குமுதம், யாளி வரியும், இதற்கு மேல் அலங்காரமான ஒரே கல்லில் செய்யப் பெற்ற 18 தூண்களும் குறிக்கத் தக்கன.

சிறப்பிடம் பெறும் இரு தூண்கள் :

சுந்தர பாண்டியன் மண்டபத்தில் வடக்குப்புறமும், தெற்குப் புறமும் அமைந்த இரு தூண்கள் குறிக்கத்தக்கன. இரு திசையிலும் ஒரே கல்லில் அமைக்கப்பட்ட 18 சிறு தூண்கள் உள்ளன. இரு திசையிலும் அமைந்துள்ள தூண்களின் மேல் நிலையில் சிம்மங்கள் அமைந்துள்ளன.

தென்புறம் அமைந்துள்ள சிம்மத்தின் வாயில் ஒரு கல்பந்து உருண்டு கொண்டிருக்கின்றது.

இந்த இரு திசையிலும் அமைந்துள்ள தூண்களின் கீழ்ப்பகுதியில் நான்கு புறத்திலும் பக்கத்திற்கு 4 சிம்மங்கள் வீதம் ஒவ்வொரு தூண்களின் அடிப்பகுதியிலும் 16 சிம்மங்கள் உள்ளன.

குந்து சிம்மத் தூண்கள் நான்கு. குந்து சிம்மத் தூண்களின் மேலே 8 பட்டைத் தூண் உள்ளது. இந்தக் தூணின் மேலே உள்ள குடம், தாமரை ஆகியன கட்டடக் கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டு எனலாம்.

மேலும் போதிகையின் அமைப்பு குறிக்கத் தக்க ஒன்றாகும். கவிழ்ந்து தொங்கும் தண்டோடு கூடிய தாமரை மலர் போலும் அமைந்துள்ளன. இங்குள்ள தூண்கள் 4, 8, 10, 12 பட்டைகளுடன் காட்சி தருகின்றன. அரை வட்ட வடிவத் தூண்களில் உள்ள சுப்பரமணியர் நரசிம்மர் உருவங்கள் குறிக்கத் தக்கன.

இந்த மண்டபத்தின் விதானங்கள் மரவேலைப்பாடு போல் அமைக்கப்பட்டுள்ளன.

கருடாழ்வார் சன்னதி:

இச்சுந்தர பாண்டியன் மண்டபத்தில் உள்ள மரமண்டபத்தின் முன்பு, வட்ட வடிவமான அமைப்பில் கருடன் சன்னதி

உள்ளது. இச்சுந்தர பாண்டியன் மண்டபத்தில் பரிவட்ட அறை, திருமாலை கட்டும் அறை ஆகியன உள்ளது.

மேட்டுக் கிருஷ்ணன் கோயில் அல்லது கோயில் பொன் வேய்ந்த பெருமாள் மண்டபம் :

இந்த மண்டபம் இன்று மேட்டுக் கிருஷ்ணன் கோயில் என்று வழங்குகின்றது. இன்று இதன் ஒரு பகுதி கிராம மக்கள் அழகருக்காகக் கொண்டுவரும் தானியங்களின் சேமிப்பு இடமாக உள்ளது. இது முதலாம் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் கட்டப்பட்டது. இம் மண்டபத்தின் முப்பட்டைக் குமுதத்திற்கும், ஜகதிக்கும் இடையில் அமைந்துள்ள இவனது அரசமுத்திரைகளான சாமரம், விளக்கு, மீன், செண்டு, மீன், விளக்கு, சாமரம் ஆகிய ஏழும் வரிசையாக அமைந்துள்ளன. இதற்கருகில் உள்ள இவனது கல்வெட்டுக் குறிப்பு இவன் காலத்தில் இந்த மண்டபம் கட்டப்பட்டது என்பதனைப் பறைசாற்றுகின்றது

மண்டபத்தின் கட்டடக் கலை அமைப்பு:

இந்த மண்டபத்தின் அடிப்பகுதிக் கட்டடக்கலை அமைப்பு நாம் முன்பு பார்த்த சுந்தரபாண்டியன் மண்டபக் கட்டடக் கலை அமைப்புப் போல் உள்ளது. உபானம், கண்டம், கபோதம், முப்பட்டைக் குமுதம், பத்ம ஜகதி, கண்டம், முப்பட்டைக் குமுதம், இவ்வாறு இதன் கட்டடக்கலை அமைப்பு இருமுறை மாறி மாறி வருகிறது. விதானங்கள், கல் சட்டங்கள், கல்விட்டங்கள் போன்றவை சுந்தரபாண்டியன் மண்டபத்தைப் போல் உள்ளன.

இங்கு ரெங்கமன்னார், ஆண்டாள் உருவங்கள் உள்ளன. இந்த மண்டபம் இப்பொழுது மேட்டுக் கிருஷ்ணன் கோயில் என்று வழங்கப்படுகின்றது.

நான்காம் திருச்சுற்று:

நான்காம் திருச்சுற்றின் தென்புறம் அனுமார் சன்னதி, கிருஷ்ணன் சன்னதி, இராமானுஜர் சன்னதி, இராமானுஜர் கூடம் முதலானவை அமைந்துள்ளன. சேஷ வாகன மண்டபம் தென்புறம் அமைந்துள்ளது. மேலும் தென்புறம் கணக்கர் அறையும் உள்ளது.

இத்திருச்சுற்றின் வடபுறம் சிம்மவாகன மண்டபம், இராமர் சன்னதி திருக்கோயில் அலுவலகம், சிவராமய்யர் கட்டளை, இராமர் தான்யக் கொட்டாரம், லட்சுமணர் தானியக் கொட்டாரம் ஆகியன அமைந்துள்ளன. இத்திருச்சுற்றின் பின்புறம் அழகிய மணவாளன் கிணறு அமைந்துள்ளது.

நான்காம் திருச்சுற்றின் வடபுறம் மார்கழித் திருநாள் மண்டபம் அமைந்துள்ளது.

கல்யாண மண்டபம்:

விஜய நகர மன்னர்களின் பிரதிநிதிகளான நாயக்கர்களால் கட்டப் பெற்ற கல்யாண மண்டபம் இது. இதில் சிம்மத் தூண்கள் 20 உள்ளன. இதில் யாளிகள் வாயினைப் பிளந்த நிலையில் அமைந்துள்ள தூண்கள் 10 உள்ளன.

கட்டடக் கலை அமைப்பு:

உபானம், பத்மஜகதி, விருத்தகுமுதம், கண்டம், கபோதத்துடன் இதன் கட்டடக்கலை அமைந்துள்ளது. இந்த மண்டபத்தில் அமைந்துள்ள மரமண்டபம் கீழ்க்காணும் கட்டடக் கலை அமைப்புடன் உள்ளது. உபானம், பத்மஜகதி, முப்பட்டைக் குமுதம், கண்டம், கபோதம் முதலியவற்றுடன் அமைந்தள்ளது. மேலும் கோடைத் திருநாள் மண்டபம், உரியடி மண்டபம், யதிராஜன் முற்றம் முதலானவையும் நான்காம் திருச்சுற்றில் அமைந்துள்ளன.

ஐந்தாம் திருச்சுற்று:

ஐந்தாம் திருச்சுற்றில் இராஜகோபுரம் அமைந்துள்ளது.

இக்கோபுரத்தின் வாயிலில் பதினெட்டாம் படி சன்னதி உள்ளது. இவர் சுந்தரராஜருக்கு அடுத்த சிறப்பினைப் பெறுகிறார். அர்த்தஜாம வழிபாடு பதினெட்டாம் படி சன்னதியில் பட்டரால் நிகழ்த்தப் பெறுகின்றது. இவர் அழகரின் காவல் தெய்வமாவார். இத்தெய்வத்திற்கு ஒவ்வொரு வருடமும் ஆடி மாதம் சிறப்பு வழிபாடு நிகழும். பதினெட்டாம் படிக் கோபுரத்தின் கதவுகளையே தெய்வமாக எண்ணி, அவற்றின் மீது சந்தனத்தினை அப்பி, இங்குள்ள மக்கள் வழிபடுகின்றனர். இந்தப் பதினெட்டுப் படிக் கருப்பர்களும் மலையாள தேசத்திலிருந்து வந்த சித்தர்கள் என்பர். இவர்கள் அழகரைக் களவாட வந்தனராம். பின்பு அவர் தம் அழகில் மயங்கி வேறு யாரும் அழகரை எடுத்துச் செல்லா வண்ணம் இராஜ கோபுரத்தின் வாயிலில் இருந்து அழகரையும், அவர் தம் உடைமைகளையும் காத்து வருகின்றனர் என்று கூறப்படுகிறது. (படம் 4,5)

பதினெட்டாம் படியானின் சிறப்பு:

இவர் முன்பு எவரும் பொய் கூற அஞ்சுவர். மதுரை மாவட்டத்திலுள்ள ஒரு சில விசித்திரமான வழக்குகள் இவர் தம் முன்பேசி தீர்க்கப்படுகின்றன. இன்றும் இது நடந்து வருகின்றது. இவர் முன்பு சத்தியம் செய்ய பயப்படுவர்.

ஐந்தாம் திருச்சுற்றின் தென் பகுதியில் சதிரிளமடவார் சன்னதி அமைந்துள்ளது. வசந்த அக்ரஹாரமும், வசந்த மண்டபமும், இந்தச் திருச்சுற்றில் தான் அமைந்துள்ளன.

ஆறாம் திருச்சுற்றில் உள்ள திருமலை நாயக்கர் மண்டபம்:

ஆறாம் திருச்சுற்று, இரண்யன் கோட்டையை அடுத்து அமைந்துள்ளது. இங்குள்ள திருமலை நாயக்கர் மண்டபம்

குறிக்கத் தக்கது. இந்தத் திருமண்டபம் பத்மஜகதி, முப்பட்டைக் குமுதம், கண்டம், கபோதத்துடன் கூடியது. இத்திரு மண்டபத்தில் 18 சிம்மத்தூண்கள் உள்ளன. இந்த மண்டபத்தில் உள்ள கொடுங்கைகள் குறிக்கத் தக்கன ஆகும். இம்மண்டபம் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின்கீழ் பாதுகாக்கப்பட்ட சின்னமாகப் பாதுகாக்கப்படுகின்றது.(படம்

திருமாலிருஞ்சோலை இராக்காயி அம்மன்:

இந்த இராக்காயி அம்மன் வைகானச ஆகமத்தில் பரிவார தேவதையாகக் குறிக்கப் பெற்றுள்ளாள். இந்த ஆகமப்படி இவள் மலையின் வடமேற்கே அமைந்துள்ளாள். சுந்தர ராஜருக்கும், 18 ஆம் படிக்கும் அடுத்து இராக்காயி அம்மன் புகழப் பெறுகிறாள். இவளுக்கு அமாவாசை நாள்களில் சிறப்பு வழிபாடு நிகழும். இராக்காயி அம்மனின் கீழ்ப்புறம் இருந்து தான் சிலம்பாறு வருகின்றது. இவள் இம்மலையின் அதிதேவதையாகக் கருதப்படுகிறாள். இவளது தீர்த்தத்தில் குளித்தால், தீராத வினைகள் தீரும் என்று மக்கள் நம்புகின்றனர். (படம் –7)

மாதவி மண்டபம்:

இராக்காயி அம்மனின் கோயிலின் முன்பு மாதவி மண்டபம் அமைந்துள்ளது. இம்மண்டபம் நாயக்கர் காலத்தில் கட்டப்பட்டதாக இருக்கலாம். இராக்காயி அம்மனுக்கு இடதுபுறமுள்ள தூணில் முத்தியாலு நாயக்கரும் அவர்தம் சேனைத் தளபதிகளும் உள்ளனர். மாதவி மண்டபத்தின் வாயில் முகப்பின் தென்புறம் அமைந்துள்ள தூணிலும் முத்தியாலு நாயக்கரும், அவர்தம் தேவியரும் இராஜப் பிரதானிகளும் உள்ளனர். திருமலை நாயக்கர் மண்டபத்தில் உள்ள முத்தியாலு நாயக்கர் உருவம் போன்று இந்த உருவம் உள்ளதால்

இதனை முத்தியாலு நாயக்கர் என்று கருதலாம். இங்கு முத்தியாலு நாயக்கர் வடக்குப் பார்த்த வண்ணம் உள்ளார்.

மாதவி மண்டபத்தின் மேல் தோற்றம்:

மாதவி மண்டபத்தைச் சுற்றிலும் நான்கு புறமும் வானோக்கி வளர்ந்த மலை பசும் பட்டாடை போர்த்திக் காட்சி தருகின்றது. மாதவி மண்டபத்தின் மேல் மாடிக்குச் செல்லப் படிகள் உள்ளன. மேலே சென்று இயற்கையை ரசிக்கலாம்.

நூபுர கங்கை:

இதன் சிறப்புப் பற்றிப் பரிபாடல், நக்கீரரின் திருமுருகாற்றுப்படை, சிலம்பு, ஆழ்வார் தம் பாசுரங்கள், அத்தனையும் உரைக்கின்றன. எஞ்ஞான்றும் வற்றாத அன்னையின் அருள் போன்று இராக்காயி அன்னையின் பாதக்கமலங்களிலிருந்து இங்கு எப்போதும் நீர் சுரந்த வண்ணம் உள்ளது. இந்த தீர்த்தம் வடக்கு நோக்கி வந்து விழுந்த வண்ணம் உள்ளது.

நூபுரகங்கை பற்றிய பாசுரங்கள்:

"சிலம்பாறு பாயுந் தண் திருமாலிருஞ் சோலை"

"ஒட்டருந் தண் சிலம்பாறுடை மாலிருஞ் சோலையதே"

என்று பெரியாழ்வாரும்

"சந்தொடு காரகிலுஞ் சுமந்து தடங்கள் பொறாது
வந்திழியுஞ் சிலம்பாறு"

என்று ஆண்டாளும்

"சிலம்பாறுடைய திருமாலிருஞ் சோலை"

என்று திருமங்கையாழ்வாரும் கூறுவர்.

திருவேங்கடமுடையான் கோயில்:

அப்பன் திருப்பதியில் உள்ள திருவேங்கடமுடையான் கோயில் அழகர்தம் தெற்குப் படைவீடாகும்.

4 செப்புத் திருமேனிகள்

அதிர்குரல் சங்கத்து அழகர்தம் கோயிலில் உள்ள திருமேனிகளுள் சிலவற்றிற்கு ஆழ்வாராதிகளின் பாசுரப் பெயர்கள் விளங்குவது சிறப்பான செய்தியாகும். பாசுரப் பெயர்கள் பூண்ட இத்திருமேனிகள் ஏனைய திருமேனிகளைக் காட்டிலும் காலத்தால் முந்தியவை. வரலாற்றுப் புகழ் மிக்கவை. அமைப்பில் சிறந்தவை. மேலும் ஆழ்வார்தம் பாசுரப் பாடல்களையே நெஞ்சில் நிறுத்தி இச்செப்புத் திருமேனிகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும் எனக் கருதலாம். அவையாவன:

1) அழகப் பிரானார் (அல்லது) சுந்தரராஜப் பெருமாள், சுந்தரன் (அல்லது) சௌந்திரராஜப் பெருமாள்
2) சுந்தரத் தோளுடையான்
3) சோலைமலைக்கரசு
4) நலந்திகழ் நாரணன்
5) ஏறுதிருவுடையான்

இவற்றுடன் ஏனைய திருமேனிகளையும் சேர்த்து 48 திருமேனிகள் இக்கோயிலில் உள்ளன. அவற்றில் ஒன்று சொக்கத் தங்கத்தால் ஆனது என்பது குறிப்பிடத்தக்கது.

1)அழகப் பிரானார் (அல்லது) சுந்தரராஜப் பெருமாள்:

இத்திருமேனி ஈடு இணையற்ற அழகுடையது. இக்கோயிலுக்கு “அழகர் கோயில்” என்று பெயர் வருவதற்கு

இத்திருமேனியே அடிப்படைக் காரணம் என்று கூடக் கூறலாம். ஆண்டிற்கொருமுறை மதுரையில் உள்ள வைகை ஆற்றில் இறங்கிப் பாமரர் முதல் படித்தவர் வரை அனைவர் தம் கருத்திலும், பாட்டிலும், அழகர் வர்ணிப்புக்களிலும் நின்று நிலவுவது. இக்கோயிலில் நிகழும் திருவிழாக்கள் அனைத்திலும் கலந்து கொண்டு அழகுக்கு அழகு சேர்ப்பது.

உருவ அமைப்பு:

பத்ரபீடத்தின் மேலுள்ள பத்மாசனத்தில் கிரீட மகுடத்துடன், மகரக் குழையுடன் திருக்கோலம் பூண்டு நின்ற நிலை. நான்கு கரங்களில் மேலிரு கரங்கள் சங்கு, சக்கமுரம், கீழிரு கரங்கள் ஆகூய வரதமும் கதை மீதும் கொண்டும் அமைந்துள்ளன.

14 கற்றைக் குழல் முடிச் சுருள்கள் அவர் தம் சுந்தரத் தோளில் தவழ்கின்றன. இரு கைகளிலும் கேயூரங்கள், இரு முன் கைகளிலும் மூன்று மூன்று வளைகள். இடது தோளினின்று வலது இடுப்பினை வந்தடையும் யக்ஞோபவீதம், அவர் தம் உதரத்தை வலம் வரும் உதர பந்தம் எல்லாமே அவர் தம் அழகு மேனிக்கு மேன்மேலும் அழகு சேர்க்கின்றன.

கழுத்தில் உள்ள கண்டாபரணத்துடன் மற்றொரு மாலையும் அவர்தம் திருமார்பில் தவழ்கிறது. வலது மார்பில் ஸ்ரீவத்ஸம் நன்கு தெளிவுறக் காட்டப்பட்டுள்ளது. அரைஞாணும், கச்சையழகும் கண்டு களிக்கத் தக்கவை. இடுப்பிலிருந்து பாதம் வரை ஆடையுள்ளது. இருகால்களிலும் காப்புகள், சிலம்புகள் காணப்படுகின்றன. நம்மாழ்வார்

“முடிச் சோதியாய் உனது முகச் சோதி மலர்ந்ததுவோ!

அடிச் சோதி நீ நின்ற தாமரையாய்த் திகழ்ந்ததுவோ!
படிச் சோதி ஆடையொடும் பல்கலனாம் நின்பைம் பொன்
கடிச் சோதி கலந்ததுவோ! திருமாலே! கட்டுரையே"

என்று கூறிப் பின்பும், அவரது திருமேனி பற்றிக் கூறுங்கால்

"கட்டுரைக்கில் தாமரை நின் கண் பர்தம் கையொவ்வா
கட்டுரைத்த நன்பொன் உன்திருமேனியொளி யொவ்வாது"

என்று பாடிய பாடல்கள் தாம் இத்திருமேனி செய்தருளக் காரணமாயிற்றோ?

இப்பேரழகனின் உருவத்தில் திளைத்த பெரியாழ்வார்

"சக்கரமும் தடக்கைகளும் கண்களும் பீதகவாடையொடும்
செக்கர் நிறத்துச் சிவப்புடையாய்! திருமாலிருஞ்சோலை
எந்தாய்!" என்று பாடி,

"மற்றவர்க்கென்னைப் பேசலொட்டேன்
மாலிருஞ்சோலை எம்மாயற் கல்லால்" என்று

நாயகன் – நாயகி பாவத்தில் பலவாறு கருவறை நாயகனை மனமுருகப் பாடிய பாடல்கள் தான் இச்செப்புத்திருமேனிகளுக்கு எழில் கூட்டின போலும்.

ஆண்டாள் தான் பாடிய பாசுரங்களில் அழகப் பிரானார் என்றும், சுந்தரன் என்றும் பலவாறு சொல்லிப் போற்றி அவனைத் தழுவத் துடிப்பார்:

"அழகப் பிரானார் தம்மை என்னெஞ் சத்தகப் படத்
தழுவ நின்று என்னைத் தைத்துக் கொண்டு ஊற்றவும்
வல்லையே!"

என்று ஆண்டாளும் பாடியுள்ளமை அறிந்து இன்புறத் தக்கது.

ஸர்வாங்க ஸூந்தரர்:

முடிவாக இத்திருமேனி பற்றி உரைப்போமானால், இவ்வழகனின் அனைத்துறுப்புகளையும் ஒருங்கே யுரைக்கும்

கீழக்காணும் பாடலினைக் கூறி முடிக்கலாம்:

"குழலழகர்: கண்ணழகர்: வாயழகர்: தோளழகர்:
தாளழகர் கொப்பூழின் எழிலழகர்"

கலைஞன் அவரது இதழ்களிலே கம்பீரம் கலந்து இனிமையான புன்னகையைத் தவழ வைத்துள்ள பான்மையை நேரில் கண்டால் தான் அனுபவிக்க இயலும். இச்செப்புத்திருமேனி கி.பி.14,15 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. (படம் முன்பக்கம்)

2) சுந்தரத்தோளுடையான்:

இத்திருமேனியும் ஆண்டாளின் பாசுரத்தில் பயிலும் பெயரையே கொண்டு விளங்குகிறது.

தலையில் கீரிட மகுடம், செவிகளில் மேற்புறம் அமைந்த செவிப் பூக்கள்: மகரகுண்டலம் அணிந்து காணப்படுகின்றது. சிரச் சக்கரம் காணப்படுகின்றது. நான்கு கரங்களில் மேலிரு கரங்கள் சங்கு, சக்கரம் ஏந்தி, கீழிரு கரங்கள் வரதம், கடிஹஸ்தமாக அமைந்துள்ளன. யக்ஞோபவீதம் இடது தோளிலிருந்து வலது இடுப்பை வந்தடைகிறது. இவரது சுந்தரமார்பை இருவகை மாலைகள் அழகு செய்கின்றன. இத்திருமேனியில் வாகுமாலை, உதரபந்தம், கேயூரம் ஆகியன அழகு செய்கின்றன. இடையிலே அமைந்துள்ள கீர்த்திமுகக் கச்சு குறிக்கத்தக்க சிறப்பான அம்சமாகும். இடுப்பிலிருந்து கணுக்கால் வரை ஆடை அணிந்து, வலது காலில் வீரக்கழலும் கால்களில் சிலம்பும் அணிந்துள்ளார்.

கி.பி.12 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மணவாளதாசர் "திருவிளையாடு திண்தோள" என்றும் "அலங்காரன் சுந்தரத்தோளன்" என்றும் குறிப்பது மனதிற் கொள்ளத்தக்கது. இச்செப்புத் திருமேனியின் காலம் கி.பி.14, 15 ஆம் நூற்றாண்டு. (படம் –8)

3) நலந்திகழ் நாரணன் :

திருமங்கை மன்னன் பாசுரத்தில் வரும் பெயரால் விளங்கும் இத்திருமேனி வெள்ளியால் ஆகியது. நித்ய உற்சவத்தில் நிகழும் ஸ்ரீபலியில் கலந்து கொள்ளும் திருமேனி என்பது குறிப்பிடத்தக்கது. திருவாசியுடன் கூடிய பத்ர பீடத்தில் பத்மாசனத்தில் இத்திருமேனி நின்ற நிலையில் அமைந்துள்ளது. தலையிலே கிரீட மகுடமும், பின்புறம் சிரச் சக்கரமும் காட்டப்பட்டுள்ளன. காதுகளில் மகர குண்டலம், செவிப் பூக்கள், நான்கு கரங்களில் மேலிரு கரங்கள் சக்கரம், சங்கு ஏந்திக், கீழிரு கரங்கள் அபய வரத நிலையில் அமைந்துள்ளன. மார்பில் யக்ஞோபவீதம் உதர பந்தம், இடையிலே கச்சு, இடுப்பிலிருந்து கணுக்கால் வரை அமைந்த ஆடை என அனைத்தும் நலமுடன் திகழ்கின்றன.

"சிலம்பியாறுடைய திருமாலிருஞ் சோலை நின்ற
நலந்திகழ் நாரணனை நணுகுங்கொல்! என் நன்னுதலே"

என்று திருமங்கையாழ்வார் நாயகன் – நாயகி பாவத்தில் பாடியுள்ளார். இந்தப் பாடலில் வரும் நலந்திகழ் நாரணன் எனும் பெயர் தான் அழகிய திருமால் வடிவிற்கு இடப்பட்டு வழங்கப்படுகிறது. இதன் காலம் 14 –15 ஆம் நூற்றாண்டு. (படம் – 9)

4) ஏறுதிருவுடையான் :

பத்ர பீடத்தில் பத்மாசனத்தில் நின்ற நிலையில் உள்ள இத்திருமேனியும் வெள்ளியால் ஆனதே. இத்திருமேனியை விஷ்ணு என்றும், ஸ்ரீநிவாசன் என்றும் அழைக்கின்றனர். நான்கு கரங்களில் சக்கரம், சங்கு, மேலிரு கரங்களிலும் அபயம், வரதம் கீழிரு கரங்களிலும்

கொண்டுள்ளார். தலையில் கிரீட மகுடம். செவிகளின் மேலே செவிப் பூக்கள் அமைந்துள்ளன. காதுகளில் மகரக் குழை. மார்பிலே முத்து மாலை, தோள்களில் கேயூரங்கள், இடது தோளினின்று வலப்புறம் வந்து வீழும் யக்ஞோபவீதம், உதரபந்தம், இடையிலே அமைந்துள்ள இடைக்கச்சு, இடுப்பு முதல் பாதம் வரை அமைந்த ஆடை அனைத்தும் அழகுற வடிக்கப்பட்டுள்ளன. ஆண்டாள் பாடலில்

"நாறு நறும் பொழில் மாலிருஞ்சோலை நம்பிக்கு நான்
நூறு தடாவில் வெண்ணெய் வாய் நேர்ந்து பராவி
வைத்தேன்
நூறுதடா நிறைந்த அக்கார அடிசில் சொன்னேன்
ஏறுதிருவுடையான் இன்று வந்து இவை
கொள்ளுங்கொலோ"

என்று திருமால் போற்றப்பட்டுள்ளார். இப்பாடலில் வரும் ஏறு திருவுடையான் எனும் பெயரிலே செப்பத்திருமேனி அழைக்கப்படுவது சிறப்புடைத்து.

"அலங்காரன் சுந்தரத்தோளன் அழகன் அணி முடியில்
இளங்காரன் ஏறுதிருவுடையான்" என்று

மணவாளதாசர் குறிக்கின்றார். செப்புத்திருமேனியின் காலம் கி.பி.14, 15 ஆம் நூற்றாண்டு. (படம் –10)

5) சோலைமலைக்கரசர் :

பெரியாழ்வாரின் பாசுரப் பெயரில் அமைந்த இத்திருமேனி முற்றிலும் அபரஞ்சிதத் தங்கத்தால் ஆனது. இத்திருமேனி இப்பொழுது வழிபாட்டில் இல்லை. திருவாபரணக் கிடங்கில் உள்ளது. இத்திருமேனி சுமார் 10 அங்குல உயரமுடையது என்பதை பட்டர் வாயிலாக அறியப்பட்டது. இத்திருமேனியை சமஸ்கிருத புராணங்கள்

''விருஷாத்ரிகர்'' என்றும், ''விருஷபாத்ரி நாதர்'' என்றும் அழைக்கும்.

இத்திருமேனி வழிபாட்டில் இருந்த காலத்தில் இதற்குத் திருமஞ்சனமாகும் பொழுது நுபுரகங்கைத் தீர்த்தத்தால் தான் திருமஞ்சனமாட்டுவர்: வேறு தண்ணீர் கொண்டு நீராட்டினால் கருத்து விடுவாராம். இத்திருமேனியின் காலம் கி.பி.13-14 ஆம் நூற்றாண்டு. பாசுரப் பெயரில் அமைந்த ஐந்து திருமேனிகளில்

1) சுந்தரத் தோளுடையான், 2) ஏறுதிருவுடையான், 3) நலந்திகழ் நாரணன் ஆகிய இம்மூன்று திருமேனிகளின் வலது கையில் உள்ள சக்கரம் பிரயோக நிலையில் அமைந்துள்ளது சிறப்பாக குறிக்கத்தக்கது.

6) ஸ்ரீதேவி:

பத்ர பீடத்தில் பத்மாசனத்தில் உடலை வளைத்து தாமரை மலரை இடக்கரத்திலேந்தி வலக்கரத்தை தொங்குகரமாக்கி அழகனுக்கேற்ற அழகியாக திரிபங்க நிலையில் நின்றுள்ள இத்திருமேனி அழகப் பிரானார்க்கு வலப்பக்கம் உள்ளது. தேவியின் தலையினைக் கரண்ட மகுடம் அழகு செய்கிறது. செவிகளை மகரக் குழையும், செவிப்பூக்களும், அழகு செய்கின்றன.

தாமரை போல் கண்கள், தாமரை முகம், ஆசனமும் பத்மம், கையிலும் தாமரை, தாமரைப் பிரியையாக விளங்கும் இவளது தன்மையோடு கீழ்க்காணும் வடமொழிப் பாடல் நினைவு கூரத்தக்கது.

பத்மபிரியே பத்மினே
பத்ம ஹஸ்தே
பத்மாலயே

பத்மலாயதாக்ஷி

என்ற இப்பாடல் கூரத்தாழ்வார், இம்மலையில் உறையும் சுந்தரனைக் குறித்து இயற்றிய சுந்தர பாஹுஸ்தவத்தில் காணப்படுவது.

சுந்தரராஜர் செய்த காலத்தில் இத்திருமேனியும் செய்திருக்க வேண்டும். இத்திருமேனியின் முகத்தில் உள்ள பெண்மையின் மென்மையும் அதில் இழைந்தோடும் புன்சிரிப்பும், அணிகளின் வளமும் தங்கமெனப் பிரகாசிக்கும் அங்கங்களின் வனப்பும் குறிக்கத்தக்க ஒன்றாகும். தலையின் பின்புறம் ஸ்ரீசக்கரம் அமைந்துள்ளது.

இத்திருமேனியின் திருமார்பில் இரண்டுவித மாலைகள் அணி செய்கின்றன. மூங்கில் தோள்களில் கேயூரங்கள், முன் கைகளில் கங்கணம் குறிக்கத் தக்க ஒன்று. இடுப்பு முதல் கணுக்கால் வரை அழகு மலர்க் கொடியலங்காரம் அமைந்த ஆடை, இரு பாதங்களிலும் நுபுரங்கள். காலம் கி.பி.14 அல்லது 15 ஆம் நூற்றாண்டு. (படம் முன்பக்கம்)

7) பூதேவி:

இத்திருமேனி சுந்தரராஜருக்கு இடப்புறம் அமைந்துள்ளது. பத்ர பீடத்தில் பத்மாசனததில் திரிபங்க நிலையில் நின்ற கோலம், தலையில் கரண்ட மகுடம், காதுகளில் மகரக் குழை, விரிந்த செவிப் பூக்கள் ஆகியன அமைந்துள்ளன. இரண்டு கரங்களில் வலக்கரம் நீலோற்பலம் ஏந்தி இடக்கரம் லோலஹஸ்தத்தில் உள்ளது. பூமகளின் இப்படைப்பும் பாண்டிய நாட்டுக் கலைஞன் அழகுணர்ச்சிக்கு எடுக்காட்டாகும். (படம் முன்பக்கம்)

வெள்ளியால் ஆன ஸ்ரீதேவி,

பத்ர பீடத்தின் மேலுள்ள பத்மாசனத்தில் திரிபங்க நிலையில் அமைந்துள்ளது. இத்திருமேனி கரண்ட மகுடம், சிரச் சக்கரம் உள்ளது. காதுகளில் புஷ்ப குண்டலங்கள் செவிப் பூக்கள் காட்டப்பட்டுள்ளன. கழுத்திலே மாலை, குஜபந்தம் அமைந்துள்ளது. இரண்டு கரங்கள் லோலஹஸ்தத்திலும், தாமரை மலரேந்தியும் காணப்படுகின்றன. தோள்களில் வளைகள், கேயூரங்கள் அழகு செய்கின்றன. முன் கையினைக் கங்கணம் அலங்கரிக்கின்றது. ஆடையானது இடுப்பிலிருந்து கணுக்கால் வரை அமைந்துள்ளது. இதன் காலம் கி.பி.15 அல்லது 16 ஆம் நூற்றாண்டு.

வெள்ளியால் ஆன பூதேவி:

பத்ரபீடத்தின் மேலுள்ள பத்மாசனத்தில் திரிபங்க நிலையில் அமைந்துள்ளது. வலக்கரம் நீலோற்பலம் ஏந்தி இடக்கரம் லோலஹஸ்தத்தில் உள்ளது. தலையில் கரண்ட மகுடமும், சிரச் சக்கரமும் அமைந்துள்ளது. காதுகளில் மகரக் குழை, செவிப் பூக்கள் அழகு தருகின்றன. ஆடையமைப்பு இடையிலிருந்து கணுக்கால் வரை அமைந்துள்ள இத்திருமேனியில் நூபுரம் அமைந்த இணையடிகள் இரண்டும் குறிக்கத் தக்கன. இத்திருமேனியின் காலம் கி.பி.15 – 16 ஆம் நூற்றாண்டு எனலாம்.

இனி இங்கமைந்த ஏனைய கோயில்களில் உள்ள திருமேனிகள் பற்றிக் காண்போம்.

விஷ்வக்ஷேனர் :

பத்ர பீடத்தில் பத்மாசனத்தில் வலது காலை மடித்து இடக்காலைத் தொங்கவிட்டு அமர்ந்தநிலை. தலையிலே

கிரீட மகுடம், காதுகளில் மகரகுண்டலங்கள், தோள்களிலே கேயூரங்கள், இடது தோளினின்று வலது இடுப்பினை வந்தடையும் யக்ஞோபவீதம், வயிற்றில் தவழும் உதரபந்தம், வேலைப்பாடமைந்த இடையாடை அனைத்தும் குறிக்கத் தக்கவை. இரண்டு கரங்களில் ஆசுயமும் கட்யவலம்பிதமும் முத்திரைகளாகக் காட்டப்பட்டுள்ளன.

இவரது முதுகில் பன்னிரண்டு கற்றைக் குழல்கள் தவழ்கின்றன. தலையின் பின்புறம் ஸ்ரீசக்கரம் காட்டப்பட்டுள்ளது. இரு கால்களிலும் உள்ள சிலம்பும், இடக்காலில் உள்ள பாதக் குறடும் குறிக்கத் தக்கன. இத்திருமேனி கி.பி.15 ஆம் நூற்றாண்டினைச்சார்ந்தது. (படம் – 11)

ஜெயதேவி:

பத்ர பீடத்தின் மேலுள்ள பத்மாசனத்தில் காலினைக் குத்திட்டு இடது காலினை நிமிர்த்தி ஊன்றி அமர்ந்த நிலை. தலையில் கரண்ட மகுடம், காதுகளில் மகரக் குழைகள், இரண்டு கரங்களில் வலக்கரம் நீலோற்பலம் ஏந்தியும், இடக்கரம் தொடை மீதும் உள்ளன. இடுப்பிலிருந்து கணுக்கால் வரை ஆடை. இடது காலில் பாதக் குறடும் சிலம்பும் அணிந்து நமது சிந்தையைக் கவரும் வண்ணம் உள்ளது. இத்திருமேனியும் பாண்டிய நாட்டுக் கலைஞனின் கலாரசனை, கலையழகிற்கு நற்சான்று படைக்கும் திருமேனி. இத்திருமேனி கி.பி.15 – ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்டதெனலாம்.

கருடன் :

பத்ரபீடத்தில் பத்மாசத்தில் அஞ்சலி ஹஸ்தத்தில் நின்றநிலை. கரண்ட மகுடம், மகுடத்தின் கீழ் தலையைச் சுற்றி வரும் சர்ப்பம், சிரச்சக்கரம், காதுகளில் சர்ப்ப

குண்டலங்கள், செவிப் பூக்கள் ஆகியன குறிக்கத்தக்கன. கோரைப் பற்கள், மார்பில் இரு வகை மாலைகள் காட்டப்பட்டுள்ளன. சர்ப்ப யக்ஞோபவீதம் வலது, இடது இரு முன் கைகளிலும் படமெடுத்தாடும் பாம்பு வளைகள், இரண்டு தோள்களிலும் கேயூரங்கள், கேயூரத்தின் கீழ் புஜத்தைச் சுற்றிலும் படமெடுத்தாடும் பாம்பு குறிக்கத் தக்கது. இரு மணிக்கட்டிலும் கங்கணங்கள். இடையில் கச்சு, இடுப்பிலிருந்து முழங்கால் வரை ஆடை, வலது முழங்காலில் வீரக்கழல், இரு பாதங்களிலும் சிலம்பு, நடுவில் மூன்று மடிப்புமாகத் தவழ்கின்றன. கை நகங்கள், கால் நகங்கள் கூர்மையாக உள்ளன. கருடனின் அலகு மிகவும் கூர்மையாக உள்ளது. இத்தகைய அருமையான வேலைப்பாடமைந்த இச்செப்புத் திருமேனி, சுந்தர பாண்டியன் மண்டபத்தில், மூலவரைப் பார்த்த வண்ணம் வட்ட வடிவமான முறையில் அமைந்த மேற்கு நோக்கிய கருடாழ்வார் சந்நிதியில் உள்ளது. இதன் காலம் 15 அல்லது 16 ஆம் நூற்றாண்டு எனலாம்.

கல்யாண சுந்தரவல்லித் தாயார்:

பத்ர பீடத்தில் பத்மாசனத்தில் வலது காலை மேலே வைத்து இடது காலைக் கீழே வைத்து அமர்ந்த நிலை. தலையில் கரண்ட மகுடம், காதுகளில் பத்ர குண்டலங்கள், செவிகளில் செவிப் பூக்கள், திரு மார்பில் இரு மாலைகள், மார்புக் கச்சை, யக்ஞோபவீதம் அனைத்தும் அமைந்துள்ளன. இத்திருமேனிக்கு நான்கு கரங்கள். மேலிரு கரங்களில் தாமரை மலர்களேந்திக், கீழிரு கரங்கள் அபயவரதம் காட்டுகின்றன. கேயூரங்கள், தோள் வளைகள், முன் கைளில் கங்கணங்கள் அனைத்தும் அமைந்துள்ளன. இடுப்பிலிருந்து கணுக்கால் வரை ஆடையும்,

சீரடிகளில் சிலம்பும் காணப்படுகின்றன. இத்திருமேனி கி.பி.14 அல்லது 15 ஆம் நூற்றாண்டு எனலாம். இத்திருமேனி கல்யாண சுந்தர வல்லித் தாயார் சன்னதியில் உள்ளது.

விளக்கேந்திய வீரன்:

கல்யாண சுந்தரவல்லித் தாயாரின் சன்னதியில், அர்த்த மண்டபத்தை அடுத்துள்ள மகாமண்டபத்தில் அமைந்த திருமஞ்சனப் பாறையின் வடகிழக்கில் உள்ள மரப் பீடத்தில் விளக்கேந்திய வீரன் நின்ற நிலையில் உள்ளான். இது முற்றிலும் வெண்கலத்தால் ஆனது.

இச்சிலை கள்ளர் இனத்தவருள் தலைமைத் தன்மை பெற்ற அம்பலகாரர் உரு. மேனோக்கிய வளைந்த முறுக்கிய மீசை. இடப்புறம் சரிந்த கொண்டை நாயக்கர் காலத்தது போல் தோன்றுகிறது. நீண்ட மூக்கு, விரிந்தகன்ற விழிகள், தோளினைத் தொட்டுக் கொண்டிருக்கும் காதில் பெரிய வண்டிக் கடுக்கண்கள் (இக்காதணி, இப்பகுதியில் கள்ளர்க்கு உரிய சிறப்பு அணிகளுள் ஒன்று), நீண்ட மாலை நெஞ்சினைத் தொட்டுக் கொண்டுள்ளது. ஒவ்வொரு மணிக்கட்டிலும் ஒவ்வொரு கங்கணம், கைகளில் விளக்கேந்திய நிலை, அங்கவஸ்திரத்தை எடுத்து இடுப்பிலே கச்சையாகக் கட்டியுள்ளான். முழங்காலுக்கு கீழே வரை ஆடை உள்ளது.

சக்கரத்தாழ்வார் அல்லது சுதர்சனர்:

பத்ர பீடம் அமைப்பு: நீண்ட சதுரமான பத்ர பீடம். பீடத்தின் நான்கு புறங்களிலும் பக்கத்திற்கு இரண்டாக எட்டு நாகங்கள் காட்டப்பட்டுள்ளன.

சக்கரத்தாழ்வார் தோற்றம்:

இவரைச் சுற்றிலும் ஜவாலா மண்டலம்

காட்டப்பட்டுள்ளது. கோபக்கனல் முகத்தில் நர்த்தனமாடுகிறது. சண்டைக்குச் செல்லும் நிலையில் அமைந்துள்ளார். வடமொழியில் இதனை ''பிரத்யாலீடம்'' என்று அழைப்பர்.

ஜ்வாலை பிரபையுள், அஷ்டகோணத்தில் அமைந்த பஞ்சலோகத் தகடும் அதற்குள், மூன்றடுக்குத் தாமரை இதழ்களின் அமைப்பு, அதற்கும் உட்புறம் மூன்று வட்டவடிவமான அமைப்பு, அதற்குள் ஷட்கோண (ஆறுகோண) யந்திர அமைப்பு, ஆறுகோண யந்திரத்தின் மத்தியில் சக்கரத்தாழ்வார் சண்டைக்குச் செல்லுங் காட்சி அற்புதமாக அமைந்துள்ளது.

சுருண்ட கேசங்கள், கடைவாயின் ஓரங்களில் கோரைப் பற்கள், கோபாக்னியைத் தெரிவிக்கும் பான்மையில் நெற்றிக் கண் நன்கு தெளிவுற அமைந்துள்ளது. காதுகளில் மகர குண்டலங்கள், செவிப் பூக்கள். கழுத்தில் காறை, முத்துமாலை என இரு வகை மாலைகள் காணப்படுகின்றன. மார்பில் யக்ஞோபவீதம், வலது மார்பில் தெளிவுறத் திகழும் ஸ்ரீவத்ஸம் காணப்படுகிறது. சக்கரத்தாழ்வார் மார்பில் ஸ்ரீவத்ஸம் காணப்படுவது அரிது. உதரபந்தம் கொப்பூழுக்கு மேல் அமைந்தள்ளது.

இடது தோளிலிருந்து முழங்காலுக்குக் கீழ் வரை வளைந்து, வலது இடுப்பு வரை செல்லும் மணிமாலையும், அதன் அமைப்பும் பாண்டிய நாட்டுச் செப்புப் படிமத்தின் சிகரமாக விளங்குகிறது. சக்கரம், சங்கு, அங்குசம், குந்தம், ஈட்டி, வச்சிராயுதம், உலக்கை, கலப்பை, தாமரை, கதை, வில், அம்பு, கத்தி, கேடயம், வேல், திரிசூலம் என பதினாறு ஆயுதங்கள் காட்டப்பட்டுள்ளன. இடுப்பு

முதல் தொடை வரை இடையாடை அதிலே பூக்களின் அலங்காரம், வலக்காலில் வீரக்கழல், இரு பாதங்களிலும் பாதக்குறடு, பாதக் குறட்டிற்கு மேல் பாங்குறத் திகழும் சிலம்பு ஆகியன எழிலுறக் காட்டப்பட்டுள்ளன.

சக்கரத்தாழ்வார்க்குப் பின்புறம் வட்டமாக அமைந்துள்ள பஞ்சலோகத் தகட்டில் சமஸ்கிருத எழுத்தில் பல்வகை மந்திர ஸ்லோகங்கள் எழுதப்பட்டுள்ளன. இதன் காலம் கி.பி.14 அல்லது 15 ஆம் நூற்றாண்டு எனலாம்.

ஆண்டாள் :

பத்ர பீடத்தில் பத்மாசனத்தில் வலது காலை மடித்து இடது காலினைத் தொங்கவிட்டு அமர்ந்த நிலை, கரண்ட மகுடம், நீண்ட தொள்ளை காதுகளில் மகரக்குழை, செவிகளில் செவிப் பூ ஆகிய அணி செய்கின்றன. தலையின் பின்புறம் சிரச்சக்கரம் அமைந்துள்ளது.

இரண்டு கரங்களில் வலக்கரம் நீலோற்பலம் ஏந்தியும் இடக்கரம் அழைத்து வழங்கும் கரமாகவும் உள்ளன. தோள்களில் கேயூரங்கள், தோள் வளைகள் முன் இரு கைகளிலும் சூடகம் அமைந்துள்ளன. ஒவ்வொரு முன் கையிலும் சூடகத்தைத் தவிர வளைகள் இரண்டு காணப்படுகின்றன. இடுப்பு முதல் கணுக்கால் வரை ஆடை. ஒவ்வொரு காலிலும் சிலம்பும், காப்பும் அமைந்துள்ளது குறிக்கத்தக்கது. காலம் கி.பி. 15 ஆம் நூற்றாண்டு எனலாம். இப்படிமம் ஆண்டாள் சன்னதியில் உள்ளது. (படம் – 12)

ரெங்க மன்னார் :

பத்ர பீடத்தில் பத்மாசனத்தில், திரிபங்கத்தில் அமைந்துள்ள திருமேனியின் வலது கை தொங்கும் நிலை,

இடது கை கதையினைத் தாங்க ஏதுவான நிலை, கிரீட மகுடம் தலையை அழகு செய்கிறது. தலையின் பின்புறம் சிரச்சக்கரம் உள்ளது. இரு காதுகளில் மகரங்கள் தவழ்கின்றன. இடது தோளினின்று வலது இடுப்பினை நோக்கிச் செல்லும் யக்ஞோப வீதமும் வயிற்றில் உதரபந்தமும் உள்ளன.

வலது மார்பில் ஸ்ரீவத்ஸம், தோள்களில் கேயூரங்கள், இரு முன் கைகளிலும் கங்கணங்கள் அமைந்துள்ளன. இடுப்பு முதல் முழங்கால் வரை அழகிய மலர் வேலைப்பாட்டுடன் திகழும் ஆடை, இடுப்பில் கச்சு, ஒவ்வொரு காலிலும் மூன்று மூன்று காப்புகள், மூன்று கொலுசுகள், பாதங்களில் சிலம்புகள் காணப்படுகின்றன. இதன் காலம் கி.பி 15 அல்லது 16 ஆம் நூற்றாண்டு எனலாம். இத்திருமேனி மேட்டுக் கிருஷ்ணன் கோயிலில் உள்ளது.

ஆண்டாள் :

பத்ர பீடத்தில் பத்மாசனத்தில் திரிபங்க நிலையில் நின்ற நிலை, தலையில் பின்னோக்கிய சாய்வான கொண்டை முடியப்பட்ட நிலையில் உள்ளது. தொங்கிக் கொண்டிருக்கும் காதுகளில் மகர குண்டலங்கள் விளையாடுகின்றன. மார்பில் ஒரு மாலை, இரண்டு கரங்கள், லோல ஹஸ்தம், தாமரை, ஏந்திக் காணப்படுகின்றன. இரு தோள்களிலும் தோள் வளைகள், கேயூரங்கள், முன் கைகளில் கங்கணம் அனைத்தும் கவினுற அமைந்துள்ளன. இடுப்பு முதல் கனுக்கால் வரை ஆடை. ஒவ்வொரு பாதத்திலும் பாதச் சிலம்பு அணி செய்கின்றன. காலம் கி.பி. 14 அல்லது 15 ஆம் நூற்றாண்டு எனலாம். இத்திருமேனியும் மேட்டு கிருஷ்ணன் கோயிலில் உள்ளது.

நவநீத கிருஷ்ணன் :

பத்ர பீடத்தில், பத்மாசனத்தில் இடது காலினை ஊன்றி, வலது காலினை மேலே தூக்கி வலக்கையில் வெண்ணெய் ஏந்தி இடக்கையை நீட்டி ஆடும் நர்த்தன தோற்றம். ஜடாமகுடம் முடிந்த நிலையில் உள்ளது. தலையின் பின்புறம் சிரச்சக்கரம், காதுகளில் பத்ரகுண்டலங்கள் அமைந்துள்ளன. மார்பில் இரண்டு மாலைகள், வலது மார்பில் ஸ்ரீவத்ஸம், இத்திருமேனியில் சன்னவீரம் குறிக்கத்தக்க ஒன்று, தோள்களில் தோள் வளைகள், கேயூரங்கள், இரு முன் கைகளிலும் கங்கணங்கள். இடது கை நீட்டிய விரல்கள் கீழ் நோக்கிய நிலையில் உள்ளன. இடுப்பிலே அரைஞாண், அரைச் சலங்கை அனைத்தும் அழகுற அமைந்துள்ளன. வலது காலில் வீரக்கழல், இரு கால்களிலும் காப்பு, சிலம்பு அனைத்தும் அழகுற அமைக்கப்பட்டுள்ளன. இத்திருமேனியும் மேட்டுக் கிருஷ்ணன் கோயிலில் உள்ளது. இதன் காலம் கி.பி. 15 அல்லது 16 ஆம் நூற்றாண்டு எனலாம்.

நர்த்தன கிருஷ்ணன் :

இத்திருமேனி பத்ர பீடத்தில் பத்மாசனத்தில் இடது காலை, இடது கைப்பக்கம் நன்கு வளைத்து ஊன்றியும் வலது காலை மேல் நோக்கித் தூக்கி ஆடும் நிலையிலும் அமைந்துள்ள நர்த்தனக் கண்ணன் வடிவமாகும். ஆடையற்ற நிலையில் ஆடும் கண்ணன். ஒவ்வொரு கனுக்காலிலும் காப்பு, பாதச் சிலம்பு அமைந்துள்ளது. காலம் கி.பி.15 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்கலாம். இதுவும் மேட்டுக் கிருஷ்ணன் கோயிலில் உள்ளது.

இராமர் :

பத்ர பீடத்தில் பத்மாசத்தில் திரிபங்க நிலையில் நின்ற திருவுருவாகும். தலையில் கிரீட மகுடம், தலையின் பின்புறம் சிரக்சக்கரம், நீண்ட காதுகளில் மகரக் குழை, மார்பில் மூன்று வித மாலைகள், வலது மார்பில் ஸ்ரீவத்ஸம், யப்ஞோபவீதம், உதரபந்தம் அனைத்தும் அமைந்துள்ளன. இரு தோள்களிலும் கேயூரம், தோள் வளைகள், இரு முன் கைகளில் கங்கணங்கள், இடுப்பிலிருந்து பாதம் வரை ஆடை, கால்களில் சிலம்பு, வீரக்கழல் ஆகியவை கவினுற அமைந்துள்ளன. இரு கரங்களும் அம்பு பிடிக்கவும், வில்லேந்தவும் ஏதுவான நிலை (தனுர் ஹஸ்தம்). இதன் காலம் கி.பி. 15 அல்லது 16 ஆம் நூற்றாண்டு எனலாம். இத்திருமேனி இராமர் சன்னதியில் உள்ளது.

இலட்சுமணர் :

இத்திருமேனி பத்ர பீடத்தில், பத்மாசனத்தில் திரிபங்கத்தில் நின்ற நிலையில் அமைந்துள்ளது. ஜடாமகுடம், காதுகளில் பத்ரகுண்டலங்கள், செவிப்பூக்கள், திருமார்பில் மூன்று வித மாலைகள், மேல் தோள்களில் கேயூரங்கள், தோள் வளைகள் ஆகியன காட்டப்பட்டுள்ளன. யக்ஞோபவீதம் இடது புறமிருந்து வலது இடுப்பு நோக்கி வருகிறது. உதரபந்தம் அமைந்துள்ளது. இரு கரங்களில் அம்பும் வில்லும் ஏந்தும் பாவனை, கணுக்காலில் வரை ஆடை, வலது கணுக்கால் வீரக்கழலும், பாதங்களில் சிலம்பும் அமைந்துள்ளன. இத்திருமேனியும் இராமர் சந்நிதியில் உள்ளது. இதன் காலம் கி.பி. 15 அல்லது 16 ஆம் நூற்றாண்டு எனலாம்.

சீதை:

பத்ர பீடம், பத்மாசனம், திரிபங்கத்தில், நின்ற நிலை, தலையில் கரண்ட மகுடம், கரங்கள் இரண்டும் லோலஹஸ்தத்திலும், தாமரை ஏந்தியும், காதுகளில் பத்ர குண்டலம், தலையின் பின்புறம் சிரச்சக்கரம், திருமார்பில் மூன்று வித மலைகள், வளையல்கள், மார்பினை இறுக்கிய மார்புக் கச்சு, யக்ஞோபவீதம், தோள்களில் கேயூரங்கள், இடுப்பிலிருந்து கணுக்கால் வரை ஆடை, ஒவ்வொரு கால்களிலும் ஒரு சிலம்பு என அமைந்துள்ளன. இத்திருமேனி இராமர் சன்னதியில் உள்ளது. இதன் காலம் கி.பி. 15 அல்லது 16 ஆம் நூற்றாண்டு எனலாம்.

அனுமன் :

பத்ர பீடத்தின் மேலுள்ள பத்மாசனத்தில் அஞ்சலி ஹஸ்தத்தில் நின்ற நிலை, நீண்ட துளையுடைய காதுகளில் குண்டலங்கள், மார்பில் மூன்று வித மாலைகள், கேயூரங்கள், யக்ஞோபவீதம் உதரபந்தம் ஆகியன குறிக்கத்தக்கன. தோள்வளைகள் இடுப்பு முதல் முழங்கால் வரை அரையாடை, இரு பாதங்களிலும் சிலம்பு உள்ளன. வலது காலில் வீரக்கழல் அமைந்துள்ளது. வாலின் மேல் நுனியில் மிகச்சிறிய மணி ஒன்று உள்ளது. இத்திருமேனியும் இராமர் சன்னதியில் உள்ளது. இதன் காலம் கி.பி. 16 அல்லது 17 ஆம் நூற்றாண்டு எனலாம்.

நர்த்தன கிருஷ்ணன் :

பத்ர பீடத்தின் மேலுள்ள பத்மாசனத்தில் இடது காலினை ஊன்றி வலது காலினை மேலே தூக்கி நடனமிடும் நிலை. தலையில் ஜடாமகுடம், சிரச்சக்கரம், முன் நெற்றியில் சுருண்ட கேசங்கள், காதுகளில் பத்ர குண்டலங்கள், இரு

கரங்களில் அபயம், முன்னோக நீட்டிய நிலை என அமைந்துள்ளன. மார்பில் மாலைகள், வலது மார்பில் ஸ்ரீவத்ஸம், சன்னவீரம் உள்ளது. மேல் தோள்களில் கேயூரங்கள் சற்று கீழே தோள்வளைகள் இடுப்பில் அரைஞாண் மட்டும் அணிந்து நடனமிடும் கிருஷ்ணன் பாதங்களில் சிலம்பு உள்ளது. இத்திருமேனி கி.பி. 15–ஆம் நூற்றாண்டு எனலாம். இது கிருஷ்ணன் சந்நிதியில் உள்ளது. (படம் –13)

ருக்மிணி:

பத்ர பீடத்தின் மேலுள்ள பத்மாசனத்தில் திரிபங்க நிலையில் நின்ற கோலம், கரண்டமகுடம், பத்ரகுண்டலங்கள், செவிப்பூக்கள், இரண்டு கரங்களில் லோலஹஸ்தமும், கடகஹஸ்தத்தில் தாமரையும் ஏந்தியவாறு காணப்படுகின்றது. திருமார்பில் மூன்று மாலைகள், மார்புக் கச்சை, தோள்களில் கேயூரம், தோள்வளைகள், முன் கைகளில் கங்கணம், இடுப்பு முதல் கணுக்கால் வரை ஆடை, கால்களில் சிலம்பு என அணி செய்கின்றன. இத்திருமேனியும் கிருஷ்ணன் சந்தியில் உள்ளது. இதன் காலம் கி.பி. 16 அல்லது 17 ஆம் நூற்றாண்டு.

சத்யபாமா:

பத்ர பீடத்தின் மேலுள்ள பத்மாசனத்தில் திரிபங்க நிலையில், கரண்ட மகுடமணிந்து; காதுகளில் மகர குண்டலங்கள், செவிப்பூக்கள்; இரு கரங்கள் நீலோற்பலம் ஏந்தியும், லோலஹஸ்தத்திலும் உள்ளன. திருமார்பில் மூன்று வித மாலைகள் அணிந்து, தோள்களில் கேயூரம், தோள் வளைகள், முன் கைகளில் கங்கணம் காட்டப்பட்டுள்ளது. இடுப்பு முதல் கணுக்கால் வரை ஆடை. இரு பாதங்களிலும் சிலம்பு. இத்திருமேனியும் கிருஷ்ணன் சந்நிதியில் உள்ளது.

இதன் காலம் கி.பி.16 அல்லது 17 ஆம் நூற்றாண்டு எனலாம்

ஸ்ரீநிவாசர்:

பத்ர பீடத்தின் மேலுள்ள பத்மாசனத்தில் நின்ற நிலை. கிரீட மகுடம், காதுகளில் மகரக்குழை, செவிப்பூக்கள், வலது மார்பில் ஸ்ரீவத்ஸம், நான்கு கரங்களில் இருவித சங்கு, சக்கரம், மேலிரு கரங்களிலும்; வரதம், கடிஹஸ்தம், கீழிரு கரங்களிலும் காட்டி நிற்கிறார். தோள்வளை, கங்கணம், யக்ஞோபவீதம், உதரபந்தம், கணுக்கால் முதல் பாதம் வரை ஆடை என அலங்கரிக்கக் காணலாம். இது ஸ்ரீநிவாசர் சன்னதியில் உள்ளது. இதன் காலம் கி.பி 15 ஆம் நூற்றாண்டு எனலாம்.

ஸ்ரீதேவி:

பத்ர பீடத்தின் மேலுள்ள பத்மாசனத்தில் திரிபங்க நிலையில், நின்ற கோலம். தலையில் கரண்ட மகுடம், செவிகளில் செவிப் பூக்கள், மகரக்குழை, மார்பில் இருவகை மாலைகள், இரு கரங்கள் லோலஹஸ்தமாகவும், தாமரை மலர் ஏந்தியும் நிற்க, தோள்களில் கேயூரம், தோள் வளைகள் உள்ளன. முன் கைகளில் கங்கணம் உள்ளன. மார்புக் கச்சு இல்லை. கணுக்கால் வரை ஆடையுள்ளது, பாதங்களில் சிலம்பும் காட்டப்பட்டுள்ளன. இத்திருமேனி கி.பி.15 ஆம் நூற்றாண்டு. இத்திருமேனியும் ஸ்ரீனிவாசர் சன்னதியில் உள்ளது.

பூதேவி:

பத்ர பீடத்தின் மேலுள்ள பத்மாசனத்தில் திரிபங்கமாக நின்ற நிலை. தலையில் கரண்ட மகுடம், காதுகளில் மகரக்குழை, செவிப்பூக்கள், மார்பில் இரு வகை மாலைகள் காட்டப்பட்டுள்ளன. இருகரங்கள்

நீலோற்பலம் ஏந்தியும், லோலஹஸ்தமாகவும் உள்ளன. தோள்களில் கேயூரம், தோள் வளைகள், முன் கைகளிலும் கங்கணம் உள்ளன. மார்புக்கச்சு இல்லை. கணுக்கால் வரை ஆடை, பாதங்களில் சிலம்பு காணப்படுகின்றன. இத்திருமேனியும் ஸ்ரீநிவாசர் சன்னதியில் உள்ளது. இதன் காலம் 15 ஆம் நூற்றாண்டு எனலாம்.

செப்புத் துவாரபாலகர்:

இருபுறமும் இரண்டு துவாரபாலகர்கள் என்ற முறையில் இருவரும் பத்ர பீடத்தின் மேலுள்ள பத்மாசனத்தில் கிரீட மகுடத்துடனும், தோள்களின் வலப்புறமும் இடப்புறமும் பரந்துள்ள ஜடாபாரத்துடனும் காணப்படுகின்றனர். காதுகளில் மகரக்குழை, செவிப்பூக்கள் அமைந்துள்ளன. நான்கு கரங்கள் ஒரு புறமுள்ள துவார பாலகரின் மேலிரு கரங்களில் சங்கு, சக்கரம், கீழிரு கரங்களில் சூசி, கதையின் மீது வைத்தும் காணப்படுகிறன. மற்றொரு துவாரபாலகரின் நான்கு கரங்களில் மேலிரு கரங்கள் சக்கரம், சங்கு ஏந்தி, கீழிரு கரங்கள் கதையின் மீது உள்ள பாம்பு மீதும், விஸ்மயம் காட்டியும் உள்ளன. வாயின் இருபுறமும் கோரைப் பற்கள், கணுக்கால் வரை நன்கு வேலைப்பாடு அமைந்த ஆடை, வலதுகாலில் வீரக்கழல், பாதங்களில் சிலம்பு ஆகியன உள்ளன. இதன் காலம் கி.பி.17 ஆம் நூற்றாண்டாக இருக்கலாம். இத்திருமேனி அர்த்த மண்டபத்தின் நுழை வாயிலில் உள்ளன. (படம் முன்பக்கம்)

மேலும் இராஜகோபாலன் அல்லது குழந்தைக் கண்ணன், சக்கரத்தாழ்வார், நர்த்தன கிஷ்னன், ருக்மிணி செப்புத் திருமேனிகளும் உள்ளன.

ஆழ்வாராதிகளின் சன்னதியில் அமைந்த செப்புத் திருமேனிகள்:

பன்னிரு ஆழ்வார்களின் செப்புத் திருமேனிகள் ஏறக்குறைய ஒரே மாதிரியாக ஆனால் அவரவர்க்குரிய திருவுருவ அமைதியுடன், அவரவருடைய பெயரின் முதல் எழுத்து மட்டும் பீடத்தில் பொறிக்கப்பட்டுக் காணப்படுகின்றன. பொதுவான அமைப்பான பத்ர பீடத்தின் மீதுள்ள பத்ம பீடத்தில் நின்ற நிலையில் அஞ்சலி ஹஸ்தத்துடன் காட்டப்பட்டுள்ளன. ஆழ்வார்கள் பேயாழ்வார், பூதத்தாழ்வார், பொய்கையாழ்வார், திருமழிசையாழ்வார், மதுரகவி, குலசேகரழ்வார், பெரியாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார் திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார், கூரத்தாழ்வார் ஆகியோர் நெற்றியில் திருமண், மார்பில் துளசிமாலை அணிந்து கணுக்கால் வரை ஆடை தரித்துக் காணப்படுகின்றனர். இச் செப்புதிருமேனிகளின் காலம் கி.பி.16–17 ஆம் நூற்றாண்டு எனலாம்.

மணவாள மாமுனிகள்:

இடது காலின் மேல் வலது காலை வைத்து, பத்ர பீடத்தில் பத்மாசனத்தில் அமர்ந்த நிலை, தலையின் பின்புறம் பின் குடுமி உள்ளது(அபரசிகை) நெற்றியில் தென்கலைத் திருநாமம். நீண்ட துளையினை உடைய காதுகள், திருமார்பில் துளசி மணிமாலை, யக்ஞோபவீதம் இடமிருந்து வலம் வருகிறது. இரு கரங்களும் ஞான முத்திரை, தியான முத்திரையில் அமைந்துள்ளன. இடது கைப் பக்கம் திருத்தண்டம் வைப்பதற்குப் படிமத்தில் ஒரு துளை அமைந்துள்ளது. இடுப்பிலிருந்து தொடை வரை

அரையாடை குறிக்கத் தக்கது. இதன் காலம் 15 அல்லது 16 ஆம் நூற்றாண்டு எனலாம்.

உடையவர் இராமானுஜர்:

பத்ர பீடத்தில் பத்மாசனத்தில் இரு கை கூப்பி அமர்ந்த நிலை, பின்பக்கம் குடுமி முடிந்த நிலை. நெற்றியில் தென்கலைத் திருமண்காப்பு, தொங்கிய காதுகள், யக்ஞோப வீதம், இரு தோள்களின் முன்பக்கத்திலும் தென்கலைத் திருமண் காப்பு வரைந்த நிலை, வலது தோளில் சக்கரம், இடது தோளில் சங்கு பொறித்துள்ளது. இடுப்பு முதல் கணுக்கால் வரை ஆடை அமைப்பு, உடலின் பல இடங்களிலும் திருமண் காப்பு வரையப்பட்டுள்ளது. இத்திருமேனியின் காலத்தினை கி.பி.14 – 15 ஆம் நூற்றாண்டு எனலாம்.

5 சிற்பங்கள்

அழகர்கோயிலில் அமைந்துள்ள சிற்பங்களைப் பின்வருமாறு பகுக்கலாம்.

1) கற்சிற்பங்கள்: இவற்றில் மூன்று பிரிவுகளாக
   1) அ) மிகப் பெரிய சிற்பங்கள்
      ஆ) உருவச் சிலைகள் (Portraits)
      இ) மிகச் சிறிய சிற்பங்கள் (Miniature sculptures)
   2) கல்தேர் சிற்பம்
   3) துவாரபாலகர் – துவாரபாலகியர்

2) மரச்சிற்பங்கள்: இங்குள்ள மரச் சிற்பங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.
   1) வாயில் கதவில் அமைந்துள்ளவை
   2) கல்யாண மண்டபத்தில் அமைந்துள்ள மரச் சிற்பங்கள்
   3) சுந்தர பாண்டியன் கொறடு என்னும் மர மண்டபத்தில் அமைந்துள்ள சிற்பங்கள்
   4) தேரின் கண் அமைந்துள்ள சிற்பங்கள்
   5) தாயார் சன்னதியில் உள்ள "வெள்ளிக்கிழமைக் கொறடு" மரமண்டபச் சிற்பங்கள்

3) தந்த சிற்பங்கள்

4) சுதை சிற்பங்கள் சோமச் சந்த விமானத்தைச்

சுற்றி அமைந்துள்ளவை

5) கோபுரங்களில் அமைந்துள்ள சுதை உருவங்கள்

6) தங்க முலாம் பூசப்பட்ட த்வஜஸ்தம்பத்தில் அமைந்துள்ள சிற்பங்கள்

7) சோமச் சந்த விமானத்தில் அமைந்துள்ள தங்க முலாம் சிற்பங்கள்

8) அர்த்தமண்டப நிலைவாயிலில் அமைந்த வெள்ளிச் சிற்பங்கள்.

இனி இச்சிற்பங்களின் காலம் மற்றும் உருவமைதிகளைக் காண்போம்.

சிற்பங்களின் காலம்(கி.பி.12 முதல் கி.பி17வரை)

அழகர்கோயிலில் பிற்காலப் பாண்டியர், விஜயநகர ராஜப் பிரதானிகள், நாயக்கர் காலத்துச் சிற்பங்கள் காணப்படுகின்றன. அழகர்கோயில் சிற்பங்களைப் பற்றிப் பொதுவாகக் குறிப்பதென்றால் "பிற்காலச் சிற்பக் களஞ்சியம்" (கி.பி.12 முதல் 17) எனலாம்.

கல்யாண மண்டபச் சிற்பங்கள்:

கல்யாண மண்டபம், விஜயநகர மன்னர்கள் காலத்தில், இவர்களது ராஜப் பிரதிநிதிகளான நாயக்க மன்னர்களால் கட்டப்பட்டிருக்க வேண்டும். இங்கு எந்தக் கல்வெட்டும் இல்லை. ஆகையால் இதன் காலத்தை இதுவென்று அறுதியிட்டுக் கூற இயலாது. இதன் அமைப்பையும், சிற்பங்களின் அமைப்பயும் கொண்டு இம்மண்டபம் கி.பி 16-ன் இறுதியிலாவது அல்லது கி.பி.17-ன் முற்பகுதியிலாவது கட்டப்பட்டிருக்கும் எனலாம். இனி இங்கமைந்துள்ள சிற்பங்களின் உருவமைதி குறித்துக் காண்போம்.

இரணியன், நரசிம்மர் சண்டையிடும் சிற்பம்:

இச்சிற்பத்தில் நரசிம்மர் இடது காலைச் சற்று முன்னோக்கி வளைவுடன் ஊன்றியுள்ளார். வலதுகாலைச் சற்று பின்னோக்கி இயற்கையாக ஒரு மனிதனை, மற்றொரு மனிதன் துங்குவது போல் உள்ளது. இரண்யனுக்கு கிரீட மகுடம் சூட்டப்பட்டுள்ளது. இரணியன் காதுகளில் பத்ர குண்டலமும் இரு கடைவாய்களில் கோரைப் பற்களும் காட்டப்பட்டுள்ளன. நரசிம்மருக்கு எட்டுக் கரங்கள் காட்டப்பட்டுள்ளன. இச்சிற்பம் கல்யாண மண்டபத்தில் வடக்கு நோக்கிய நிலையில் அமைந்துள்ளது.

ஆளரியாய் இரணியனின் குடலை உருவுதல்:

இரணியனின் ஆகம் கீண்டு அவனது குடலை உருவி மாலையாகப் போடும் காட்சி மிகவும் பயங்கரமான நிலையில் காட்டப்பட்டுள்ளது. இக்காட்சியிலும் நரசிம்மருக்கு எட்டுக் கரங்கள் காட்டப்பட்டுள்ளது. (படம்-16)

கருடாந்திகர்:

அடுத்து கருடன் மீது விஷ்ணு, விஷ்ணுவின் தலையை உயர்ந்த கற்களினால் வேலைப்பாடு செய்த இரத்னக் கிரீடம் தலையை அலங்கரிக்கின்றது. காதுகளில் செவிப்பூ மகரக்குழை அமைந்துள்ளது. கழுத்தில் காறை அடுத்து முத்துப்பதக்கம், அடுத்தமைந்த முத்துமாலை அவரது மார்பளவு வளைந்து தவழ்கிறது. வலது மார்பில் ஸ்ரீவத்ஸம், கற்கள் பதித்த கேயூரங்கள், தோள்வளைகள் ஆகியவை காட்டப்பட்டுள்ளன. யக்ஞோபவீதம் இடது தோளினின்று வலது இடுப்பினை வந்து அடைகின்றது.

பெருமானின் கால்கள் கருடனின் வலது, இடது கைகளில் ஊன்றிய நிலையில் காட்டப்பட்டுள்ளது. ஆறு

கரங்களில் சங்கு, சக்கரம், சக்ரம், பாம்பு, அபயம், தொடை மீது என உள்ளன. ஒரு கரம் உடைந்துள்ளது.

யாளியும் வீரனும் சண்டையிடும் நிலை:

வீரனின் தலை அவனது நெற்றிப் பாகம் வரை யாளியின் வாயில் புகுந்துள்ளது. வீரனின் வலது கை, யாளியின் வலது காலைப் பிடித்துத் தன்னை விடுவித்துக் கொள்வது போல் உள்ளது. வீரனின் இடது கை அவனது இடையில் உள்ள வாளினை உருவிய நிலையில் அமைந்துள்ளது. இதுவும் வடக்கு நோக்கிய சிற்பமாகும்.

இரதி:

இரதி தேவி அன்ன வாகனத்தில் ஒய்யாரமாக அமர்ந்துள்ளாள். இவள் தனது வலது காலினை அன்னத்தின் இடது கழுத்தருகில் கவினுற ஒய்யாரமாக மடித்து வைத்துள்ளாள். விஜயநகர, நாயக்கர் கால ஆடை அணிகலன்களை எடுத்துக் காட்டும் வண்ணம் இச்சிற்பம் அமைந்துள்ளது.

அடுத்து குறிக்கத் தக்கன இரு கரங்கூப்பி நிற்கும் கருடனும், இரு கரங்கூப்பிப் பணிவுடன் தலையைத் தாழ்த்தி நிற்கும் அனுமனும். இச்சிற்பத்தினைச் சுக்கிரீவன் என்றும் சொல்கின்றனர்.

ஏனத்தின் உருவாகி நிலமங்கை எழில் கொண்டான்:

இது பூவராகர் பூமி தேவியைத் தனது தொடையில் அமர்த்தியிருக்கும் அழகுக் கோலம். பூவராகருக்குக் கீழே உள்ள ஐந்தலை அரவின் மீது பெருமானின் வலது காலும், வால் மீது இவரது இடது காலும் உள்ளன. இருவருக்கும் தலையில் கிரீடமகுடமும், காதுகளில் மகர குண்டலங்களும்

தவழ்கின்றன. செவிப்பூக்கள் விரிந்து மலர்ந்த நிலையில் கிளைகளாகக் காட்டப்பட்டுள்ளன. பூவராகரின் நான்கு கரங்கள் சக்ரம், சங்கு ஏந்தியும், பூமிதேவியின் பாதங்களைத் தாங்கிக் கொண்டும், அவரது தோள்களைத் தொட்டுக் கொண்டும், தேவி கணுக்கால் வரை ஆடை பூண்டு வலக்கரத்தால் பெருமானின் இடையைத் தழுவிய வண்ணமும், இடக்கரத்தில் நீலோற்ப மலரேந்தியும் காணப்படுகின்றன. இங்கு தேவியின் தலையலங்காரம் தனிச் சிறப்புடன் உள்ளது.

அந்தரம் ஏழினூடு செலவுய்த்தபாதம்:

எழில் வாய்ந்த திரிவிக்கிரமன் உருவம் அழகின் எல்லையாய் உயர்ந்து நிற்கிறது. தலையில் வேலைப்பாடமைந்த கிரீடமகுடம் செவிகளில் செவிப்பூ, மகரக்குழைகள், எட்டுக்கரங்களில் சக்கரம், சங்கு, அம்பறாத்தூளியிலிருந்து அம்பினை எடுக்கும் கை, மேனோக்கியகை, கத்தி, கேடயம், வில் ஏந்தி மற்றும் ஒர கை உடைந்தும் உள்ளது. இவ்வழகிய சிற்பத்தை நோக்கும்போது

"ஒருமாணிக் குறளாகி நிமிர்ந்த
அக்கருமாணிக்கம் என்கண்ணுளது"

என்ற நம்மாழ்வார் பாடலே நினைவில் வருகின்றது. (படம் -15)

மன்மதன்:

தலையிலே அழகான வேலைப்பாடுகள் அமைந்த கிரீடம், இரு கரங்கள், வலது கையில் கரும்பு வில், (கரும்புத் தோகையின் நுனிப்பாகம் மட்டும் உள்ளது). இடது கை சிதைந்துள்ளது. அரையளவு ஆடை. உதர பந்தத்தையொட்டி முத்துமாலை காட்சி தருகிறது.

பல்வகைக் கற்களினால் ஆன பதக்கம், மன்மதனின் மார்பினை அலங்கரிக்கிறது. வலது காலில் வீரக்கழல், சிலம்பு, மார்பிலும், கழுத்திலும் அணிந்துள்ள அணிகளின் முடிச்சுகள் எல்லாம் தோளின் பின்புறம் அழகு பெற அமைக்கப்பட்டுள்ளன.

குழலூதும் பிள்ளை:

வலது காலினைச் சாய்வாக இடது காலுக்கருகில் ஊன்றிக் குழலூதும் பிள்ளையின் தலையிலே கிரீட மகுடம், காதினில் மகரக்குழை, செவிப் பூக்கள், தொடையளவு அமைந்துள்ள ஆடை, அந்த ஆடையிலே பல்வகை முத்து வேலைப்பாடு என அழகுற அமைக்கப்பட்ட வடிவம். குழலூதும் கோபாலனின் வலப்புறத்தே பசுவொன்று தன்னிலை மறந்து செவியாட்டாது கோபாலனின் வேணு கானத்திலே தன்னை மறந்த நிலையினைக் காணலாம். இப்பசுவின் எதிரிலே விலங்கினத்து வேந்தான சிங்கம், தனது கொடுமை மறந்து, கொடுந்தொழில் துறந்து, தனது எதிரே பசுவொன்று படுத்துள்ளது என்ற பான்மையொழிந்து கோபாலனின் இசையில் லயித்துள்ள பான்மையினையும், இப்பசுவின் பின்பு பாம்பொன்று தனது படந்தனைச் சுருக்கித், தனது தலைதனைக் கீழே கிடத்தி இசை கேட்கும் நிலையினையும் காணலாம். கோபாலனின் இடப்புறம் ஒரு பசுவும், பறவையும், இவனது இசையில் தன்னை மறந்து, தனது செயலொழிந்த நிலையினைக் காணலாம்.

மன்மதனுக்குக் குடை பிடிக்கும் மங்கை:

இம்மங்கை தெற்கு நோக்கி மன்மதனுக்குக் குடை பிடித்துக் கொண்டு நிற்கின்றாள். அவளது காதுகளில் முத்துக் தோடுகள், செவிப்பூக்கள், காதணியைத் தொட்டுத்

துவளும் முத்து மாலை, இடையிலே ஒட்டியாணம், அதற்கடுத்து மேகலை, கணுக்கால் வரை தவழும் ஆடை என மன்மதனுக்குக் குடை பிடிப்பதற்கு ஏற்ற பாங்கியைச் சிற்பி தேர்ந்தெடுத்தது போற்றத்தக்க ஒன்றே.

கல்யாண மண்டபத்தில் உள்ள சிறு சிற்பங்கள்

சிவனின் நடனத் திருக்கோலம்:

இத்தூணின் வலப்புறம் அமைந்துள்ள கொடிப் பெண் சிற்பமும் குறிக்கத் தக்கது. இவள் கொடிப் பெண் என்பதற்கு ஏற்றபடி அவளது கொடியிடை அமைந்துள்ளது. சங்கு ஊதும் குள்ளபூதம், இச்சிற்பம் பூவராகர் அமைந்துள்ள தூணின் இடப்புறம் அமைந்துள்ளது.

வீரபத்திரர்:

பூவராகர் தூணுக்கு இடப்புறம் அமைந்துள்ள வீரபத்திரர், வேடனின் எழிற்கோலம், காளிங்கன் தலையில் நடனமிடும் குழந்தைக் கண்ணனின் உருவம் ஆகிய சிறு சிற்பங்களின் எழில் கண்டு களிக்கத்தக்கவை.

உருவச் சிலைகள் (**Portraits**)

திருமலை நாயக்கரும் அவரது தேவியும்:

திருமலை நாயக்கரும் அவரது தேவியும் அழகர் கோயிலில் நான்கு இடத்திலும், கோயிலுக்குச் செல்லும் வழியில் தலைக்கோட்டைக்குள், மேற்கு நோக்கிய இடிந்த மண்டபத்திலும், ஆகமொத்தம் ஐந்து இடங்களில் உள்ளனர்.

கோயிலுக்கு வரும் வழியில் அமைந்துள்ள மேற்குப்புற மண்டபத்தின் சிற்பமே, தென்னிந்தியாவில் உள்ள திருமலை நாயக்கர் சிற்பங்களில் மிகச் சிறந்தது எனலாம். மதுரை,திருவில்லிபுத்தூர், திருப்பரங்குன்றம் முதலான இடங்களில் உள்ள உருவை விட வனப்பிலும், வடிவிலும் இயற்கையான தோற்றத்துடன் இவ்வுருவம்

காட்சி தருகிறது என்பர். (படம் -14)

முத்தியாலு நாயக்கரும் தேவியும்:

(1) திருமலை நாயக்கரது இடிந்த மண்டபத்திலும் திருப்பள்ளியறையிலும் தேவியோடு கூப்பிய கரங்களுடன் முத்தியாலு நாயக்கரின் சிற்பம் உள்ளது.

நாயக்கரது இராஜப் பிரதானிகள்:

நாயக்கரது இராஜப் பிரதானிகள் திருமலை நாயக்கரின் இடிந்த மண்டபத்தின் நுழை வாயிலில் இருவரும், திருப்பள்ளியறையின் இடதுபுறம் இருவரும் அமைந்துள்ளனர்.

கல்யாண மண்டபத்தில் உள்ள இரு உருவங்கள்:

கல்யாண மண்டபத்தின் நுழைவாயிலில் இரு இராஜப் பிரதானிகள் நின்ற நிலையில் இருகரங்கூப்பி காட்சித் தருகின்றனர். இவர்களின் உயரம் 7-1/2 அடி. இவர்கள் தான் கல்யாண மண்டபத்தைக் கட்டியவர்கள். இவர்கள் விஜய நகரத்து இராஜப் பிரதிநிதிகளா அல்லது விஜயநகர இராஜப் பிரதிநிதிகளாக மதுரையை ஆண்ட நாயக்கர்களா? என்பது தெரியவில்லை.

இச்சிற்பங்களின் அமைப்பைக் கொண்டு இதன் காலத்தை கி.பி.16 எனலாம். இக்கோயில் ஸ்தல புராண ஆசிரியர் இராதாகிருஷ்ண அய்யர் இச்சிற்பங்களை கிருஷ்ணப்பா அல்லது பெரிய வீரப்ப நாயக்கர் என்றும், இரண்டாவது விஸ்வநாதன் என்றும் குறிக்கின்றார்.

ஆழ்வாராதிகளின் சன்னதியின் முன்பு வடக்கு நோக்கியுள்ள உருவம் திருமால் அடியார், அரையர் போன்ற தோற்றத்துடன் உள்ள உருவம், சிவனடியார், அரச உருவம் போன்று மற்றோர் உருவம் என மேற்குறித்த நால்வரும் இக்கோயிலுடன் தொடர்புடையவராகவோ அல்லது திருப்பணி

செய்தவராகவோ, ஏதாவது ஒரு பகுதியினைக் கட்டியவராகவோ இருக்கலாம்.

ஆண்டாள் சன்னதி முன்பு மேற்கு நோக்கிய இரு உருவங்கள்

கல்யாண மண்டபம் கட்டப் பெற்ற காலத்தில் தான் ஆண்டாள் சன்னதியும் கட்டப் பெற்றிருக்க வேண்டும். இதன் காலம் கி.பி.16 எனலாம். கல்யாண மண்டபத்தில் உள்ள விஜயநகர இராஜப்பிரதிநிதிகளான நாயக்கர்களாக இருக்கலாம்.

சிறு சிற்பங்கள் (**Miniature Sculptures**)

அழகர்கோயிலில் உள்ள பல மண்டபங்களிலும், மண்டபங்களின் உபானத்திலும், கிரீவத்திலும் இங்குள்ள கல் ஜன்னல்களிலும், கல் தூண்களிலும் அமைந்துள்ள பல்வகைச் சிறு சிற்பங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1) தசாவதாரச் சிற்பங்கள்
   அ) திருமாலின் பல்வேறு நிலைகள்
   ஆ) திருமாலின் பல்வேறு விளையாடல்கள்
2) கம்பராமாயணச் சிற்பங்கள்
3) பாகவதச் சிற்பங்கள் அல்லது கண்ணனின் பல்வேறு விளையாடல்கள்
4) சைவ சமயச் சார்புடையவை
5) மலர்கள், விலங்குகளின் அமைப்புகள்
6) கல் சாளரங்களில் அமைந்துள்ள பல்வகை வேலைப்பாடுகள், பல்வகைச் சிறுசிறு சிற்பங்கள்
7) குடக்கூத்து சிற்பங்கள் அல்லது நடன நாட்டியச் சிற்பங்கள்

8) பல்வகை நிலைகளில் கத்தி கேடயத்துடனும் சண்டையிடுந் தோற்றங்கள், மற்போர் சிற்பங்கள்

9) இசைக்கருவிகள் இசைக்கும் சிற்பங்கள்

10) பிற சிற்பங்கள்

ஆர்யன் மண்டபம் அல்லது சுந்தரபாண்டியன் மண்டபச் சிற்பங்கள்

முதற்கண் சுந்தரபாண்டியன் மண்டபத்தில் அமைந்துள்ள சிற்பங்களைக் காணலாம்.

தசாவதாரச் சிற்பங்கள்:

மேற்கு கிரீவம் இதில் தசாவதாரச் சிற்பங்கள் வரிசையாக அமைந்துள்ளன. முதலில் மத்சயம், அடுத்து கூர்மம், அடுத்து வராகம், அடுத்து நரசிம்மரது இரண்யவதம், அடுத்து வாமன அவதாரம் இரு நிலைகளில் உள்ளது.

அ) மாபலி தாரை வார்த்துக் கொடுப்பது

ஆ) பெருமான் முன்பு மாவலி குனிந்த நிலையும், திரிவிக்கிரம அவதாரமும், அடுத்து இராமர் வில்லுடனும் பலராமர் கலப்பையுடனும், அடுத்து பரசுராமர் பரசுடனும், மற்றும் கண்ணன், கல்கி அவதாரங்கள் உள்ளன.

வடக்கு கிரீவத்தில் சீதை இராமர் லட்சுமணர் இம்மூவரும் நின்ற நிலை, அசோக வனத்தில் சீதை அமர்ந்த நிலை, அனுமன் பவ்வியமாக சீதையின் முன்னே வணங்கி நிற்றல், அனுமன் தனது வலக்கையினால் சீதைக்குக் கணையாழி கொடுத்தல், வாலி – சுக்கிரீவன் சண்டை, இராமன் மறைந்து நின்று வாலியின் மீது அம்பு எய்தல், அனுமன் இராவணனைக் காணுதல், இராவணன் தான் மட்டும் அமர்ந்திருத்தல், அனுமன் தனது வாலினையே ஆசனமாகக் கொண்டு அமர்ந்த காட்சி, இராவணன்

இருபது கரங்களுடன் காட்சி தருதல். அடுத்து இராவணவதம், இராமன் முன்பு இராவணன் ஆயுதமின்றி நின்ற நிலை, இராவணன் மீண்டும் போருக்கு வருதல், சீதை, இராமர், இலட்சுமணர் நின்ற நிலை, 1) சுக்கிரீவன், 2) லட்சுமணர், 3) இராமன், 4) சீதை 5) அனுமன் என ஐவர் நின்ற நிலை ஆகிய இராமாயணக் காட்சிகள் அழகுறக் காட்டப்பட்டுள்ளன.

பாகவதச் சிற்பங்கள் அல்லது கண்ணன் விளையாட்டுகள்

பாண்டியன் மண்டபத் தெற்கு கிரீவத்தில் காட்டப்பட்டுள்ளன. புள்ளின் வாய் கீண்ட பெருமாள், குழந்தைக் கண்ணன் தவழும் நிலை, கண்ணன் உரலில் கட்டி அரக்கர்களை அழித்தல், மீண்டும் கண்ணன் சங்கிலியுடன் விளையாடுதல், கண்ணன் கோபிகைகளின் ஆடைகளை மரத்தின் மீது வைத்துள்ள நிலை, கோபிகைகள் கையது கொண்டு மெய்யது தழீஇ நிற்கும் காட்சி, அடுத்து மல்லரை மடுவிக்கும் கண்ணன், அதனையடுத்துக் குழலூதிய நிலையில் வேணுகோபாலன், இவனது வலப்புறமும், இடது புறமும் ஸ்ரீதேவி, பூதேவி நின்ற நிலையில் சிறப்பாக அமைந்துள்ளன.

சுந்தரபாண்டியன் மண்டபத் தூண்களில் அமைந்துள்ள சிற்பங்கள்

இங்குள்ள முதல் வரிசையிலுள்ள நான்கு தூண்களில் அமைந்துள்ள சிற்பங்கள் பின் வருமாறு:

முதல் தூணில் மத்தளம் அடிப்பவள், நடனம் ஆடுபவன், அரையாடை அணிந்து நடனமிடும் இரு ஆண்கள், இரண்யன் வதம் இரு நிலைகளில், நர்த்தன கிருஷ்ணன்

ஆகிய சிற்பங்களும் இரண்டாவது தூணில் யாளியின் வாயிலிருந்து வளைந்து செல்லும் பல்வகைக் கொடிகளும், பக்கத்திற்கு இரண்டு சிம்மங்கள் பிளிறிய நிலையிலும், இரு ஆடவர் நடனம், அமர்ந்த நிலையில் விஷ்ணு, சீதை இராமர் இலட்சுமணன், மயிலின் மீது நடமிடும் நங்கை ஆகியவற்றையும், மூன்றாவது தூணில் உடையவர் இராமநுஜர், இடது பக்கம் தண்டம் வைத்த நிலையில், கஜேந்திர மோட்சம், யோக பட்டத்துடன் யோக நரசிம்மர், தேவி ஆளியேறி அமர்ந்த நிலை, கொடிப்பெண்ஆகியவையும், நான்காவது தூணில் காளிங்க நர்த்தனம், குழலூதும் பிள்ளை, மயிலின் மீது முருகன், புள்வாய் கீண்டவன், விஷ்ணு நின்ற நிலை, லஷ்மி நரசிம்மர் ஆகிய சிற்பங்களும் எழில் வாய்ந்தவை.

மூன்றாவது பிரகாரம் – உபானத்தில் அமைந்துள்ள சிற்பங்கள்

கத்தி கேடயத்துடன் வீரன், மத்தளம் அடிப்பவன், உப்பிய வயிறும், சிரித்த முகமும் கொண்ட பூதகணம், வில்லேந்திய இராமன், அனுமன், ஸ்ரீதேவி, விஷ்ணு, பூதேவி, வாலி சுக்கிரீவன் சண்டை, நாட்டியமாடும் இருவர், விநாயகர் – யானை – வள்ளி, சன்ன வீரத்துடன் காட்டப்பட்டுள்ள முருகன் – வள்ளியை மணம் புரிய யானையை அனுப்புதல். வள்ளி வளைந்த கொண்டையிட்ட வள்ளி. வனத்தில் வள்ளி, எதிரே யானை. முருகன் வள்ளியைக் காத்தல். முருகனின் வலக்கை வள்ளியின் கழுத்தில் இடக்கை யானையின் மத்தகத்தில், இரு வீரர்கள் கத்தியேந்தி சமர்புரியும் நிலை, பரசுராமர், கத்தியுடன் ஒரு வீரன், மற்றொருவன் நீண்ட வாளுடன், மூன்று பூதகணங்கள், பூதனை அரக்கி, கண்ணன், காளிங்க நர்த்தனம்,

இராமாயணக் காட்சியாக இராமன் மாரீசன் மீது அம்பு எய்தல், அம்பு மாரீசன் கழுத்தில் பாயும் நிலை, இராமன் அருகில் மான், ஒருவன் மத்தளம் அடிக்க ஒருவன் ஆடுதல், வாலி – சுக்கிரீவன் சண்டை, கஜேந்திர மோட்சம், குரங்குகள் சேது சமுத்திரத்தைக் கல்லினால் அடைத்தல், நரசிம்மர் – பிரகலாதன் சிற்பங்கள் எழிலானவை.

சைவ சமயச் சார்புடைய சிற்பங்கள்

திருமலை மண்டபத்தில் உள்ள பிக்ஷாடனர் சிற்பம் வடக்கு நோக்கி உள்ளது. பிக்ஷாடனரின் நான்கு கரங்களில் முறையே டமருகம், மழு, தளிர் வழங்கும் கரம், கபாலம் உள்ளன. இச்சிற்பத்தின் இடப்புறம் குள்ள பூதம். இப்பிக்ஷாடனர் ஆடையுடன் உள்ளார். கணுக்கால் வரை ஆடை, பத்ர குண்டலம், கழுத்தில் கண்டிகை, முத்துமாலை, யக்ஞோபவீதம் வலப்புறம் திரும்பிய முகத்தில் புன்னகை தவழும் நிலை. மேலும் கல்யாண மண்டபத்தில் உள்ள சிவனின் நடனத் திருக்கோலம், வீரபத்திரர் மற்றும் சுந்தரபாண்டியன் மண்டபத்தில் உள்ள மயிலின் மீதமர்ந்த முருகன், மூன்றாம் பிரகாரத்தில் (உபானம்) உள்ள முருகன் வள்ளி தொடர்பான சிற்பங்கள், சிவபெருமான் காளியோடு ஆடிய ஊர்த்துவ தாண்டவம். சக்தி வஜ்ரம் ஏந்தி நிற்கும் முருகன் ஆகிய சிற்பங்கள் சைவ வைணவ ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன.

கற்சாளரத்தில் அமைந்துள்ள சிற்பங்கள் மலர்கள்: வேலைப்பாடுகள் :

அழகர் கோயில் கருவறையில் 4 கற்சாளரங்களும், அர்த்த மண்டபத்தில் இரண்டு கற்சாளரங்களும் அமைந்துள்ளன.

மேற்குப்புறம் அமைந்துள்ள சாளரத்தில்:

தசாவதாரச் சிற்பங்கள், கஜலஷ்மி, பல்வகை மலர்க் கொடிகள் ஆகியவற்றின் அமைப்பு குறிக்கத் தக்கவை. ஏனைய மூன்று புறமும் அமைந்துள்ள சாளரங்களில் பல்வேறு வேலைப்பாடுகள், மலர்கள், மலர்க்கொடிகள் குறிக்கத்தக்கவை. அர்த்தமண்டபத்தில் அமைந்துள்ள இரு சாளரங்களும் மிகப் பெரியவை. இதில் ஸ்வஸ்திகா வடிவங்கள் எங்கு நோக்கினும் நிறைந்துள்ளன.

இராமர் சன்னதியின் உபானத்தில் அமைந்துள்ள சிற்பங்கள்:

குடக்கூத்து: இங்கு அமைந்துள்ள சிற்பங்களில் குறிக்கத்தக்க சிற்பங்கள் குடக்கூத்துச் சிற்பங்களாகும். குடக்கூத்து பதினொரு ஆடல் வகைகளுள் ஒன்று. இது சிறப்பாக கிருஷ்ணனுக்கு உரிய 1) அவ்வியம், 2) குடம், 3) மல்லாடல் ஆகிய மூன்று கூத்துகளுள் இதுவும் ஒன்று.

தெற்குப்பக்க உபானம்: தமது இடக்காலை முன் வைத்து, வலக்காலை பின் வைத்த தோற்றத்தில் நின்ற நிலையில் உள்ளது. தனது இடக் கையினைக் குடத்தின் அடிப்பாகத்திலும், வலக்கையினைக் குடத்தின் வாய்ப்பாகத்திலும் பிடித்த நிலையில் இச்சிற்பம் குடக் கூத்தாடுவதாகக் காட்டப்பட்டுள்ளது.

கிழக்குப்பக்க உபானம்: கிழக்குப்பக்க உபானத்தில் அமைந்துள்ள இச்சிற்பம் மிகச்சிறப்பான முறையில் வடிக்கப்பட்டுள்ளது. வலது கையினை லாவகமான வீசி இடது கையில் குடத்தின் வாயினையும், இடது தோளில் குடத்தின் அடிப்பகுதியினையும் வைத்து ஆடல் புரியும் நிலை. காதுகளில் செவிப்பூ, மகர குண்டலங்கள், கழுத்தில்

கண்டிகை, பதக்கத்துடன் அமைந்துள்ளது. யக்ஞோபவீதம் இடது தோளிலிருந்து வலது இடுப்பு வரை செல்கிறது.

கிழக்குப் பக்கம் மற்றொரு குடக்கூத்துச் சிற்பம், முதலில் உள்ளது போல், இடது தோளில் குடத்தை வைத்து ஆடல் புரியும் நிலையில் உள்ளது.

வடக்குப் பக்கம்: இச்சிற்பம் நல்ல நிலையில் உள்ளது. வலது கையில் குடத்தின் வாயினையும், வலது தோளில் குடத்தின் அடிப்பாகத்தினையும் பிடித்துக் கொண்டு ஆடிய நிலையில் இச்சிற்பம் உள்ளது. வலது காலினைச் சற்று முன் வைத்து இடது காலினைச் சற்றுப் பின் வைத்து ஆடிய நிலை. இச்சிற்பத்தின் இடது கையில் ஒரு குடம் உள்ளது. இக்குடத்தை இடுப்பில் அணைத்துப் பிடித்து ஆடிய நிலையில் உள்ளது.

இராமர் சன்னதியின் அமைந்துள்ள பிற சிற்பங்கள் வருமாறு:

ஸ்ரீதேவி, அழிந்த நிலையில் விஷ்ணு, பூதேவி, சீதை இராமர் லட்சுமணர், காளிங்க நர்த்தனம், ஆயன் அல்லது இடையன், வெண்ணெய் திருடும் கண்ணன், கோவர்த்தனகிரிதாரி, பரசுராமர் ஆகிய சிற்பங்கள் உள்ளன.

கல்தேர் சிற்பம்:

அழகர்கோயிலில் மூன்றாவது திருச்சுற்றின் மேற்கில் அமைந்துள்ள கல்தேர் சிற்பம் குறிக்கத்தக்கது. இதில் அர்ச்சுனன், கைகட்டிய நிலையில் உள்ளான். பார்த்தசாரதி கீதையை உபதேசிக்கும் நிலையில் உள்ளார். கிருஷ்ணனின் நான்கு கரங்களில் சக்கரம், சங்கு, அபயத்துடன் கீழ் இடது கையில் உள்ள வியாக்யான முத்திரை குறிக்கத்தக்கது. நான்கு சக்கரங்களுடன் ஒற்றைக் கல்லில் செய்யப் பெற்ற தேர்ச்சிற்பம் ஆகும்.

துவார பாலகர்கள் :

இங்கு அமைந்துள்ள துவார பாலகர் மொத்தம் 6. செம்பினால் ஆன துவாரபாலகர் உருவங்கள் அர்த்த மண்டபத்தின் நுழைவாயிலில் உள்ளன. அவற்றின் பற்றிய விளக்கத்தினை ''செப்புத்திருமேனிகள்'' என்ற பகுதியில் காணலாம். ஏனைய நான்கு துவாரபாலகர் சிற்பங்கள் ஆர்யன் வாயிலிலும் தொண்டைமான் கோபுர வாயிலிலும் அமைந்துள்ளன. இவற்றின் காலம் கி.பி.12 அல்லது 13 எனலாம். இத்துவாரபாலகர்களை வைணவத்தார் ஜயன், விஜயன் என்று அழைப்பர்.

ஆர்யன் வாயிலில் உள்ள துவாரபாலகர் ஜடாமகுடமணிந்து நான்கு கரங்களில் சக்கரம், சங்கு ஏந்தி சூசி ஹஸ்தத்தில் ஒருவரும், விஸ்மய ஹஸ்தத்தில் மற்றொருவரும் நிற்க, ஒரு கை கதை மீது உள்ளது. மார்பில் யக்ஞோபவீதம், காதுகளில் செவிப்பூக்கள், சர்ப்பகுண்டலங்கள், குண்டலங்களில் பாம்பு படமெடுத்து, வாலைச் சுற்றிய நிலையில் உள்ளது, அரையளவு ஆடை, தோள்களிலும், முன் கைகளிலும் இரண்டிரண்டு வளைகள். வலக்காலில் வீரக்கழல், கால்களில் காப்பு, சிலம்பு என அனைத்தும் அழகு பொருந்தியவை.

தொண்டைமான் கோபுரத்தில் உள்ள துவார பாலகர் கம்பீரத் தோற்றத்துடனும் எழில் தவழும் புன்னகையுடனும் காட்சி தருகின்றனர். கிரீட மகுடத்தின் கீழே விழுந்துள்ள ஜடாபாரமும், காதுகளில் பத்ரகுண்டலமும் காணப்படுகின்றன. இருவரும் முறையே ஆறு கரங்களில் சக்கரம், சங்கு, சூசி, பாம்பு, பத்மம், கதையின் மீதும் சங்கு, சக்கரம், விஸ்மயம், கத்தி, பாம்பு, கதையின் மீது கொண்டுள்ளனர்.

துவாரபாலகியர் :

சுந்தரவல்லித் தாயார் சன்னதியிலும், ஆண்டாள் சன்னதியிலும் நான்கு துவாரபாலகியர் உள்ளனர். சுந்தரவல்லித் தாயார் சன்னதியிலுள்ள துவாரபாலகியர் பத்ர பீடத்தின் மீதுள்ள பத்மாசனத்தில், கிரீடமகுடம், பத்மகுண்டலம், மார்புக் கச்சு, மார்பில் முத்து மாலைகள் அணிந்து ஒரு கை சூசி முத்திரையும் மற்றொரு கை கதை மீதும் கொண்டு நிற்கின்றர். ஆண்டாள் சன்னதி துவார பாலகியர் – மேற்குறித்த இரு துவாரபாலகியரை விடக் குறைவான அலங்காரம், கிரீட மகுடம், பத்ரகுண்டலம் அணிந்து காணப்படுகின்றனர். ஆனால் இங்குள்ள துவாரபாலகியருக்கு முத்திரையில் மட்டும் வேறுபாடு உள்ளது. ஏனைய அமைப்புகளில் இருவரும் ஒரே நிலையில் வடிக்கப்பட்டுள்ளனர்.

மரச்சிற்பங்கள் :

தொண்டைமான் கோபுரத்தின் நிலைவாயிலில் உள்ள மரச் சிற்பங்கள் அழகிய, நுணுக்கமான வேலைப்பாடு கொண்டவை. இவற்றின் காலம் கி.பி.16 அல்லது 17 எனலாம். இங்குள்ள மரச் சிற்பங்களில் தசாவதாரக் காட்சிகள், சிவனின் பல்வேறு திருக்கோலங்கள், கம்பராமாயணச் சிற்பங்கள், நடனச் சிற்பங்கள், இசைக் கருவிகள் வாசிப்போர் சிற்பங்கள், தேவியின் பல்வேறு திருக்கோலங்கள், சிவனின் தாண்டவங்கள், பாகவதச் சிற்பங்கள் அல்லது கண்ணனின் திருவிளையாடல்கள், முருகன் மயிலின் மீதமர்ந்தும், விநாயகர் தமது துணையுடனும் உள்ள சிற்பங்கள் அழகு மிக்கவை, யாளி, மீன், குதிரை முதலான பல்வேறு விலங்குகளின் வேலைப்பாடுகள், மலர்கள், கொடி வேலைப்பாடுகள் ஆகியன மிகச் சிறப்பாகச் செதுக்கப்பட்டுள்ளன.

கல்யாண மண்டபத்தில் உள்ள மரத்தால் அமைந்த

கல்யாண மண்டபம்:

இம்மண்டபத்தின் நான்கு புறங்களிலும் நல்ல வேலைப்பாடு அமைந்த ஐந்து, ஐந்து மரத்தூண்கள் உள்ளன. மலர்கள், கொடிகளின் வளைந்த அழகிய வேலைப்பாடுகளும் குறிக்கத் தக்கவை. இம்மண்டபத்தின் நான்கு புறத்திலும் உள்ள கிரீவங்களில் அமைந்துள்ள சிற்பங்களைக் கீழ்க்காணுமாறு பகுக்கலாம்.

1) தசாவதாரச் சிற்பங்கள்
2) மகளிர்தம் நாட்டியங்கள்
3) பல்வகை இசைக் கருவிகளுடன் அமைந்துள்ள சிற்பங்கள்

சுந்தரபாண்டியன் மண்டபம் – சுந்தர வல்லித்தாயார் மண்டபம்:

இங்குள்ள மரச்சிற்பங்களில் சுந்தரபாண்டியன் மண்டபத்தில் உள்ள மரச்சிற்பங்கள் சுந்தரவல்லித் தாயார் சன்னதியில் உள்ளதைவிடக் காலத்தால் முந்தியது. சுந்தர பாண்டியன் மண்டபத்தில் அமைந்துள்ள மரமண்டபத்தில், தசாவதாரச் சிற்பங்கள், முருகன் மயிலில் அமர்ந்துள்ள சிற்பம், இசை, நடன, நாட்டியச் சிற்பங்கள் ஆகியவை காணப்படுகின்றன.

சுந்தரவல்லித் தாயார் – சன்னதியில் அமைந்துள்ள சிற்பங்களில் குறிக்கத் தக்கவை நான்கு புறமும் இறக்கைகளுடன் கூடிய கந்தர்விகள். இவர்கள் தங்களது இறக்கையை விரித்த வண்ணம் ஆடையின்றி உள்ளனர்.

அமைத்த நாராயணன் தேரில் அமைந்துள்ள மரச்சிற்பங்களில் தசாவதாரச் சிற்பங்கள், திருமாலின்

பல்வேறு நிலைகள், கண்ணனது விளையாட்டுகள், சிவனது பல்வேறு திருவுருவங்கள், கம்பராமாயணச் சிற்பங்கள், குதிரையின் மீது அமர்ந்துள்ள வீரனின் சிற்பங்கள் அழகுமிக்கவை.

தேரின் முன்புறம் விஷ்ணுவின் பல்வேறு நிலைகள், தசாவதாரக் காட்சிகள் காட்டப்பட்டுள்ளன. நரசிம்மரது பல்வேறு தோற்றங்களாக

1) யோக நரசிம்மர்
2) லட்சுமி நரசிம்மர்
3) ஜ்வாலா நரசிம்மர் ஆகியவை இங்கு குறிக்கத் தக்கவை.

மேலும் கண்ணன் உறியில் வெண்ணெய் திருடும் காட்சி, காளிங்க நர்த்தனம், கோவர்த்தனகிரிதாரியும் ,இருமருங்கிலும் தேரின் முன்புறம் குதிரையின் மீது அமர்ந்துள்ள வீரர்கள் தங்களது இருக்கையில் கடிவாளத்துடனும் வலக்கையில் வாளுடனும் உள்ள நிலையும் குறிக்கத்தக்கன.

தேரின் பின்பிறம் சிவனின் தாண்டவமான ஆனந்தத் தாண்டவம், பிட்சாடனர் உருவம் ஆகியன காட்டப்பட்டுள்ளன. தேவியின் பல்வேறு கோலங்களும், கம்பராமாயணச் சிற்பங்களும் குறிக்கத் தக்கவை. இங்கு உள்ள சிற்பங்களில் பல்வேறு நடன அமைப்புகளும், பல்வேறு இசைக் கருவிகளை இயக்கும் ஆடவரும், நடனமிடும் நங்கையரும், இத்தேரின் கண் எட்டுத் திசையிலும் அமைந்துள்ள திசை பாலகர்களும் குறிக்கத்தக்கவர்.

தந்தச் சிற்பங்கள்

திருப்பள்ளியறை: இத்திருப்பள்ளியறை திருமலை நாயக்கர் கட்டியது. இத்திருப்பள்ளியறையின் உள்ளே

தந்தத் தேர் உள்ளது. இந்தத் தேரின் கண் உள்ள தந்தச் சிற்பங்களில் திருமலை நாயக்கரது சிற்பமும் இரண்டு இடங்களில் காணப்படுகிறது. இத்திருப்பள்ளியறையினுள் தந்தச் சிற்பங்கள் பின்வருமாறு உள்ளன.

ரதி, கந்தர்வன், அடுத்து கந்தர்வனின் தேவி, யாழ் வாசிக்கும் கந்தர்வி, திருமலை மன்னரும் அவர் தம் இரு தேவியரும், யாளி, பூதேவி சமேதராக விஷ்ணு, கோதை தேரினுள் நின்ற நிலை, சரஸ்வதி, திருமலை, கந்தர்வர்களின் நடனச் சிற்பங்கள், காமச் சிற்பங்கள், பெண்ணின் நடனம், சீன மனிதன், ஓர் அரச உரு, யாளியும் வீரனும், தியான நிலையில் ஒரு மனிதர் என இத்தந்தச் சிற்பங்கள் அனைத்தும் கி.பி.17 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை.

சுதைச் சிற்பங்கள்:

சோமச்சந்த விமானத்தைச் சுற்றி தசாவதாரச் சிற்பங்கள் வரிசையாய் அமைந்துள்ளன. இரணிய வதம் இரண்டு நிலைகளில் அமைந்துள்ளது. கோபியர் குளித்தல், அருகில் ஒரு மரம், கிருஷ்ணன் கோபியரின் ஆடையினைக் கவர்ந்து கொண்டு, ஆற்றங்கரையின் அருகில் உள்ள மரத்தில் இருத்தல், பிக்ஷாடனர் – இவரைச் சுற்றிலும் தாருகா வனத்து ரிஷி பத்தினிகள் வலம் வருதல் எனவும் கீதா உபதேசக் காட்சியாகப் – பார்த்தன் வில்லினையும், அம்பினையும் களத்தில் போட்டு வெறுங்கையுடன் நின்ற நிலையும் பார்த்தசாரதியின் வியாக்யான முத்திரையில் உபதேசம் செய்தல் எனவும் அமைந்துள்ளன. தேவியின் தோற்றம், தனது தேவியுடன் வல்லப கணபதி, அன்ன வாகனத்தில் பிரம்மா அமர்ந்தள்ள தோற்றம், திரிவிக்கிரம

T-7450

அவதாரம், மோகினி அவதாரம், மோகினியைக் கண்ட ரிஷிகளின் விரகதாபம், யோக நரசிம்மர், நின்ற நிலையில் நரசிம்மர், மச்ச கன்னிகை, சங்கநிதி, பத்மநிதி, இரண்ய சம்ஹாரம், கருடாந்திகர், கோவர்த்தனகிரிதாரி, குழல் ஊதும் கண்ணன், திருமால் நின்ற நிலை, கருடவாகனத்தில் பெருமாள், தாயார், மயில் வாகனத்தில் ஷண்முகன், சிம்ம வாகனத்தில் நரசிம்ம மூர்த்தி, நரசிம்மருக்கு அருகில் பெண் வடிவில் சிம்ம முகத்துடன் பித்யங்கிரஸ், காளியின் நடனம் ஆகிய எழிலான சுதைச் சிற்பங்கள் காணத்தக்கவை.

லட்சுமி நாராயணன் கோயிலில் சுதையில் அமைந்த தேவகோஷ்டத்தின் உள்ளே லட்சுமி நாராயணன், அவருக்குக் கீழே உற்சவர்கள், தேவகோஷ்டத்தின் இருபுறமும் துவாரபாலகர்கள், இராமரின் பட்டாபிஷேகக் காட்சி, யோக நரசிம்மர், நின்ற நிலையில் நரசிம்மர், ருக்மிணி, கிருஷ்ணன் சத்யபாமா, கருடாந்திகர், கோபாலன் குழலூதும் காட்சி, இவனைச் சுற்றி இவனது இசையில் மயங்கிய கோபியர்கள் கோலம், வெண்ணெய் திருடும் கண்ணன், கோவர்த்தன கிரியைக் குடையாகப் பிடித்தல், அடுத்து கோபியரயகள் கிருஷ்ணனை ஆலிங்கனம் செய்த நிலை ஆகியன உள்ளன. மேலும் தேவ கோஷ்டத்தில் அமைந்துள்ள மகரதோரணத்தில் மூலவர் கருவறையில் பஞ்சாயுதத்துடன் உள்ளது போல், ஸ்ரீதேவி, பூதேவியுடன், சுதையிலும் வடித்துள்ள காட்சி குறிக்கத் தக்கது. மூலவரின் முன்பு உற்சவர்கள். இருபுறமும் துவார பாலகர்கள் உள்ளனர். பூதனை, குழவிக்கண்ணனைக் கொல்ல வருதல், குழவியைத் தூக்கிப் பால் கொடுத்தல், இறுதியில் மடிதல், காளிங்க நர்த்தனம், மரத்தின் மீது கண்ணன் ஆடையுடன், கீழே பெண்கள் கண்ணனிடம் ஆடை கேட்டுக் கெஞ்சும் நிலை, திருவிக்கிரம அவதாரம், ஸ்ரீதேவி திருமால் பூதேவி, பிட்சாடனர்

T-7450

இவரைச் சுற்றிலும் தாருகாவனத்து ரிஷிபத்தினிகள் இவரது அழகில் தன்னை மறந்து ஆடைகளை நழுவவிட்டு, இவரை நோக்கி விரகதாப நிலையில் வரிசையாக நிற்கும் தோற்றம், லட்சுமி நாராயணன், மகரதோரணத்துள் பாம்பணை மேல் பள்ளி கொண்டவன், அடுத்து பத்மாசுரன் கதை: பத்மாசுரன் தவமிருத்தல், சிவனிடம் வரம் பெறுதல், சிவனையே அழிக்க வருதல், விஷ்ணு மோகினி அவதாரம் எடுத்தல், பத்மாசுரன் குளித்தல், குளிக்கும் பொழுது தன் தலையில் கை வைத்துக் தானே இறத்தல் என இவையனைத்தும் சுதைச் சிற்ப வேலைப்பாட்டிற்கு எடுத்துக்காட்டுகள்.

இங்கு அமைந்துள்ள கோபுரங்களின் மீது ஏராளமான சுதைச் சிற்பங்கள் அமைந்துள்ளன. விஜயநகர மன்னர் காலத்து பதினெட்டாம்படிக் கோபுரம், தொண்டைமான் கட்டிய தொண்டைமான் கோபுரம், பிற்காலத்தில் பரமபத வாயில் கோபுரம் ஆகிய இடங்களில் பல்வேறு சுதை வடிவங்கள் உள்ளன.

தங்கமூலாம் சிற்பங்கள்:

தங்க முலாம் பூசப்பட்ட சோமச் சந்தவிமானச் சிற்பங்களும் துவஜஸ்தம்பச் சிற்பங்களும் குறிப்பிடத்தக்கவை.

அர்த்தமண்டபத்தின் நுழைவாயிலின் நிலைப்படியில் பெருமானின் தசாவதாரம் வெள்ளிச் சிலைகளாக அமைக்கப்பட்டுள்ளன.

பாண்டியர் காலச் சிற்பக்கலை, இசைக்கலை, நடன நாட்டியக் கலை வரலாற்றிற்கு எடுத்துக்காட்டாக அழகர்கோயில் சிற்பங்கள் விளங்குகின்றன. இது போல விஜய நகர, நாயக்கர் காலத்துச் சிற்பக் கலை வரலாற்றையும் விளக்குகின்றன. திருமலை நாயக்கர் காலத்துத் தந்தச் சிற்பங்கள், அவரது கலையறிவிற்கு நற்சான்று படைக்கின்றன. ஒட்டு மொத்தமாக உரைப்பதென்றால்

6 ஓவியங்கள்

கி.பி.14 ஆம் நூற்றாண்டில் விஜயநகரப் பேரரசு தென்னகத்தில் நிறுவப்பட்டுத் தென்னகத்தின் தென்பகுதி முழுமையும் அவர்கள் ஆட்சி நிலைக்கத் தலைப்பட்டது. அவர்கள் காலம் முதல் தமிழகத்தில் புதிய பாணியில், ஆனால் ஏற்கெனவே இருந்த பிற்காலச் சோழர்; பாண்டியர் மரபுகளின் தொடர்ச்சியாக கட்டட, சிற்ப, ஓவியக்கலைகள் தோற்றுவிக்கப்பட்டன. மேலும் தெலுங்கு கன்னட நாடுகளில் அதற்கு முன்பிருந்த சாளுக்கிய மரபுகளைச் சில வகையில் இணைத்துக் கொண்டதையும் அறியலாம். மைசூரின் மேற்குப் பகுதியை ஆண்ட போசள மன்னர்களின் கலைப் பாணியும் இவர்கள் கலையில் இழையோடுவதைக் காணலாம். இவர்களது பிரதிநிதிகளாக வந்து அரச மரபாக ஆளத் தொடங்கியவர்கள் நாயக்கர்கள். மதுரை நாயக்கர், தஞ்சை நாயக்கர், செஞ்சி நாயக்கர் என்று சொல்லுமளவு மூன்று இடங்களில் தங்கள் ஆளுகையைச் செலுத்தியவர்கள்.

இவர்களில் மதுரை நாயக்கர் சீரும் சிறப்புமாக ஆட்சிபுரிந்து மதுரையைச் சுற்றிலும் உள்ள கோயில்களுக்குப் பல்வேறு கலைக் கொடைகளை நல்கியுள்ளனர். அவற்றுள் சிறப்பாகக் கருதத்தக்கது அழகர் கோயில். இங்கு அவர்கள் கட்டட, சிற்பக் கலைப் பணிகளை மட்டும் விட்டுச் செல்லவில்லை. அருமையான ஓவியங்களையும் இக்கோயிலில் தீட்டியுள்ளனர். கூத்து, பண்பாடு

T-7450

முதலான சமுதாய வரலாற்றுக்கு விளக்கமாகத் திகழ்கின்றன எனலாம்.

கி.பி.17 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த நாயக்கர் கால ஓவியங்கள் அழகர்கோயிலை அழகுற அலங்கரிக்கின்றன. இவ்வோவியங்கள் திருச்சுற்று மேல் விதானங்களிலும் வசந்த மண்டபத்திலும், கல்யாண மண்டபத்திலும் அமைந்திருப்பதோடு, தந்தச் சிற்பங்கள் மீதும், சோமச் சந்த விமானத்தைச் சுற்றிலும் உள்ள சுதை உருவங்களின் மீதும் அமைந்து நம் கண்களுக்கு விருந்தளிக்கின்றன.

இராமன் பிறப்பு முதல் ஓவியம் தொடங்குகிறது. தசரதனின் மனைவியர் மூவரும் புத்திரகாமேஷ்டி யாகத்தில் கலந்து கொள்ளல். அமிர்தம் பெறுதல், மக்கட்பேறு அடைதல், தம் மக்களைத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டுதல், இராமன் முதலானோர் விசுவாமித்திரருடன் சென்று கல்விப் பயிற்சி, போர்ப் பயிற்சி பெறுதல் போன்ற காட்சிகள் இடம் பெற்றுள்ளன. (படம் – 17,18,19)

தாடகைவதம், அகலிகை சாபவிமோசனம் போன்ற காட்சிகளும் வண்ணங்களில் உயிரோட்டமாகக் காட்டப்பட்டுள்ளன. சீதா கல்யாணம், அதில் இடம் பெறும் நலுங்குச் சடங்குகள் ஆகியவையும் இடம் பெறுகின்றன.

இராமன் காட்டிற்குச் செல்லுதல், அதனைக் கண்ட அயோத்தி மக்களின் அவலம், படகோட்டி குகன், படகில் இராம, லட்சுமணர், சீதை ஆகியோர் சரயு நதியைக் கடத்தல் முதலான காட்சிகளும் தீட்டப்பட்டுள்ளன. இராமனைப் பிரிந்த தசரதனின் மரணம். தசரதனைத் தைலக் குடத்தில் இறக்கி உடலைப் பதப்படுத்துதல் ஆகியவை மிகவும் குறிப்பிடப்பட வேண்டிய காட்சிகள்

ஆகும்.

திருமலை நாயக்கர் காலத்தைச் சார்ந்த ஸ்ரீதேவி, பூதேவி, திருமால் ஓவியங்கள் திருச்சுற்றில் அமைந்த ஓவியங்களுள் குறிப்பிடத்தக்கவை. அவை நாயக்கர் கால ஓவியத் திறனுக்குச் சான்று பகர்பவை. அழகர்கோயில் கருவறை மூலவர் தோற்றத்தினை அப்படியே ஓவியமாக்கி, வசந்த மண்டபத்தில் படைத்துள்ளனர். இங்கு பஞ்ச மூர்த்திகளின் உருவங்களையும் அவர் தம் தேவியரையும் வண்ணத்தில் வரைந்துள்ளமை ஒப்பரிய சிறப்பம்சம் எனலாம். மேலும் இங்கு இராமாயண காவியம் முழுவதும் ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது. மைய மண்டபத்தின் உள்விதானத்திலும் வெளியிலும் வைணவ சமயச் சார்பான ஓவியங்களைப் பார்க்க முடிகிறது.

வசந்த மண்டபத்தில், உருவங்கள் உயிர் பெற்றதோ என்று வியக்கும் வகையில் அழகுத் தோற்றத்துடன் எழில் வண்ணத்தில் தீட்டப்பட்டுளமை நாயக்கர் கால ஓவியப் புலமைக்கு நற்சான்றளிப்பதுடன் சமுதாயக் கண்ணோட்டத்துடன் பார்க்கும் போது அக்கால மக்களின் வாழ்க்கை நிலையைப் பல்வேறு கோணங்களில் நம் கண்முன் கொணர்வதாக உள்ளது என்றே கூறலாம். இவற்றையெல்லாம் சொற்களால் நூலில் வடிப்பதைக் காட்டிலும், வண்ணத்தால் நம் எண்ணத்தில் நிலைபெறச் செய்திருப்பது அறிந்து இன்புறற்குரியது.

வசந்த மண்டபத்தில் அமைந்துள்ள ஓவியக் காட்சிகள் அனைத்திற்கும் அன்றைய பேச்சு வழக்குத் தமிழில் விளக்கம் தரப்பட்டுள்ளன. இம்மரபு இங்கு மட்டுமின்றி ஸ்ரீவில்லிப்புத்தூர், செங்கம், இராமநாதபுரம் போன்ற

இடங்களிலும் காணப்படுகின்றன. இதன் மூலம் அன்றைய தமிழ் மக்களின் பேச்சு வழக்கினை நாம் அறிவதோடு பண்பாட்டிலும், மொழியிலும் ஏற்பட்டிருக்கிற மாற்றங்களையும், கலப்புகளையும் தெளிவாகப் புரிந்து கொள்கிறோம். நாயக்க மன்னர்கள் தெலுங்கு மொழி பேசுபவர்களாதலின் அவர் தம் மொழியும், பண்பாடும் தமிழோடு எப்படிக் கலந்து செயல்பட்டன என்பதற்கும் மிகச் சிறந்த சான்றுகளை இவ்வோவியங்கள் தருகின்றன என்பதும் மறுத்தற்கியலாது. இது போலவே அக்கால ஆடையணிகளின் எண்ணற்ற வகைகளையும் இவ்வோவியங்கள் வழி அறிகிறோம். நவரத்தினங்கள் பதித்த உயர்ந்த அணிகளை இங்கு காண்கிறோம். இரத்தினக் கற்கள் பதித்த கிரீடங்களும், தேவியரும், பெண்களும் அணிந்துள்ள அணி வகைகளும் குறிப்பிடத்தக்கன.

தசரத மன்னரின் தேவியர் பல்லக்கில் ஏறி அயோத்தி செல்லும் காட்சி ஓவியமாக்கப்பட்டுள்ளது. இதில் தீட்டப்பட்டுள்ள 'மூடு பல்லாக்கும்' அதனைத் தூக்கிச் செல்லும் பல்லக்குத் தூக்கிகளின் தோற்றமும் நம்மை 17 ஆம் நூற்றாண்டின் சமுதாயச் சூழலுக்கே கொண்டு செல்கின்றன. பல்லக்குத் தூக்கிகளின் காதுகளில் அணிந்துள்ள கடுக்கன் குறிப்பிடத்தக்கது. இவர்களுடைய தோற்றம் அன்றைய சமுதாயத்தில் பணி மக்கள் எத்தகைய ஆடை அணிகலன் அணிந்திருந்தனர் என்பதைக் காட்டுவதாய் உள்ளது. இராமர் முதலானோர் பிறக்கும் காட்சியைச் சித்திரித்திருப்பது இயற்கையாக அமைந்துள்ளது. குழந்தைகளைத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டும் நிகழ்ச்சி 'தூங்கு மஞ்சம்' என்று

குறிக்கப்பட்டுள்ளது. 'தெசரதமாராசாவும் விசுவாமித்திரனும் அறுபத்தாறு ராசாக்களும் கூடி கொளுவு சாவடியிலிருந்து கொண்டு ராமசுவாமி பட்டாபிசேகத்துக்கு மந்திரிமாறுடனே கூடி ஆலோசனை பண்ணுவது' என்று பேச்சுத் தமிழில் அமைந்த இவ்விளக்கக் குறிப்பில் 'கொளுவு சாவடி' என்பது அரசனின் கொலு மண்டபத்தைக் குறிக்கப் பயன்பட்டிருத்தல் காண்க. இன்றும் கிராமங்களில் 'கொளுவு சாவடி' என்ற சொல் பேச்சு வழக்கில் உள்ளது. பேச்சுத் தமிழில் நாட்டுப்புற இலக்கியம் போல் எழுதப்பட்டிருந்தாலும் தெளிவாக அனைவரும் அறிந்து கொள்ள வேண்டுமென்பதில் நோக்கமுடையோராக இருந்துள்ளனர் என்பதைக் கீழ்க்காணும் விளக்கத்தினால் அறியலாம்.

> யிந்தபத்தி வாசிச்ச பிரகு மேலபத்தி
> வாசிச்சு நெடுகிலுபோயி வாசிச்சு இந்த
> கீளபத்தி வாசிச்சுக் கொண்டு மூலைவரை
> யிலும் போகவும்.

பெரும்பாலும் கருப்பு, மஞ்சள், சிவப்பு, வெள்ளை வண்ணங்களே பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வோவியங்கள் கண்ணுக்கு விருந்தாக மட்டுமன்றி அவை வரையப்பட்ட காலத்தின் சமய, சமுதாய, வரலாற்றுச் செய்திகளைப் பிரதிபலிக்கும் காலக் கண்ணாடிகளாக உள்ளன என்பதும் மனங்கொள்ளத்தக்கது.

இது போன்ற ஓவியங்கள் (நாயக்கர் கலைத்தியவை) திருவில்லிபுத்தூர், காளையார்கோயில், திருவரங்கம், திருவெள்ளறை, செங்கம் போன்ற ஊர்களிலும் உள்ளமை யாவரும் அறிந்ததே. அவற்றோடு இங்குள்ள ஓவியத்தையும் ஒப்பிட்டு ஆய்வு செய்யலாம்.

7 கோட்டைகளும், கோபுரங்களும்

I. கோட்டைகள் :

அழகர்கோயிலில் இரு கோட்டைகள் அமைந்துள்ளன. இரண்டும் வரலாற்றுப் புகழ்மிக்கவை. இவற்றை அழகாபுரிக் கோட்டைகள் என்று, இன்றும் மக்கள் வழங்குகின்றனர். இக்கோட்டைகளுக்கு அமைந்துள்ள பெயர்களே இவற்றின் தொன்மையை நிலை நிறுத்தும். இவ்விரு கோட்டைகளும் இன்றைய அழகர்கோயில் சமுதாயத்தை உள்ளடக்கியே உள்ளன.

அழகாபுரிக் கோட்டை:

இக்கோட்டை பெரியாழ்வாரால் பாடப் பெற்ற கோட்டையாகும். ஆனால் பிற்காலப் பாண்டியர்களின் திருப்பணியும் நிகழ்ந்துள்ளதை அழகாபுரிக் கோட்டையின் அமைப்பைப் பார்த்தாலே நமக்கு நன்கு புரியும். பெரியாழ்வார் இக்கோட்டையைப் பாடுங்கால், ''மதில்சூழ் சோலைமலைக்கரசே! கண்ணபுரத்தமுதே! என்னவலம் களைவாய்! ஆடுக செங்கீரை ஏழுலகுமுடையாய்! ஆடுக ஆடுகவே'' என்று பாடுவார். இவர் தம் பாடலின் வாயிலாக, ''மதில்களால் சூழப்பட்ட சோலைமலை'' என்று கி.பி.9 ஆம் நூற்றாண்டிலேயே இக்கோயிலைச் சூழ்ந்து மதில் அமைந்திருந்ததென அறியலாம்.

பெரியாழ்வார் சீமாற சீவல்லபனின் சமகாலத்தவர் என்பது அறிஞர் கருத்து. இதனால் பெரியாழ்வார் பாடலைக்

கொண்டு சீமாற சீவல்லபன் காலத்தில் இக்கோட்டை இருந்திருக்கும் எனலாம். முற்காலப் பாண்டியர்கள் அழகாபுரியைத் தமது இரண்டாவது தலைநகராக அமைத்திருக்கலாம் எனலாம்.

இக்கோட்டைக்கு அருகில் அகழி இருந்ததற்கு இன்றும் சான்றுகள் உள்ளன. மேலும் இக்கோட்டையில் அமைந்துள்ள ஒரு சில பழைய பகுதிகள் பகைவர்கள் நெருங்கா நிலையில் அமைக்கப்பட்டுள்ளதை நாம் இன்றும் காணலாம். பல்வகை இயந்திரப் பொறிகள் அமைத்ததற்குரிய சான்றுகள் இன்றும் உள்ளன. இக்கோட்டையில் வெளியே வரும் பகைவர்களை உள்ளே இருந்து அம்பு எய்யும் வண்ணம் அமைக்கப்பட்ட துளைகள் இன்றும் உள்ளன என்பது குறிக்கத்தக்கதாகும்.(படம் –20)

கோட்டை வாயில்கள் :

இக்கோட்டைக்கு நான்கு வாயில்கள் உள்ளன. இதில் தெற்குக் கோட்டை வாயிலே தலையானதால், இதனைத் தலைக்கோட்டை வாயில் என்று அழைக்கின்றனர். இத்தலைக்கோட்டை வாயிலின் அமைப்பும் மிகப் பெரியதாகும். இவ்வாயில் நன்கு உயரமாகவும், அகலமாகவும், முப்படையும் செல்லத்தக்க வண்ணம் இன்றும் அமைந்துள்ளன. இவ்வாயிலின் வழியாகத் தான் இன்று இக்கோயிலுக்கு வரும் பேருந்துகள் வருகின்றன. இக்கோட்டை வாயிலைக் கடந்து வந்தால் இருபுறமும் குடியிருப்புகள், சாலை இருமருங்கிலும் அழகுமிகு வானளாவ உயர்ந்த மரங்கள், இவற்றினைக் கடந்து வந்தால் அழகிய நீண்ட அகன்ற சாலை, இதனைக் கடந்தால் இச்சாலையின் மேற்குப்புறம் வடக்கு நோக்கிய வண்ணம் அமைந்த திருமலை நாயக்கர் மண்டபம் உள்ளது. (படம் –) மேற்குப் புறமுள்ள வாயில்

மலைக்குச் செல்லும் வாயிலாகும். இவ்வாயிலுக்கு அருகில் தான் அழிந்த நிலையில் இராயர் கோபுரம் உள்ளது. (படம்-21) கிழக்குப்புற வாயில், வடக்குப்புற வாயில் எனப் பிற வாயில்கள் அமைந்துள்ளன.

இரண்யன் கோட்டை:

இந்த இரண்யன் கோட்டை வாயிலில் தான் ''தேரடி'' அமைந்துள்ளது. இக்கோட்டையினை இன்று இரண்யன் கோட்டை வாயில் என்றும் அழைக்கின்றனர். இந்த இரண்யன் கோட்டைக்குரிய அடுத்த வாயில் ''இராய கோபுர வாயில்'' இது அழிந்த நிலையில் உள்ளது.

இந்த இரண்யன் கோட்டை வாயில் 1940 இல் திருப்பணி செய்யப்பட்டது. இதனால் உயரம் குறைந்து காணப்படுகிறது. ஆனால் அகலம் தலைக்கோட்டை வாயிலைப் போன்றேயுள்ளது.

இந்த இரு கோட்டைகளும் மூன்று முறை முகமதியர்தம் தாக்குதலுக்கு இறையாகியுள்ளன. கி.பி.1342 ல் மாலிக்காபூர் படையெடுப்பு, கி.பி.1736ல் ஹைதர் அலியின் படையெடுப்பு, கி.பி.1780ல் ஹைதர் அலி படையெடுப்பு என மூன்று முறை பகைவர்களால் தாக்கப்பட்டாலும், இன்றளவும் இதன் தொன்மையும், பெருமையும் ஓரளவு மாறாது இருந்து வருகிறது. இவ்விரு கோட்டைகளும் 100 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளன என்பதும் குறிக்கத் தக்கன. இது போன்று, பெரிய கோட்டையையும், வரலாற்றுச் சிறப்புமிகு கோபுரங்கள் அமைந்த கோயிலையும், தமிழகத்தில் காண்பது அரிது எனலாம்.

II) திருக்கோபுரங்கள்

இராயர் கோபுரம்:

இந்தக் கோபுரத்தைக் கட்டியவர் கிருஷ்ண தேவராயர் என்றும் கிருஷ்ண தேவராயரின் கீழ் சிற்றரசராய் ஆட்சி புரிந்த

திருமலை தேவமகாராஜா என்றும் கருதப்படுகிறது.

பதினெட்டாம்படிக் கோபுரம்:

இக்கோபுரத்தின் உயரம் 112 அடியாகும். இக்கோபுரம் 9 திருநிலைகளையுடையது. இந்தக் கோபுரத்தில் உள்ள பழமையான கல்வெட்டு கிருஷ்ண தேவராயர் காலத்துக் கல்வெட்டாகும். சகம் 1435 (கி.பி.1513) ஸ்ரீமுக வருஷத்தைச் சார்ந்த இக்கல்வெட்டு தெற்குச் சுவரில் காணப்படுகின்றது. இக்கல்வெட்டு அந்நாளைய ஆடித்திருவிழா, இறைவனுக்கு நிகழும் வழிபாடு, திருமஞ்சனம், ஆராதனை, திருவமுது பற்றிக் கூறுகின்றது.

தொண்டைமான் கோபுரம்:

தொண்டைமான் கோபுரத்திற்கு வலப்புறம் ஒரு கல்வெட்டுக் காணப்படுகிறது. இக்கல்வெட்டு இன்று படிக்கும் நிலையில் இல்லை. இதனைப் பற்றிப் பின்வருமாறு மத்திய அரசின் இ.க.ஆ.அறிக்கை 331/30 ல் குறிப்பு தரப்பட்டுள்ளது.

தொண்டைமானார் என்பவரின் கொடையால் இக்கோபுரம் கட்டப்பட்டது. இவரின் தந்தையார் காலிங்கராயர். இவர் செழுவத்தூரினைச் சார்ந்தவர். தனியொரு நபரின் கொடையால் கட்டப்பட்ட இக்கோபுரம் ஐந்து நிலைகளை உடையது.

வடக்கு வாயில் பரமபத கோபுரம்:

இதுவும் ஐந்துநிலைகளையுடைய கோபுரமே. இக்கோபுரம் 18 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டிருக்கலாம். ஆனால் இதில் கல்வெட்டுகள் எதும் இல்லை.

8 திருவாராதனைகளும், திருவிழாக்களும்

I. திருவாராதனைகள் :

அழகப்பிரானார்க்கு தினந்தோறும் ஆறுமுறை சிறப்புத் திருவாராதனை நிகழ்கிறது. வைகானச ஆகமப்படி வழிபாடுகள் நிகழ்கின்றன.

1) விஸ்வருபதரிசனம்	..	காலை 6 மணி
2) காலசந்தி	..	காலை 9 மணி
3) உச்சிக்காலம்	..	பகல் 12 மணி
4) சாயரக்ஷை	..	மாலை 5 மணி
5) நித்தியானு ஸந்தான கோஷ்டி	..	இரவு 7 மணி
6) அர்த்த ஜாமம்(சம்பாக்காலம்)	..	இரவு 8 மணி

1) விஸ்வருபதரிசனம் :

தமிழகத்தில் சிறப்பாக விஸ்பருபதரிசனம் நிகழும் கோயில்களில் அழகர்கோயிலும் ஒன்று. இங்கு நிகழும் விஸ்வருபதரிசனத்தை இராஜோபசார விஸ்வருபதரிசனம் என்பர். சுந்தரராஜனைத் துயில் எழுப்புவதற்காகக் காலை 5.30 மணிக்கு சுந்தரராஜ சுப்ரபாதம் பாடுகின்றனர். அடுத்து திருப்பல்லாண்டு பாடுகின்றனர். அதன்பின் அழகரின் முன்னே கோமுகம் பின்பு காட்டியவாறும் பசுவின் தலையின் முன்பகுதி கிழக்கு நோக்கியும் பசுவினை நிறுத்துகின்றனர்.

சுந்தரராஜர் தமது இரு செவிகளிலும் சுப்ரபாதத்தினையும், திருப்பல்லாண்டினையும் கேட்ட வண்ணம், பசுவைப் பார்த்த வண்ணம் துயில் எழுகின்றார். அப்பொழுது சுந்தரராஜருக்குச்

சிறப்புப் பிரசாதமாகப் பசுவின் பால் படைக்கப்படுகின்றது. பூபாள இராகத்தினைக் கோயில் நாதஸ்வர வித்வான் இசைக்க, மேளம் முழங்க சரியாக 6.00 மணிக்கு கற்பூர ஆரத்தி ஆரம்பம் ஆகின்றது. கற்பூர ஆரத்திக்குப் பின்பு, பெருமானின் முன் படைக்கப்பட்ட பால் அனைவருக்கும் அளிக்கப்படுகின்றது.

2) காலசந்தி:

அடுத்து சுத்த தந்யாசி இராகத்தில் மேளம் முழங்கக் காலை சந்தி 8.30 மணிக்கு ஆரம்பம் ஆகின்றது. அப்பொழுது ஆண்டாளின் திருப்பாவைப் பாடல்கள் பாடப்படுகின்றன. இக்காலை வழிபாட்டினை ''சுத்துக் கோயில் கால வழிபாடு'' என்று பட்டர்கள் வழங்குவர். சரியாக 9.00 மணிக்கு திருவாராதனை, அனைவர்க்கும் தீர்த்த விநியோகமாக சந்தனம் கொடுக்கப்படுகின்றது. இப்பூஜைக் காலத்தில் அக்கார அடிசில் பெருமானுக்குப் படைக்கப்படுகின்றது.

3) உச்சிக் காலம்:

ஸ்ரீராகத்தில் மேளம் முழங்க உச்சிக் காலப் பூஜை ஆரம்பமாகின்றது. நட்டராகத்துடன் உச்சிக் காலம் முடிவடைகின்றது. இக்கோயிலில் உள்ள அனைத்து சிறுதெய்வங்களுக்கும் உச்சிக் காலப் பூஜை நிகழும் சரியாக 12.30 மணிக்குத் திருவாராதனை, தீர்த்த விநியோகத்துடன், உச்சிக் காலம் முடிவடைகின்றது. இப்பூஜைக் காலத்தில் பெருமானுக்குச் சிறப்பாகப் புளியோதரை படைக்கப்படுகின்றது.

4) சாயரட்சை:

மாலை 5.00 மணிக்குக் கல்யாணி இராகத்தில், மேளத்துடன் சாயரட்சை ஆரம்பம். எல்லா சன்னதிகளிலும்

தீபாராதனை, அம்சநாதம் இராகத்துடன் முடிகிறது. இப்பூஜைக் காலத்தில் வெண்பொங்கல், அதிரசம், லட்டு ஆகியவை பெருமானுக்குப் படைக்கப்படுகின்றது.

ஸ்ரீபலி: மாலை 6.00 மணிக்கு அழகர்கோயிலில் ஸ்ரீபலி புறப்பாடு ஆரம்பம் ஆகின்றது. நலந்திகழ் நாரணன் என்றழைக்கப்படும் "வெள்ளித் திருமேனியினைத்" "தோளுக்கினியானில்" வைத்துப் பரிசாரகர் முன்னொருவராகவும், பினனொருவராகவும் இருந்து துக்கிக் கோயிலில் உள்ள மூன்றாவது திருச்சுற்றுமாளிகையை வலம் வருவர். ஸ்ரீபலியின் போது எல்லாத் திசாபாலகர்களுக்கும் வழிபாடு நிகழும். ஸ்ரீபலியின் போது பூரிகல்யாணி இராகத்தில் ஆரம்பித்து, வாசஸ்பதி இராகத்தில் ஸ்ரீபலியை முடிக்கின்றனர்.

5) நித்தியானு ஸந்தான கோஷ்டி விநியோகம்:

"நித்தியானு சந்தான கோஷ்டி விநியோகம்" அழகர் கோயில், ஸ்ரீரங்கம் முதலான இடங்களில் காணப்பெறும் சிறப்பான இறைவழிபாடாகும். இவ்வழிபாட்டில் அனைவரும் கலந்து கொள்ளலாம். இவ்வழிபாடு சரியாக 6.30 க்கு ஆரம்பித்து 7.00 மணிக்கு முடியும்.

இவ்வழிபாட்டின் போது ஸுந்தரபாஹுஸ்தவம் எனும் வடமொழி நூல் பாடப்பெறும். அதே நேரத்தில் இவ்வழிபாட்டில் இக்கோயிலைப் பற்றிப் பாடிய ஆழ்வாரின் பாசுரங்களிலிருந்து தினந்தோறும் 30 பாடல்கள் வரிசையாகத் பாடப் பெறும். இவ்வழிபாடு ஷண்முகப்பிரியா இராகத்துடன் இனிது ஆரம்பமாகிறது. இவ்வழிபாட்டின் சிறப்பம்சம் – வழிபாட்டின் போது ஸுந்தரபாஹுஸ்தவமும், ஆழ்வார்தம் பாசுரங்களும், இசையுடன் பாடப் பெறும்.

அர்த்தமண்டபத்தில் உற்சவர் அழகர் தம் தேவியருடன் வீற்றிருப்பார். ஸுந்தரபாஹுஸ்தவமும், பாசுரங்களும் பாடி முடிந்தவுடன் அழகருக்குத் திருவாராதனை, தோசை நைவேத்தியம் படைக்கப்படும். நைவேத்தியத்தின் பொழுது நவலோகத்தால் ஆன மணியின் ஒலி முழங்கும்.

திருவாராதனை முடிந்தவுடன் பக்தர்கள் இருக்கும் இடத்திற்கு பரிசாரகர் வந்து, அழகரது தீர்த்தம், சந்தனம் சடகோபனின் திருவடி சாதித்தலும் (சடாரி) வழங்கப் பெறும்.

பின்பு அழகரிடமிருந்து தோசை, வடை, சுண்டல் பிரசாதங்கள் அனைத்தும் அனைவருக்கும் விநியோகம் ஆகும். இத்துடன் நித்தயானு ஸந்தான கோஷ்டி விநியோகம் முடிவுறுகின்றது எனலாம்.

அழகர்கோயில் தோசை:

அழகர்கோயில் தோசை உலகப்புகழ் பெற்றது. வெளிநாட்டில் இருந்து அழகர்கோயில் வரும் அன்பர்கள் கூட இவ்வழிபாட்டில் கலந்து கொண்டு, கோஷ்டி விநியோகத்தில் தோசையினை வாங்கிச் சுவைத்த பின் தான் செல்வர். இதனை இன்றும் காணலாம். இத்தோசை மூன்று அங்குலம் கனமுடையது. நாள் ஒன்றுக்கு ஒரு தோசை, வெள்ளிதோறும் இரண்டு தோசை, இறைவனுக்குப் படைத்து அப்பொழுது வரும் அனைவருக்கும் தோசை பங்கிட்டுக் கொடுக்கப்படும். சிறப்பு விழா நாள்களில் இத்தோசையின் எண்ணிக்கை பெருகும். இத்தோசை விலைக்குக் கிடைக்காது. அழகருக்குப் படைத்துப் பின் பக்தர்களுக்கு வழங்கப்படும்.

6) அர்த்தஜாமம் அல்லது சம்பாக் காலம்:

அர்த்த ஜாமப் பூஜை சரியாக 8.00 மணிக்கு ஆரம்பம் ஆகும். இக்காலத்தில் இறைவனுக்கு சம்பாச் சாதம், பால்

படைக்கப்படும். இப்பூஜை மோகன இராகத்துடன் ஆரம்பம் ஆகும். அழகருக்கு சம்பாக் காலப் பூஜையானது முடிந்தவுடன் சிறப்பாக 18 ஆம் படிக் கருப்பிற்கும் நிகழும்.

மோகன இராகத்திலே 8.00 மணிக்கு ஆரம்பித்த பூஜை 18 ஆம் படிக் கருப்பண்ண சுவாமி கோயிலில் சரியாக 8.30 மணிக்குக் காம்போதி இராகத்தில் முடிகிறது.

அர்த்தஜாமப் பூஜையின் போது அங்கு வழிபாடு செய்யும் பக்தர்களுக்குப் பரிசாரகர் திருநீற்றினைப் பிரசாதமாகக் கொடுக்கினறார் என்பதும் குறிக்கத் தக்கதாகும்.

இக்கோயிலில் பாமர மக்களின் பரமனாக விளங்கும் கருப்பண்ண சுவாமி, சைவத்தையும், வைணவத்தையும், இணைத்து வைத்துத் தாம் காவலாளியாக இருப்பதோடு, பாமர மக்களின் நீதி தெய்வமாகவும் விளங்குகிறார்.

வாரந்தோறும் வெள்ளிக்கிழமை நிகழும் சிறப்பு வழிபாடு:

அழகர்கோயிலில் உள்ள தாயார் பெயர் சுந்தரவல்லித் தாயார். இவர் சிறப்பாகக் கல்யாண சுந்தரவல்லித் தாயார் என்று அழைக்கப்படுவார். இவரது சன்னதிக்கு முன்பு அமைந்துள்ள ''வெள்ளிக்கிழமை கொறடு'' எனும் அழகுமிகு மரமண்டபத்தில் வெள்ளிக்கிழமைதோறும் ஊஞ்சலில் தாயார் அமர்ந்து அனைவருக்கும் காட்சி தருவார்.

அழகர்கோயிலில் தினந்தோறும் மாலை 7.00 மணிக்கு நிகழும் நித்திய ஸந்தான கோஷ்டி விநியோகம் வெள்ளிக்கிழமைதோறும் தாயாரின் சன்னதியின் முன்புள்ள மகாமண்டபத்தில் நிகழும். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும், தாயாருக்கு இரண்டு தோசைகள் நைவேத்தியம் ஆகி அங்கு வரும் பக்தர்களுக்குக் கொடுக்கப்படும் என்பதும் குறிக்கத்தக்க ஒன்றாகும்.

பத்தி உலாவுதல்:

ஒவ்வொரு வெள்ளியும் தாயார் ஊஞ்சலில் அமரும் முன்பு அவர்தம் சன்னிதியில் இருந்து புறப்பாடாகி மூன்றாம் பிராகாரத்தை வலம் வருவார்.

கல்யாண சுந்தரவல்லித் தாயாரின் சிறப்பு:

இக்கல்யாண சுந்தரவல்லித் தாயார் படிதாண்டாப் பத்தினியாக அன்று முதல் இன்று வரையுள்ளார். தாயார் அழகர்கோயிலில் இருந்து வெளியே நிகழும் வழிபாடுகளிலும் விழாக்களிலும் கலந்து கொள்ளமாட்டார். அழகர் மட்டுந்தான் கலந்து கொள்வார். ஒவ்வோர் ஆண்டும் கோயிலின் உள்ளேயே சுந்தரபாண்டியன் மண்டபத்தில் நிகழும் திருக்கல்யாண உற்சவத்தில் தான் தாயார் கலந்து கொள்வார்.

நித்தியத் திருவாராதனைகள் பற்றிய கல்வெட்டுச் செய்திகள்:

அழகருக்கு நித்தியத் திருவாராதனை இன்று மட்டும் சிறப்பாக நடக்கவில்லை. அன்று முதல் இன்று வரை நடந்துவரும் ஒன்றே. அழகரின் நித்தியத் திருவாராதனைகளுக்கென்றே மன்னர்களும், மன்னரின் பட்ட மகிஷிகளும், அமைச்சர்களும் மற்றும் சாதாரண நிலையில் உள்ளவர்களும், தங்களின் நலனுக்காகவும், தங்களின் தாய் அல்லது சகோதரி முதலான உறவினர் நலன் கருதியும், உலகு உய்வதற்காகவும் அழகருக்கு நித்தியத் திருவாராதனைகளை நிகழ்த்தினர் என்பதைக் கல்வெட்டுக் குறிப்புகள் கூறுகின்றன.

1) இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் 10 ஆவது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டில் இவனது அமைச்சர் மழவராயர் நித்தியத் திருவாராதனைகளுக்குரிய

செலவுகளுக்காகச் சோழபாண்டிய வளநாட்டில் உள்ள சிறுதாவூர் என்ற கிராமத்தினைக் கொடுத்துள்ளதைத் தெரிவிக்கிறது. (இ.க.ஆ.அ.304/30)

2) சகம் 1530 (கி.பி.1608) சித்திரை மாதம் திருவிழாவிற்காக இரங்க அய்யங்காரின் மகன் அப்பயங்கார் என்பவர் இரப்பையூரில் கிடைக்கும் தோட்டங்களினின்று கிடைக்கும் வருவாயினின்று திருவிழாவிற்காகத் தேங்காய், பழங்கள் வாங்கிக் கொடுத்துள்ள செய்தியை ஒரு கல்வெட்டால் அறிகிறோம். (இ.க.ஆ.அ.89/1929)

நித்தியத் திருவாராதனைகளுக்குரிய திருமாலைகள், பூக்கள், துழாய் மாலைகள் பற்றிய கல்வெட்டுக் செய்திகள் :

1) முதலாம் ஜடாவர்மன் குலசேரன் காலத்துக் கல்வெட்டால் இராமன் கண்ணபிரான் என்னும் கலிகடிந்த பாண்டிய தேவன் மலையின் மீது மலர்த் தோட்டம் ஒன்றினை அமைத்ததையும் இம்மலர்த் தோட்டத்திலருந்து மலர்கள் பறிக்கப்பட்டுச் சாதாரண நாள்களிலும் மற்றும் விசேஷ நாள்களிலும் பெருமானுக்கு மாலையாக அணிவிக்கப் பெற்றதையும் அறிகிறோம். (இ.க.ஆ.அ.271/30)

2) கிருஷ்ணதேவராயர் காலத்து இக்கல்வெட்டுக் குறிப்பில், வழிபாட்டிற்குரிய பூமாலைகளைப் பற்றிய செய்திகள் குறிக்கப் பெறுகின்றன. (இ.க.ஆ.அ.90/29)

3) பெத்தரசன் என்பான் தனது அன்னையின் நல்வாழ்விற்காகத் தாமரை மாலைகளை இறைவனுக்கு அளித்துத் தினமும் திருவாராதனை நடத்தியுள்ளான். (இ.க.ஆ.அ.86/1929)

4) இக்கல்வெட்டுச் செய்தி சுவையானது. கள்ளழகர் மீது

பக்தி கொண்ட காஷ்மீர தேசத்தார் இராமய்ய தண்டநாதன், சொக்கய்ய தண்டநாதன், சகவாசி பிராம்மணன், ஆகிய மூவரும் கோயிலில் மூன்று பணியாட்களை அமர்த்தி அழகருக்குப் பூமாலைகள் கட்டிக் கொடுக்கச் செய்தனர்.(இ.க.ஆ.அ. 315/30)

கிருஷ்ண தேவராயர் காலத்தில் இம்மடி வீரய்யா தண்டேஸ்வரன் இறைவனுக்குத் திருவமுது படைத்து வழிபட்ட நிகழ்ச்சி ஒரு கல்வெட்டால் (90/1929) தெளிவாகிறது. இக்கல்வெட்டால் அரிசியில் செய்த 18 வகைப் பண்டங்களும், 5 வகை காய்கறிகளும், 5 வகை திருப்பணியாரங்களும், தோசையும் இறைவனுக்குப் படைக்கப்பட்டது என்று தெரிந்து கொள்கின்றோம்.

நித்தியத் திருமஞ்சனம்:

ஜடாவர்மன் குலசேகரன் காலத்தில் அழகருக்கு நித்தியத் திருமஞ்சனம் நிகழ்ந்தது. இவனது பட்ட மகிஷியான தரணிமுழுதுடையாளின் வேண்டுகோளுக்கு இணங்க மன்னன் இந்த நித்தியத் திருமஞ்சனத்தைச் செய்துள்ளான். இதற்காக சோழாந்தகச் சதுர்வேதி மங்கலத்தில் இறையிலி கொடுக்கப்பட்டது. (301/30)

ஆனி மாதம் விஷேமாக நிகழ்ந்த திருமஞ்சனம் பற்றி திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீவல்லப தேவன் காலத்திய கல்வெட்டு தெரிவிக்கிறது. இவன் தனது சகோதரியின் நல்வாழ்வு கருதி அழகப் பிரானார்க்கு விசேஷமாக ஆனி மாத விசாகத் திருநாளில் திருமஞ்சனத்தை நிகழ்த்தியதாகக் கல்வெட்டுக் குறிப்பு கூறுகிறது. இதற்காக இவனது அமைச்சனான குடநாட்டிலுள்ள கொற்கையூரில் வாழும் தமிழபல்லவரையன், குஞ்சரங்குடி என்னுங் கிராமத்தினைக் கொடையாகக் கொடுத்துள்ளான். (313/30)

மேலே கூறிய நித்தியத் திருவாராதனைகள் தவிர

சிறப்பாக இறைவனுக்கு நிகழும் திருவாராதனைகள் குறிக்கத்தக்கவை. பெருமான் ஏகாதசி, துவாதசி, அமாவாசை, பௌர்ணமி, மாதப்பிறப்பு, உத்திராடம் முதலான நாட்களில் திருஉலாவாக எடுத்துச் செல்லப்படுவார். அவ்வாறு பெருமான் திருஉலாச் செல்லுங்கால், நாற்றூண்கள் தாங்கிய யதிராஜன் கூடத்தில் சிறப்புத் திருவாராதனைகள் நிகழும். இது அன்றும் நடந்தது என்பதை ஒரு கல்வெட்டால் அறிகிறோம் (301/30). மேற்குறித்த வார, இருவார, சிறப்புத் திருவாரதனைகள் பற்றியும் கல்வெட்டுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. (90/29, 28/32, 279, 286, 287, 301, 311, 330/30)

இன்றைய கட்டளைகள்:

நித்திய வழிபாடு, சிறப்பு வழிபாடுகளுக்குச் சில கட்டளை ஏற்படுத்தியுள்ளனர். இராமநாதபுரம் மகாராஜாவும், சிவகங்கை ராஜாவும் இக்கட்டளைகளில் சிறப்பாக இடம் பெறுகின்றனர்.

கல்வெட்டின் வாயிலாக அறியும் அன்றைய கட்டளைகள்:

1) ஸ்ரீவல்லபன் கட்டளை 213/28–29
2) திருநாயக்கர் கட்டணை 12/32
3) அர்த்த ஜாமக் கட்டளை 1/32
4) அர்ச்சனாபோகக் கட்டளை 320/30
5) கிருஷ்ணதேவமகாராஜா ஆவஸ்வரம் 90/29

II. திருவிழாக்கள்

1) சித்திரைப் பெருந்திருவிழா:

அழகர்கோயிலில் நடைபெறும் இத்திருவிழா தென்னகத் திருவிழாக்களில் மிகவும் தலையாய திருவிழாவாகும். அகில உலகமும் போற்றும் சிறப்பான திருவிழா. இத்திருவிழாவில்

பல இலட்சக் கணக்கான மக்கள் கலந்து கொள்கின்றனர். இச்சித்திரைத் திருவிழா மிகவும் பழமையான திருவிழாக்களுள் ஒன்று. பிற்காலப் பாண்டியர் காலக் கல்வெட்டுக் குறிப்புகளிலும் சித்திரைத் திருவிழா பற்றிய செய்தி உள்ளது. (89/20, 311/30, 280/30)

திருமலை நாயக்கரும் சித்திரைத் திருவிழாவும்:

மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் நிகழும் சித்திரைத் திருவிழாவும், அழகர்கோயிலில் நடக்கும் சித்திரைத் திருவிழாவும், திருமலை நாயக்கர் காலத்திற்கு முன்பு வேறுவேறு மாதங்களில் நடந்தன. அழகரது சைத்ரோத்ஸவம் என்று சிறப்பிக்கப்படும் இத்திருவிழா, சித்திரை மாதத்திலும், மதுரை மீனாட்சி அம்மனின் திருவிழா மாசி மாதத்திலும் நடந்தன. மதுரையில் மாசி மாதத்தில் நிகழும் திருவிழாவில் மீனாட்சி சுந்தரேஸ்வரரின் தேர் சென்றதாலேயே மாசி வீதி என்று பெயர் பெற்றது. மதுரையில் திருமலை நாயக்கர் காலத்திற்கு முன்பு அழகர் வைகையாற்றிற்கு வேறு பாதையில் செல்வார். அவர் அலங்கா நல்லூர் – சம்பங்குளம், வயலூர் விட்டங்குளம் – தேனூர் சென்று வைகையாற்றில் இறங்குவார். ஆனால் திருமலை நாயக்கர் காலத்திலிருந்து இந்த இரு விழாக்களும் ஒன்றாகச் சேர்க்கப்பட்டன. திருமலை நாயக்கர் காலத்திலிருந்து அழகர் தாம் செல்லும் வழியையும் மாற்றிக் கொண்டார். கள்ளந்தரி – அப்பன் திருப்பதி – மூனுமாவடி வழியாக வந்து வைகையாற்றில் இறங்குகின்றார்.

இத்திருவிழாவின் சிறப்பு அம்சம்:

இச்சித்திரைத் திருவிழாவின் சிறப்பு அம்சம் அழகர் தமது இருப்பிடத்தினை நீங்கி 21 கி.மீ. கடந்து, மதுரை வந்து வைகையாற்றில் இறங்கி, அங்கிருந்து மீண்டும் 9

கி.மீ. தாண்டி வண்டியூர் வரை சென்று மீண்டும் அழகர் கோயில் வருவார். இத்திருவிழா ஒன்பது நாள்கள் நடக்கும்.

அழகர் வண்டியூர் வரை சென்று மீண்டும் அழகர் கோயிலுக்கு வருவதற்கு மொத்தம் 60 கி.மீ. பயணஞ் செய்கிறார்.

இத்திருவிழா நாள்களில் அழகருக்குத் திருமஞ்சனம் ஆகும் தண்ணீர் மட்டும், அழகர்மலையில் உள்ள நூபுர கங்கைத் தீர்த்தமே. அழகர் மதுரையில் உள்ள வண்டியூருக்குச் செல்லும் போதும், வரும் பொழுதும் பல மண்டபங்களில் அவருக்குத் திருமஞ்சனம் ஆகும்.

சித்திரைத் திருவிழா நடக்கும் விதம்:

அழகர் தம் சித்திரைப் பெருவிழா மொத்தம் ஒன்பது நாள்கள் நிகழும். அழகர் மதுரைக்குப் புறப்படும் முன்பே திருமலையில் அவருக்குத் திருவிழாக்கள் தொடங்கிவிடும். அந்தத் திருவிழாவின் நான்காம் நாள் மதுரைக்குப் புறப்பட்டு ஒன்பதாம் நாள் மீண்டும், மலைக்குத் திரும்பிவிடுவார். நான்காம் நாள் நடுப்பகல் சுமார் 1.00 மணி அளவில் கொண்டப்ப நாயக்கர் மண்டபத்திலிருந்து தங்கப் பல்லக்கில், கள்ளர் திருக்கோலத்துடன் புறப்படுகின்றார். கள்ளர் அணியும் தலைப்பாகை, வண்டிக் கடுக்கன், கள்ளர் கையில் பிடிக்கும் வலதாரித் தடி ஆகியன கொண்டு காட்சி தருகிறார் கள்ளழகர்.

கள்ளந்திரி:

கள்ளழகர் அழகர்கோயிலில் இருந்து புறப்பட்டு, கொண்டப்ப நாயக்கர் மண்டபத்தில் கள்ளர் கோலம் பூண்டு, பொய்கைக்கரைப்பட்டி எனும் ஊரினைக் கடந்து, கள்ளந்தரியினை வந்தடைகின்றார். இதனைப் பின்வரும்

நாட்டுப் பாடல்

“வையத்தார் கொண்டாட நரசிங்கமூர்த்தி
வந்து தெப்பம் ஆடுகின்ற
பொய்கைக் கரைவந்து ஆதிமூலம்
புன்சிரிப்புக் கொண்டெழுந்து
கள்ளந்தரி மண்டபத்தில் என்னையன்
கணக்காகவேயிருந்து” என விவரிக்கிறது.

அப்பன் திருப்பதி:

அழகர் அடுத்து கள்ளர் திருக்கோலத்துடன் அப்பன் திருப்பதியை வந்து அடைகின்றார். அப்பன் திருப்பதி அழகரின் தெற்குப் படைவீடாகும். இந்த அப்பன் திருப்பதி கோயில் அழகர்கோயில் கல்வெட்டுகளிலும் குறிக்கப்படுகிறது. அடுத்து மறவர் மண்டபத்தை வந்தடையும்.

மூணுமாவடியில் எதிர் சேவை:

மதுரை வரும் அழகரை எதிர் கொண்டழைக்க மூணுமாவடியில் பக்தர்களும், திருவிழாக் காணவரும் அன்பர்களும் ஏராளமாகக் கூடுவர். இந்த இடத்தில் இருந்து அழகனைக் காணவரும் அன்பர்கள் அனைவரும் எதிர் கொண்டு அழைப்பதால் இவ்விழாவினை ‘‘எதிர் சேவை’’ என்று அழைக்கின்றனர்.

அடுத்து அழகர் தங்கப் பல்லக்கில் கள்ளர் திருக்கோலத்துடன் அம்பலக்காரர் மண்டபத்தினை அடைகின்றார். இங்கு அழகருக்குப் பரிவட்டம் கட்டி, வழிபாடு செய்வர். பிறகு கள்ளழகர் இடையில் பல மண்டபங்களைக் கடந்து, தல்லாக்குளம் ஸ்ரீபிரசன்ன வெங்கடேசப் பெருமாள் கோயிலை அடைகின்றார். கோயிலை அடைந்தவுடன் வந்த அலுப்புத் தீர, இங்கு

திருமஞ்சனமாடுகின்றார். அந்நேரம் ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து, வந்த ஆண்டாள் சூடிக்கொடுத்த திருமாலையானது அழகரின் வருகையை நோக்கிக் காத்திருக்கும். அழகர் இங்கு வந்து திருமஞ்சனம் ஆன பின்பு, சூடிக்கொடுத்த சுடர்க் கொடியின் மாலையை வாங்கித் தனது கழுத்தில் அணிந்து கொள்கிறார். அன்று இரவு முழுவதும் பிரம்மாண்டமான வாண வேடிக்கைகளுடன் மதுரை நகரே விழாக் கோலம் பூண்டிருக்கும். பாமரர் முதல் படித்தவர் வரை தங்களது வாய்மொழியால் அழகரைப் பாடுவர். அழகர் ஆண்டாளின் மாலையுடன் அலங்காிக்கப்பட்ட வெட்டிவேர்ச் சப்பரத்தில் மீண்டும் பயணத்தைத் தொடக்குகிறார்.

மைசூர் மகாராஜா மண்டபம்:

அழகர் வெட்டிவேர்ச் சப்பரத்துடன் மைசூர் மகாராஜா மண்டபத்தினை அடைகிறார். மைசூர் மகாராஜா மண்டபம் வந்ததும் அழகரின் அலங்காரம் மாறுபடுகின்றது. இராஜ வேடத்தில் ஆயிரம் பொன் சப்பரத்தில் அங்கிருந்து புறப்பாடாகி, பக்தர்களுக்குக் காட்சி கொடுத்து, கருப்பண்ணசாமி மண்டபத்தை வந்து அடைகின்றார்.

கருப்பண்ணசாமி கோயில் மண்டபம்:

இங்கு இரவு தங்கி இளைப்பாறுகிறார். மறுநாள் அதிகாலை ஆயிரம் பொன் சப்பரத்தில் பவனி வருகிறார். பின்பு அங்கிருந்து தங்கக் குதிரை வாகனத்தில் வைகையாற்றிற்குப் பயணமாகின்றார். வைகை ஆற்றிற்கு எழுந்தருள வரும் அழகரைக் காண மக்கள் திரண்டிருப்பார்கள் அதிகாலை மூன்று மணியளவில் இருந்தே வெளியூர்களில் இருந்து வரும் பக்தர்களும், திருவிடையாட்டக்காரர்களும் தண்ணீர் பீய்ச்சும்

அன்பர்களும் அழகரின் வருகைக்காக எதிர் நோக்கி இருப்பர். அழகர் ஆற்றில் இறங்கும் வழியிலேயே அழகரைக் கண்டு, தரிசனம் செய்வர்.

வைகை வடகரையில் நூற்றுக்கணக்கான திருமண்டபங்கள் அமைந்திருக்கும். ஒவ்வொரு திருமண்டபத்திலும் அழகர் சென்று பரிவட்டம், திருவாராதனைகளை ஏற்றுக் கொள்ளும் முகத்தான் அனைத்து பக்தர்களுக்கும் காட்சி தருவார்.

தண்ணீர் பீய்ச்சுவோர் சிறப்பு:

அழகர் வரும் நேரம், கடும் வெய்யில் ஆகையால், பக்தர்கள் அவர் மீதும், அவர் ஏறிவரும் குதிரை மீதும், குதிரைக்கருகில் உள்ள பட்டர் மீதும் தண்ணீரைப் பீய்ச்சுகின்றனர். அழகரும், பட்டரும் குதிரைகளுந் தாகந் தீர்ந்து வெம்மையைப் போக்கிக் கொள்கின்றனர்.

இராமராயர் திருக்கண்:

ஆற்றில் இறங்கிய அழகர் இராமராயர் மண்டபத்திற்கு வந்து அங்கு அங்கப் பிரதட்ஷிணம் நிகழ்கின்றது. அதாவது அனைத்து பக்தர்களும் தண்ணீர் பீய்ச்சுவோரும், அழகரைக் குளிர்விக்கின்றனர். அவர் மீது கிட்டத்தட்ட 1 முதல் 2 வரை 1.00 மணி நேரம் தண்ணீர் பீய்ச்சிய வண்ணம் இருப்பர். பின்பு அழகர் இராமராயர் மண்டபத்தில் 1 மணி முதல் 4 மணி வரை இருந்துவிட்டு, அங்கிருந்து புறப்பட்டு, வைகை வடகரையில் உள்ள பல மண்டகப் படிகளைக் கடந்து, தனது பக்த கோடிகள் புடைசூழக் கூத்தும், மேளமும், திருவிடையாட்டமும் பின் தொடர இரவு வண்டியூர் வீரராகவப் பெருமாள் கோயிலை வந்து அடைகின்றார். அன்று இரவு அவருக்குத் திருமஞ்சனம்

நிகழ்கிறது. அவருக்கு சைத்யோபசாரம் நிகழ்கிறது. அங்குள்ள துலுக்க நாச்சியார் கோயில் சென்று தங்குகிறார். பின்பு மீண்டும் திருமஞ்சனமாகி பக்தர்களுக்கு ஏகாந்த சேவையில் காட்சி தருகிறார். பின்பு சித்திரை மாதம் புதன் கிழமை வண்டியூர் வீரராகவப் பெருமாள் கோயிலில் காலையில் திருமஞ்சனமாகி சேஷ வாகனத்தில் தேனூர் மண்டபத்திற்கு வருகின்றார். தேனூர் மண்டபத்தில் காலை 8.00 மணி முதல் 11.00 வரை தங்குகின்றார். அங்கு மீண்டும் திருமஞ்சனமாகின்றது. பின்பு எம்பெருமான் கருட வாகனத்தில் பக்தர்களுக்குக் காட்சி தருகிறார். அடுத்து அழகர் சேஷ வாகன சேவையுடன் அனுமார் கோயில் மண்டபத்தில் தங்குகிறார். அங்கு அழகருக்கு அங்கப் பிரதட்ஷிணம் நிகழ்கிறது. பின்பு வண்டியூரினை விட்டுக் கிளம்பி இராயர் மண்டபம் வந்து ஓய்வெடுக்கின்றார். இரவு அவருக்குத் திருமஞ்சனம் நிகழ்ந்து முடிந்தவுடன் இராமராயர் மண்டபத்தின் முன்பு கூடியிருக்கும் மக்களுக்கு தசாவதாரக் காட்சிகளை நிகழ்த்திக் காட்டுகின்றார் அழகர். வேறு எந்தக் கோயில் திருவிழாவிலும் இல்லாத சிறப்பு அம்சம், இந்த தசாவதாரக் காட்சி எனலாம். தசாவதாரங்களை அடுத்து அதிகாலை மோகினி அவதாரம் எடுக்கும் காட்சியும், திவ்யதரிசனக் காட்சியும் அளிப்பார். அன்று காலை 5.30 மணிக்கு மோகினி அவதாரத்துடன் அழகர் பத்தி உலாவுகின்றார். (அதாவது இராமராயர் மண்டபத்தைச் சுற்றி வந்து அனைத்துப் பக்தர்களுக்கும் காட்சி தருதல்) பிறகு திருமஞ்சனமத்தைத் தொடர்ந்து, அனந்தராயர் பல்லக்கில் இராஜாங்கத் திருக்கோலத்துடன் அனைவர்க்கும் காட்சித் தருகிறார். பின்பு அழகர் ஓய்வெடுக்க

இராமநாதபுரம் இராஜா திருமண்டபத்திற்கு வருகின்றார். இரவு ஒன்பது மணிக்கு அழகருக்குத் திருமஞ்சனம் ஆகின்றது. அன்று இரவு அங்கேயே ஓய்வெடுக்கின்றார். மறுநாள் அதிகாலை எந்தக் கோலத்தில் அழகர் கோயிலில் இருந்து வந்தாரோ, அதே கள்ளர் கோலத்தை எம்பெருமான் எழிலுற எடுத்து அனைவருக்கும் காட்சி தருகின்றார்.

கள்ளழகர் வெள்ளிக்கிழமை காலை கருப்பண்ண சாமி கோயிலில் கள்ளர் திருக்கோலத்துடன் புஷ்பப் பல்லக்கில் அமர்ந்த நிலையில், வையாழி ஆகி முடிந்ததும், தமது இருப்பிடமான திருமாலிருஞ்சோலைக்குப் பயணமாகின்றார். அடுத்து அம்பலகாரர் மண்டபம், மறவர் மண்டபம், அப்பன் திருப்பதி, கள்ளந்திரி வழியே மீண்டும் கோயிலை அடைவார்.

வைகாசி மாதம்:

வசந்த உற்சவம், கோயிலின் தென்புறம் அமைந்துள்ள வசந்த மண்டபத்தில் நிகழும் திருவிழா. இத்திருவிழா 10 நாள்கள் நிகழும். இத்திருவிழா பற்றிய கல்வெட்டுக் குறிப்பு உண்டு (MER 285/30)

ஆனி மாதம் முப்பழ உற்சவம் ஒரு நாள் மட்டும் நிகழும்

ஆடி மாதம் மூன்று திருவிழாக்கள் நிகழும்.

1) முதல் திருவிழா – ''ஆடிப்பூரத் திருவிழா'' திருவாடிப்பூரத்துச் செகத்துதித்த செல்வி ஆண்டாளின் பிறந்தநாள் திருவிழா.

2) அடுத்து ஆடி அமாவாசையன்று நிகழும் கருட சேவை. இக்கருட சேவையினைக் காண கிராம மக்கள் அனைவரும் கூடுகின்றனர். இவ்விழா மாங்குளம் அழகப்ப பிள்ளையின் கட்டளையின்படி நடந்து வருகின்றது.

3) ஆடி மாதம் நிகழும் அடுத்த திருவிழா பிரம்மோத்ஸவத்

திருவிழாவாகும். இது கோயிலில் 10 நாள்கள் நிகழும். இப்பத்து நாள்கள் நிகழும் நிகழ்ச்சிகளில் குறிக்கத்தக்கவை 4 ஆம் திருநாள் இரவு நிகழும் கெருட வாகனமும் 9 ஆம் திருநாள் நிகழும் திருத்தேர் உற்சவமும் ஆகும்.

ஆடித் தேர்த்திருவிழா பற்றிய கல்வெட்டுகள்:

ஆடித் தேர்த்திருவிழா பற்றிய செய்தி பிற்காலப் பாண்டியர் காலத்துக் கல்வெட்டுகளிலும், விஜயநகரர் கல்வெட்டுகளிலும் காணப்படுகின்றன.(280, 285/30)

கிருஷ்ணதேவராயர் கல்வெட்டில் தேர்த்திருவிழா இனிது நடப்பதற்குப் பாண்டி மண்டலத்தில் உள்ள சாத்தமங்கலம், சமய நல்லூர் முதலான கிராமங்களைக் கிருஷ்ணதேவராயர் கொடையாகக் கொடுத்துள்ளதை அறிகிறோம்.

ஆவணி மாதம் திருப்பவித்திர உற்சவம்:

இந்த உற்சவம் ஐந்து நாள்கள் நிகழும் உற்சவாகும். திருப்பவித்திர உற்சவம் வைகானச ஆகமத்தில் கூறியுள்ளபடி நிகழ்கிறது. இந்த உற்சவத்தின் முதல் நாள் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். முதல் நாள் அன்று பெருமானுக்கு 108 பூர்ண கும்பங்களில் உள்ள பல்வேறு வகையான மூலிகைகளைக் கொண்டு திருமஞ்சன நீராட்டுவர். இதன் பின் பெருமான் அலங்கரிக்கப்பட்டு இராஜாங்க சேவையுடன் காட்சி தருவார். பிறகு பெருமாளுக்குத் திருப்பவுத்திரம் சாற்றப்படும். பெருமாளுக்கு சாற்றிய பிறகு கல்யாண சுந்தரவல்லித் தாயார் முதலான அனைத்துச் சன்னதிகளிலும் திருப்பவித்திரம் சாற்றப்படும்.

உறியடி உற்சவம்:

கிருஷ்ண ஜெயந்திக்கு மறுநாள் இங்குள்ள உறியபடி மண்டபத்தில் இந்த உற்சவம் நிகழ்கிறது. உறியடி மண்டபத்தில் 5 பானைகள் கொண்ட உறி கட்டப்படும். 1) பால், 2) வெண்ணெய், 3) தயிர், 4) பட்சணங்கள், 5) தேங்காய், பழம். இந்த உறியடி உற்சவத்தில் இருவர் கலந்து கொள்வர். அப்பொழுது இறைவன் கிருஷ்ணன் வேடத்தில் புறப்பாடு:

1) ஒருவர் உறியை அடிக்க வருபவர் (கொத்தனார்) இவர் கோயிலில் உள்ளவர்

2) உறியை இழுப்பவர் (இவர் கோயில் மிராசு)

இந்த உற்சவத்தில் உறியை அடிக்க வருபவருக்கு கிருஷ்ணன் வேடமிட்டு, அவரை கிருஷ்ணனாகவே கருதுவர். இந்த உற்சவத்தின் முடிவில் உறியை அடித்தவருக்குப் பரிவட்டம் கட்டப்படும்.

புரட்டாசி மாதம்:

இங்குள்ள வலம்புரி விநாயகர் சன்னதியில் நிகழும் விநாயக சதுர்த்தி, கருட சேவை, 9 நாள் நவராத்திரி உற்சவம், விஜயதசமி அன்று ஒரு நாள் நிகழும் அம்பு போடும் உற்சவம் ஆகியவை.

ஐப்பசி மாதம்:

தலையருவி உற்சவம்: அழகர்இந்த உற்சவத்தின் வாயிலாக மலை வளங் காண்கிறார். மலைக்கு மேல் 2 மைல் தூரத்தில் உள்ள நூபுரகங்கைத் தீர்த்தத்திற்கு அழகர் செல்வார். அங்கு சென்று தனது சகோதரியான இராக்காயி அம்மனை வணங்கி அங்குள்ள தீர்த்தத்தில் எண்ணெய் தேய்த்துக் குளித்துவிட்டு வருவார்.

இந்த உற்சவத்தில் 3 நாள்கள் மலை மேலுள்ள

மாதவி மண்டபத்தில் இராக்காயி அம்மன் கோயிலில் அழகர் இருப்பார்.

279, 285, 286/30 ஆகிய கல்வெட்டுக் குறிப்புகள் வாயிலாக ஐப்பசி மாதம் நிகழும் இத்திருவிழாவில் இறைவனுக்குத் திருமஞ்சன நீராட்டுவிழா மிகச் சிறப்பாக நடந்தது என்று அறிகின்றோம். கார்த்திகைத் திருவிழா பற்றிக் கல்வெட்டுக் குறிப்புகளும் உள்ளன.

மார்கழி மாதம்:

1)பகல்பத்து உற்சவம் – இந்த உற்சவம் 10 நாள்கள் நிகழும்

2) இராப்பத்து உற்சவம் – இந்த உற்சவம் வைகுண்ட ஏகாதசியையொட்டி நிகழும் உற்சவமாகும். இந்த உற்சவத்தின் சிறப்பு யாதெனில், அழகர் கள்ளர் வேடத்தில் வருவார். இங்குள்ள கள்ளர்களைப் பிடிக்க இறைவன் கள்ளர் வேடத்தில் வருவார்.

தை மாதம் நிகழும் திருவிழாக்கள்:

1) கனு உத்சவம்
2) தைலப் பிரதிஷ்டை: இந்த உற்சவம் மூவலருக்கு நிகழும் உற்சவமாகும். இந்தத் தைலம் சந்தனக் கட்டை, அசல் சாம்பிராணியில் ஆக்கப்பட்டது. இது இனிய மணமுடையது.

மாசி மாதத் தெப்பத்திருவிழா:

தெப்ப உற்சவத்திற்கு அழகர், அவர்தம் இருப்பிடத்திலிருந்து சுமார் 1 மைல் தொலைவுள்ள பொய்கைக்கரைப்பட்டிக்குச் செல்கின்றார். இங்கு மிகவும் பிரமாண்டமான தெப்பத்தில், அன்னவாகனத் தெப்பத்தில் உலா வருவார். அழகரது தெப்பம், மிகவும் பெரியது.

இதற்கு நடுவில் அழகான மைய மண்டபம் உள்ளது. இத்தெப்பத்தில் அமைந்துள்ள அன்னவாகனம் அழகுமிக்கது.

கஜேந்திர மோட்சம்:

இந்த உற்சவம் ஒரு நாள் அழகர் கோயிலில் கல்யாண மண்டபத்தின் முன்புள்ள தண்ணீர்க் குளத்தில் கொண்டாடப்படும். இந்த உற்சவத்திற்கு அழகர், கருட வாகனத்தில் வந்து கஜேந்திரனுக்கு மோட்சம் தருவார்.

பங்குனி மாதம்:

திருக்கல்யாண உற்சவம் இது சுந்தரபாண்டியன் மண்டபத்தில் ஐந்து நாள்கள் நிகழும். இங்கு அழகர் திருக்கல்யாண தினத்தன்று ஸ்ரீதேவி, பூதேவி, ஆண்டாள், கல்யாண சுந்தரவல்லித் தாயார் ஆகிய நால்வருடனும் கல்யாணம் செய்து கொள்ளும் காட்சி கண் கொள்ளாக் காட்சியாகும்.

ஆண்டாள் இங்கு கள்ளழகரைத் திருமணம் செய்து கொண்டதாக ஐதீகம் உண்டு. ஆகையால் இந்தத் திருக்கல்யாணத் திருவிழா மிகவும் சிறப்பாக நிகழ்கிறது. இந்தத் திருக்கல்யாணம் பங்குனி உத்திரத்தில் நிகழ்கிறது

பஞ்சபூதங்களுக்கு நிகழும் திருவிழாக்கள்:

பஞ்சபூதங்களுக்கு நிகழும் திருவிழாக்களும் இக்கோயிலில் தனிச் சிறப்புடையவை.

1) பிருதிவி(மண்) நாளான விநாயக சதுர்த்தி
2) அப்பு(தண்ணீர்) நாளான ஆடிப்பதினெட்டாம் பெருக்குவிழா
3) தேஜஸ்(அக்னி) நாளான கார்த்திகைத் திருவிழா
4) வாயு(காற்று) நாளான சரஸ்வதி பூசை
5) ஆகாச நாளாகிய மகாசங்கராந்தி ஆகியன

குறிப்பிடத்தக்க திருவிழாக்களாகும்.

முடிவாக அழகர்கோயிலில் நிகழும் திருவிழாக்கள் அனைத்தும், அன்று முதல் இன்று வரை தொடர்ந்து நிகழ்ந்துவரும் விழாக்களே. இவற்றில் சிறப்பு மிக்க சில விழாக்கள் பற்றிக் கல்வெட்டுகளும் கூறுகின்றன. திருஅத்யயன திருவிழா போன்றவை வைகானச ஆகமப்படி இன்றும் நடப்பது சிறப்பு.

இத்திருவிழாக்களின் வாயிலாக மக்களின் அன்றைய சமுதாய, பண்பாட்டு வரலாறு நன்கு தெளிவுறுகிறது.

ஆனால் அழகர்கோயிலில் இன்று நிகழும் திருவிழாக்கள் பெரும்பாலும் பாமர மக்களுடன் அழகர் கோயில் பகுதி வாழ் கள்ளர் குலத்தவருடன் தொடர்புடையதாக உள்ளதும் குறிக்கத்தக்கது.

தென் திருப்பதி என்று போற்றப்படும் இத்திருமாலிருஞ் சோலையில் நிகழும் திருவிழாக்கள், திருப்பதியையும், ஸ்ரீரங்கத்தையும், அடுத்த நிலையில் சிறப்பம்சம் பெறுகின்றன.

9 கோயிலும் சமுதாயமும்

அழகர்கோயிலை ஒட்டியே இன்றைய அழகர்கோயில் ஊர்ச் சமுதாயம் அமைந்துள்ளது. அழகர்கோயிலுள் சுமார் 250 வீடுகள் அமைந்துள்ளன. இந்த 250 வீட்டினுள் உள்ளவர்களும் அழகர்கோயிலினைச் சார்ந்து உள்ளனர். இங்கு அமைந்துள்ள தெற்குக் கோட்டை வாயில் தெருவினில் கள்ளழகர் தேவஸ்தானத்தில் பணிபுரிவோர் வசிக்கின்றனர். இங்குள்ள வசந்த அக்ரஹாரத் தெருவினில் பட்டர்களும் பரிசாரகர்களும் வசிக்கின்றனர். இரண்யன் கோட்டையினுள் அமைந்துள்ள கிழக்குத் தெருவினுள் திருப்பண்டாரிகள் முதலான ஏனைய ஊழியர்கள் வசிக்கின்றனர்.

கோயில் நிர்வாகமும், கோயில் சமுதாயமும்:

அழகர்கோயிலில் 32 நிர்வாகங்கள் அடங்கியுள்ளன. இந்த 32 நிர்வாகத்தினர் அனைவர்க்கும் மானியங்கள் ஒழிப்பிற்கு முன்பு, கல்வெட்டுகளில் கூறியபடி, நிலங்கள் இருந்தன. இப்பொழுது அனைத்து நிலங்களையும் அரசு எடுத்துக் கொண்டுள்ளது. இன்றைய நிலையில் இந்த 32 நிர்வாகத்தினரும் தேவஸ்தானத்தில் சம்பளம் பெறும் ஊழியர்களாக உள்ளனர். இந்த 32 நிர்வாகங்களும் பின்வருமாறு:

பட்டர் – 4, பரிசாரகர் –6, ஆண்டார் தோளப்பர் – 2, ஸ்ரீபாதம் – 4

கணக்கு நிர்வாகம்:

1) சோலைமலைப் பிரியர்	
2) சுந்தரராஜப் பிரியர்	– 3
3) சௌந்திர ராஜப்பிரியர்	
பண்டாரி	– 2
திருப்பணி செய்வார் (செடி, கொடி களைபவர்)	– 1
கொத்தன்	– 2
கட்டியங் கூறுவார்	– 1
நாட்டியமாடுவார் (கணக்குப் புத்தகத்தில்(தாசி) என்றுள்ளது)	– 1
நாதஸ்வரம் – மேளம்	– 1
தச்சன்	– 2
வேளார்	– 1
பாடிகாவல்	– 2
ஆக மொத்தம்	32

மேற்குறித்த 32 நிர்வாகத்தில் நாட்டியமாடுவோர்க்குக் கொடுக்கப்பட்ட நிர்வாகம், இன்று ஆள் எவரும் இல்லாமையால் அந்த நிர்வாகத்தினைக் கணக்கிலிருந்து எடுத்துவிட்டார்கள். இன்று 31 நிர்வாகங்களே செயல்படுகின்றன.

ஸ்ரீபாதந்தாங்கிகள்:

சித்திரைத் திருவிழாவில் அழகர் தமது இருப்பிடத்திலிருந்து, வண்டியூர் வரை வந்து, பின்பு அழகர் மலையை அடையும் வரை (போக–வரசுமார் 75 கிலோ மீட்டர்) ஸ்ரீபாதந்தாங்கும் பொறுப்பு இவர்தம் பொறுப்பு.

பரிசாரகர்:

இவர்கள் தினந்தோறும் அதிகாலையில் அழகரைத் திருமஞ்சனம் செய்வதற்காக மலை மேலுள்ள உள்ள

நூபுரகங்கை சென்று தண்ணீர் வந்து மார்கழி ஏகாதசித் திருநாள் மண்டபத்திலிருந்து மேளம் முழங்கக் கோயில் மரியாதையுடன் பதினெட்டாம் படிக் கருப்பர் சன்னதிக்குக் கொண்டு சென்று, அவர் முன்பு "இந்தத் தண்ணீரை எம்பெருமான் நீராட்டிற்குச் சிலம்பாற்றிலிருந்து கொண்டு வந்தேன்" என்று சத்தியம் செய்ய வேண்டும்.

பரிசாரகரின் அடுத்த முக்கியப் பணி, தினந்தோறும் பலிபேரத்தின் போது, தோளுக்கினியானில் எம்பெருமானை வைத்து வலம் வரும் பொறுப்பு இவரைச் சார்ந்ததே. மேலும் கோயிலின் நித்திய, நைமித்திக வழிபாட்டிலும், ஏனைய வார, இருவார, ஏகாதசி, உத்திராடம், சதயம் முதலான அனைத்துத் திருவிழா நாள்களிலும், இவர் தம் பணி குறிக்கத்தக்க ஒன்று.

திருப்பதியம் பாடுவோர்:

1) ஸுப்ரபாதம், ஸுந்தரபாஹுஸ்தவம் முதலானவற்றைப் பாடுவோர்.
2) நாலாயிரத் திவ்யப்பிரபந்தம் பாடுவோர். இவர்கள் ஆண்டார் என்றும், தோளப்பர் என்றும் அழைக்கப்படுகின்றனர்.
3) இவர் சுற்று வட்டார கிராமங்களில் மக்களுக்குப் பிடிக்கும் பேயினை ஓட்டுதல்
4) மக்களுக்கு விபூதி கொடுத்து நல்வாக்குக் கூறுதல் ஆகியவற்றைச் செய்கின்றார். திருவிழா நாள்களிலும், கோயிலில் நிகழும் சிறப்பு வைபவங்களிலும் இவர்க்குத் தான் முதலில் தீர்த்தம், முதல் மரியாதை நிகழும்.

பண்டாரிகள் :

அடுத்து பண்டாரிகளின் கோயில் சமுதாயச் சேவை குறிக்கத் தக்க ஒன்றாகும். பண்டாரிகளை மாதச் சம்பளத்திற்கு நியமித்து, அழகர்கோயில் நித்திய, நைமித்தக வழிபாடுகளுக்கும் ஏனைய விழாக்களுக்கும் தேவையான துளசி, பூமாலைகள் முதலானவற்றைக் கொடுக்கும் படி செய்கின்றனர். இவர்கள் துளசி கொண்டு வருபவர், நந்தவனத்தினின்று பூப்பறித்து மாலை கட்டுபவர், தாயார், ஆண்டாள் சன்னதிக்குத் திருமஞ்சனம் கொணர்வோர்.

வேளாளர் :

இவர்கள் இப்பகுதியில் குயவர் என்று அழைக்கப்படுகின்றனர். விழா நாள்களில் கோயிலுக்கு அகல் விளக்குகளையும், பானைகளையும் கொடுத்து வருகின்றனர்.

இனி அழகர்கோயிலை ஒட்டிய சமுதாயப் பகுதியின் இன்றைய நிலையினைக் காண்போம்.

அழகர்கோயிலின் இன்றைய நாட்டுப் பிரிவு :

அழகர்கோயில் எனும் இவ்வூர் மதுரை மாவட்டம், மேலூர் வட்டம் வளையாபட்டி ஊராட்சி ஒன்றியத்துடன் இணைந்தது. மேலூர் வட்டத்தைப் பொறுத்த வரை, அழகர்கோயிலைச் சுற்றி அமைந்துள்ள மண்வளம் குறிக்கத்தக்கது. ஏனைய மேலூர்ப் பகுதிகளில் அனைத்தும் புன்செய் நிலங்களே. ஆனால் அழகர்கோயிலைச் சுற்றிலும் அமைந்துள்ள பகுதிகள் நன்செய் நிலங்கள் சூழ்ந்த பகுதிகளாகும்.

சமயம் :

இங்குள்ள மக்கள் சைவம் வைணவம் என்ற பாகுபாடு இல்லாமல் அழகரையும், மீனாட்சியையும் வணங்குகின்றனர்.

சிறு தெய்வங்கள் :

1) அய்யனார் சாமி, 2) உத்தண்டராயன், 3) மகாகாளி, 4) சின்னக் கருப்பன், 5) பெரிய கருப்பன், 6) கும்மட்டிக் கருப்பன், 7) நொண்டிக் கருப்பன் போன்ற சிறு தெய்வங்கள் பெரும்பாலும் எல்லாக் கிராமங்களிலும் காணப்படுகின்றன.

மக்கள் நிலை :

அழகர்கோயிலைச் சுற்றி அமைந்துள்ள மக்கள் பெரும்பாலும் விவசாயிகளே. அதிலும் கள்ளர் இனத்தைச் சார்ந்த அம்பலகாரர்களே அதிகம். இவர்கள் அழகர் கோயிலுடன் தொடர்புடையவர்களே. இவர்களது குடும்ப தெய்வம் அழகரே. அழகரின் காவல் தெய்வமான கருப்பண்ண சாமியே இவர்களுக்கும் காவல் தெய்வமாகத் திகழ்கிறார். சிறுபான்மையோர் கோனார் இனத்தைச் சார்ந்தவர்கள் உள்ளனர். இந்தக் கோனார் இனத்தவர்கள் ஆடு, மாடு மேய்த்தல் தொழிலினையும், சொந்தத்தில் விவசாயத் தொழிலினையும் செய்கின்றனர்.

கள்ளர் திருமணமுறை :

இவர்கள் திருமணத்திற்கு முன்பு பரிசம்போடுதல் நிகழும். இதில் பெண் வீட்டாரும், மாப்பிள்ளை வீட்டாரும் கலந்து கொண்டு 'இன்னார் பெண்ணை இன்னாருக்கு மண முடிக்க இரண்டு ரூபாய் பரிசம் என்பர்' பெரும்பாலும் வீட்டில் பெரியவர்கள் பார்த்தே பெண்களை முடிவு செய்வார்.

தாலி கட்டும் முறை :

தாலி கட்டச் செல்லும் பொழுது மஞ்சள், உப்பு, வெற்றிலை பாக்கு, பூ, தேங்காய், பழம், பரிசச் சீலை முதலியவற்றுடன் மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டிற்குச்

சென்று பெண்ணைத் தாலி கட்டி அழைத்து வருவர். இங்கு குறிக்கத் தக்க சிறப்பு அம்சம், தாலி கட்டப் போகும் பொழுது பெண் வீட்டிற்கு மாப்பிள்ளை செல்ல மாட்டார். மாப்பிள்ளையின் சதோதரியே தனது தாய், தந்தை சுற்றத்துடன் சென்று, பெண் வீட்டில் தாலி கட்டிப் பெண்ணை அழைத்து வருவாள். தாலி கட்டிய இரவு தான் பெண்ணை அழைத்து வருவர். அவ்வாறு அழைத்து வருங்கால், அன்றைய பொழுது விடியும் முன் பெண்ணை மாப்பிள்ளை வீட்டிற்கு அழைத்து வந்துவிடுவர். விடிந்த பின்பு அழைத்து வந்தால், "விடிஞ்சு வந்தாள்" என்று எல்லோரும் ஏளனமாகப் பேசுவர்.

தாலியின் அமைப்பு:

இவர் தம் தாலியின் அமைப்பு விசித்திரமானது. குதிரை முடியுடன் இணைந்த கறுப்புக் கயிற்றில் 7 அல்லது 9 முடிச்சுகளுடன் ஆன கயிற்றினை மாப்பிள்ளையின் சகோதரி, பெண்ணிற்குக் கழுத்தில் கட்டி அழைத்து வருவாள்.

வேவு அழைத்தல்:

தாலி கட்டி மாப்பிள்ளை வீட்டிற்குச் சென்ற சில தினங்களில், பெண் வீட்டார், மாப்பிள்ளை, பெண்ணை, மறுவீடு அழைத்து வருவர். கள்ளர்கள் மறுவீடு அழைத்தலை வேவு அழைத்தல் என்று குறிக்கின்றனர். அவ்வாறு வேவு அழைக்குங்கால், பெண்வீட்டார் மாப்பிள்ளை வீட்டாருக்கு 9 மரக்கால் அல்லது 7 மரக்கால் அரிசியும், சேவலும் கொண்டு செல்வர்.

பெண் வீட்டுக்காரர் கொடுக்கும் சீர்:

கெண்டி களம் -. 1, இடும் பரிசம் – 40 ரூ, மாமிப் புடவை – 7, ஈரணை ஏறு – 2, பசு – 5, தாலி கட்டுப்பணம்

– 5 ரூ, குடிபடை மூன்றில் – ஒன்று, (பெண்ணுக்கு ஏவல் புரிய)

சங்கொலி:

சங்கின் ஒலியினையும், பெண்களின் குலவை ஒலியினையும் வைத்துக் கொண்டே இவர்கள் திருமணம், வேவு அழைத்தல், சீர்கொடுத்தல் முதலான சடங்குகளைச் செய்கின்றனர்.

சடங்குகள் இல்லை:

இவர்கள் திருமணத்தில் அதிகமான சடங்குகள் இல்லை. அம்மி மிதித்து அருந்ததி பார்க்கும் பழக்கம் இல்லை. இவர்கள் திருமணத்திற்கு புரோகிதர் வரமாட்டார். சங்கொலியிலும், பெண்கள் தம் குலவையொலியிலுமே திருமணத்தை முடித்துக்கொள்வர்.

அறுத்துக் கட்டும் பழக்கம்:

இவர்களுக்குள் பெண்ணுக்கு மாப்பிள்ளையைப் பிடிக்காவிட்டாலும், மாப்பிள்ளைக்குப் பெண்ணைப் பிடிக்காவிட்டாலும், மந்தையில், விவகாரம் வைத்து விவகாரத்து செய்து கொள்வர். விவாகரத்து செய்யும் முன்பு மந்தைக்காரர்களுக்கு 8-1/2 ரூ கொடுத்து ஒரு வைக்கோல் துரும்பினை மந்தையில் வைத்து ஊரார் மத்தியில் சாட்சியம் செய்த பின்பு பெண் தாலியை அறுத்து மாப்பிள்ளை கையில் கொடுத்துவிடுவாள்.

பெண் மகப்பேறு அடைந்த 5 ஆவது அல்லது 7 ஆவது மாதத்தில் இந்த இனத்தவரிடம் பொட்டுப் பானை கொடுக்கும் பழக்கம் உண்டு.

6 மரக்கால் அரிசி பிடிக்கும் பெரிய மண் பானையில் வண்ணம் அடித்து அரிசிமாப் புள்ளியினால் கோலம்,

வண்ணம் போட்டு அப்பானையினை அலங்கரிப்பர். அந்தப் பானைக்கு மேல் ஒரு சிறிய பானை, இதனையும் அலங்காரம் செய்து பச்சரிசி போட்டு நிரப்புவர். அதற்கு மேல் ஒரு பானை இதனையும் நன்கு மாக் கோலத்தால் அலங்கரித்து பழம், தேங்காய், வெத்திலை பாக்கு போட்டு நிரப்புவர். பின்பு ஒரு நார்ப்பெட்டியில் 13 படி அல்லது 15 படி அரிசி போட்டு, அதன் மீது நெய்ச்சாடி வைத்து அப்பெட்டியுடன் ஒரு ஆட்டுக்கிடாவையும் மாப்பிள்ளை வீட்டாருக்குச் சீராக எடுத்துச் சென்று கொடுப்பர்.

பின்பு ஒன்பதாவது மாதம் பெண்ணைத் தாய் வீட்டிற்கு மகப் பேற்றுக்காக அழைத்து வருவர். பெண்ணிற்குக் குழந்தை பிறந்தவுடன் மாப்பிள்ளை வீட்டார், ஆட்டுக்கிடா அரிசிப் பானைகளுடன் தமது பங்காளிகளைக் கூட்டிக் கொண்டு பெண் வீட்டிற்குச் செல்வர்.

குழந்தைக்கு ஐந்தாவது நாள் அல்லது ஏழாவது நாளே பெயரிட்டுவிடுவர். இப்பெயரிடும் விழா, மாப்பிள்ளை வீட்டார் வந்த பின்பு பெண் வீட்டில் நிகழும். குழந்தைக்கு ''வெள்ளமலை சாமி'', "கருப்பையா", "சோலை மலை" என்று இறைவன் பெயரினையே இட்டு அழைப்பர்.

பெண் குழவியுடன் மாப்பிள்ளை வீடு போகும் பொழுது குழந்தைக்குத் தொட்டில் சேலை, தொட்டில் கயிறு, பையனுக்கும், தாய்க்கும் துணி மணிகள், குழவிக்குக் காலில் காப்பு, இடையில் அரைஞாண் ஆகிய சீர்கள் செய்யப்படும். குழந்தைக்கும் தாய்க்கும், பிள்ளை மாடு என்று ஒரு பசுவினைக் கொடுத்து அனுப்பவர். 6 மாதம் கழித்துப் பையனுக்கு நெயச் சோறு கொடுத்து விழாக் கொண்டாடுவர். குழந்தைக்குக் காது குத்தி முடி இறக்குதல் எல்லாம்,

பெண்வீட்டார் மாப்பிள்ளை வீட்டிற்கு வந்து செய்வர்.

இவர்கள் தங்களது, அக்கா, தங்கை மகளை மணம் முடிக்கமாட்டார்கள். தங்களது அப்பாவின் தங்கை மகளையோ அல்லது தங்களின் தாயின் தமையன் மகளையோ தான் மணம் முடிப்பர். இது இன்றும் உள்ள சிறப்பான பழக்கமாகும். இவர்கள் இறந்தோர்க்குச் செய்யும் சடங்குகள் சில குறிக்கத் தக்கன. பிணங்களைப் புதைக்கும் வழக்கமே இவர்களிடம் காணப்படுகின்றது.

தாலி அறுக்கும் பழக்கம்:

கணவன் இறந்துவிட்டால், மனைவிக்கு முக்காடு போட்டு, பிணம் வீட்டில் இருக்கும் பொழுது, பிணத்திற்கு மாலை போட்டுப் பிணத்தின் முன்பு மனைவியை நிறுத்துவர். பின்பு மனைவியின் தாலிக் கயிற்று நூலினை அறுத்துக் கணவரின் வலது கையில் கட்டுவர்.

மந்தையில் கொள்ளி உடைத்தல்:

இவர்கள் பிணத்தைத் தூக்கிச் செல்லும் பொழுது மந்தைவரை மனைவியையும் கூட்டிச் செல்வர். பிணத்தை மந்தையில் உள்ள முச்சந்தியில் வைத்து, இறந்த கணவனுக்கு அரிசியினை அள்ளிப் போடச் செய்வர். பின்பு பெண்ணின் தகப்பனார் கொண்டு வந்த சீலையினைப் பெண்ணின் தலையில் போடுவர். மனைவியின் தலையில் தண்ணீர்ப் பானையினை வைத்து, பிணத்தை மூன்று முறை சுற்றி வரச் செய்வர். மனைவி, தனது கணவனின் பிணத்தை மூன்று முறை வலம் வரும் போது, ஒவ்வொரு முறையும் நாவிதன் தனது கையில் உள்ள கோலால் மனைவியின் தலையில் உள்ள மண்பானை மீது ஒரு துளையிடுவான். இப்படி மூன்று துளை இட்டவுடன், நாவிதன் பெண்ணின் தலையில் இருந்த மண் பானையினை வாங்கித் தெற்குப்புறம் போய் உடைப்பான்.

இறந்தவனுக்கு ஆண் குழந்தை இருந்தால், பிணத்தைப் புதைக்கும் முன் பையனுக்கு மொட்டை அடித்து, மயானத்தில் கொள்ளிப் பானையை உடைக்கச் செய்வர். மயானத்தில் பிணத்தைப் புதைத்த பின்பு பறையன், பள்ளன், பண்டாரம், நாவிதன், வண்ணான் முதலானவர்க்குக் காசு கொடுப்பது வழக்கம். இறந்து 10 நாள் கழித்துத் துறைஏத்தல் என்ற சடங்கினைச் செய்வர். இதனை ''எள்ளும் தண்ணியும் இறைத்தல்'' என்றும் வழங்குவர். பிணம் புதைத்த இடத்திற்கு 10 பேர்கள் சென்று, புதைத்தவன் தலைப்பாகத்திற்கு அருகில் நவதானியம் போட்டுத் தண்ணீர் விட்டுவிட்டு வருவர். இந்த நவதானியம் நன்கு முளைத்தால் விவசாயம் நன்கு விளையும் என்று நம்புகின்றனர்.

கள்ளர் கொண்டாடும் திருவிழாக்கள்:

1) சித்திரைத் திருவிழா
2) ஆடித் திருவிழா
3) மாட்டுப் பொங்கல் – ஏறுதழுவுதல்
4) கார்த்திகைத் திருவிழா
5) மார்கழி மாதம் இவர்கள் அழகர் கோயிலுக்கு வந்து, ''இறைவன் கள்ளர்களைப் பிடிக்க கள்ளர் வேஷம் கோடும்'' திருவிழாவில் கலந்த கொள்கின்றனர்.

அழகர்கோயில் சமுதாயத்தில் வெள்ளியக்குன்றம் ஜமீன்தார்:

அழகர்கோயில் சமுதாயத்தில் வெள்ளிக் குன்றம் ஜமீன்தார் சிறப்பிடம் பெறுகின்றார். இவர் அம்பலகாரர் இனத்தைச் சார்ந்தவர். இந்த ஜமீன்தார் வம்சம் இன்றளவும் அழகரை வண்டியூர் வரை பத்திரமாக அழைத்துச் சென்று மலை வந்து சேரும் வரை அவர்க்கும் அவரது உடைமைகளுக்கும் காவல் பொறுப்பினை ஏற்கின்றனர்.

10 தமிழக வரலாற்றில் அழகர்கோயில்

தமிழக வரலாற்றில் அழகர்கோயில் எனும் ஊரும் கோயிலும் எத்தகைய நிலையினைப் பெறுகின்றன என்று காண்போம்.

1) கிறித்துவிற்கு முந்தைய வரலாற்றில்
2) சங்ககால வரலாற்றில்
3) பல்லவர் கால வரலாற்றில்
4) முற்காலப்பாண்டியர் கால வரலாற்றில்
5) சோழர் கால வரலாற்றில்
6) சோழ பாண்டியர் வரலாற்றில்
7) பிற்காலப் பாண்டியர் வரலாற்றில்
8) ஹொய்சள மன்னர்கள் வரலாற்றில்
9) விஜய நகர மன்னர்கள் வரலாற்றில்
10) அரவீடு இனத்தவர் வரலாற்றில்
11) பாண மன்னர் தம் வரலாற்றில்
12) நாயக்கர் வரலாற்றில்

எனக் கால வாரியாக வரலாற்றை ஆய்வோம்.

கிறிஸ்துவிற்கு முந்தைய வரலாற்றில்:

கிறிஸ்துவிற்கு முந்தைய அழகர்கோயில் வரலாற்றினைத் தெரிந்து கொள்ள, அழகர்மலையின் ஒருபுறத்தில் உள்ள தமிழகக் கல்வெட்டுகள் உதவி புரிகின்றன. இக்கல்வெட்டுகள் வாயிலாக அழகர்மலையில் சமணர்கள் வாழ்ந்தனர் என்று தெரிந்து கொள்கிறோம். இக்கல்வெட்டின் காலம்

கிறிஸ்துவிற்குச் சுமார் 200 அல்லது 300 ஆண்டுகட்கு முற்பட்டதாகக் கருதப்படுகின்றது. அருகர் மலை என்று முன்பு பெயர் இருந்திருக்கலாம். ''அழகர் மலை'' என்று மாறியிருக்கக் கூடும் என்று கொள்வதில் தவறில்லை என்பார் முனைவர் இரா.நாகசாமி, அவர்கள்.

இக்கல்வெட்டுகள் இருந்த காலத்தில் அழகர்மலையில் அழகர்கோயில் இருந்ததா என்று தெரியவில்லை. கிறிஸ்துவிற்கு முன்பு இம்மலையில் சமணர் வாழ்ந்துள்ளனர் என்பதை இம்மலையில் உள்ள படுக்கைகளும், அதிலுள்ள கல்வெட்டுகளும், அங்கு காணப்படும் இயற்கைக் குகை போன்ற மிகப் பெரிய அமைப்புகளும் எடுத்துக்காட்டுகின்றன. எனவே அழகர்மலை கிறித்துவிற்கு ஏறத்தாழ 2500 ஆண்டுகட்கு முந்திய வரலாற்றுப் பெருமையினை உடையது எனலாம்.

சங்ககால வரலாற்றில்:

சங்க இலக்கியமான பரிபாடலில் அமைந்துள்ள 15 ஆவது பாடல் இம்மலையின் சிறப்புப் பற்றிப் பலவாறு பேசுகிறது.

முதற்சான்று:

தமிழ் மொழி இலக்கியத்தைப் பொறுத்த வரையில், பரிபாடலே அழகர் மலையில் உள்ள இறைவனை முதற்கண் பாடுகிறது. இங்குள்ள இறைவனை

" எவ்வயின் உலகத்தும் தோன்றி, அவ்வயின்
மன்பது மறுக்கத் துன்பம் களைவோன்
அன்பது மேஎ ''இருங்குன்றத்தான்"
(பரி 15 வரி 50–53)

என்று அழைக்கின்றது. இங்கு "இருங்குன்றத்தான்" என்று

அழைத்தது குறிக்கத் தக்கது. மேலும் இம்மலையில் உள்ள இறைவனைப் பற்றிப் பாடுங்கால், இம்மலையின் கண் பலராமனுக்கும், திருமாலுக்கும் கோவில் இருந்ததையும், இவ்விருவரையும் கண்டு வணங்கினால் துறக்க வாழ்வு இனிது கிட்டும் என்பதையும்

" . . . கடலும் கானலும் போலவும்
புல்லிய சொல்லும் பொருளும் போலவும்
எல்லாம் வேறுவேறு உருவின் ஒரு தொழில்
இருவர்த் தாங்கு நீள்நிலை ஓங்கிருங்குன்றம்'"

என ற வரிகளால் அறிகிறோம்.

இம்மலையில் உள்ள சிலம்பாறு பற்றிச் செப்புங்கால்

" அலங்கும் அருவி ஆர்த்திமிழ்பு இழியச்
சிலம்பாறு அணிந்த சீர்கெழு திருவின்
சோலையொடு தொடர் மொழி மாலிருங் குன்றம்"

என்றும் பாடுகிறது. திருமுருகாற்றுப்படையும் இம்மலையினைச் சிறப்பித்துப் பாடியுள்ளதை ஏற்கெனவே கண்டோம். சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் இம்மலையைப் பற்றி சிறப்பாகப் பாடியுள்ளார்:

திருமால் குன்றம் (11–91) என்றும், சிலம்பாறு பற்றிக் கூறுங்கால், நிலம்பக வீழ்ந்த சிலம்பாற்றகன்றளை (11–108) என்றும், இங்குள்ள இறைவன் பற்றிக் கூறுங்கால், ... "மலைமிசை நின்றோன் பொற்றாமரைத்தாள் உள்ளம் பொருந்துமின்". . . .'' மற்றவன் (11–133–134) என்றும், "புள்ளணி நீள்கொடி" என்று திருமாலின் துவஜ ஸதம்பம் பற்றியும் புண்ணிய சரவணம், பவகரணி, இட்டசித்தி முதலான அழகர்கோயிலில் உள்ள புண்ணிய தீர்த்தங்களையும் குறிக்கினறார். இன்று தீர்த்தங்களின் பெயர்கள் மாறி

வழங்குவதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

பல்லவர் கால வரலாற்றில்:

பல்லவர் ஆட்சியில் வைணவமும், தமிழும் தழைத்தோங்கியது என்பது அனைவரும் அறிந்த ஒன்றே. பெரும்பாலும் ஆழ்வார்கள் அனைவரும் பல்லவர் வரலாற்றுடன் தொடர்புடையவர்களே. அழகர்மலையினையும் அங்குள்ள அழகரையும் பாடிய ஆழ்வார்கள் அனைவரும் பல்லவர் காலத்தில் வாழ்ந்தவர்களே.

பூதத்தாழ்வார் அழகர்மலை பற்றி மூன்று பாடல்கள் பாடியுள்ளார். இம்மூன்று பாடல்களில் ஒன்றில் சோலைமலை என்றே பாடுவார்.

"உணர்ந்தாய் மறைநான்கும் ஓதினாய் நீதி
மணந்தாய் மலர்மகள் தோள்மாலே! மணந்தாய்போய்
வேயிருஞ் சாரல் வியலிருஞாலம் சூழ்
மாயிருஞ் சோலை மலை" – (இயற்பா: 48)

"பன்னாள் பயின்றது அணிதிகழும் சோலை அணிநீர் மலையே'' (இயற்பா 46) என்று இதன் தொன்மை பற்றிப் பாடுவார்.

"பண்டெல்லாம் வேங்கடம் பாற்கடல் வைகுந்தம்
கொண்டங் குறைவார்க்குக் கோயில்போல்வண்டு
வளங்கிளரும் நீள்சோலை வண்பூங்கடிகை
இளங்குமரன் தன் விண்ணகர்"

இப்பாசுரம் வாயிலாகப் பேயாழ்வார் வேங்கடத்தையும் (திருப்பதி) திருமாலிருஞ் சோலையையும், இணைத்துப் போற்றி, அதன் தொன்மை கூறுவது கண்டு மகிழத் தக்கதாகும்.

திருமங்கையாழ்வார் திருமாலிருஞ் சோலைமலை பற்றி 30 பாடல்களும் நம்மாழ்வார் 46 பாடல்களும்

பாடியுள்ளனர். எம்பெருமானைப் பெரியாழ்வார் ''மதில்சூழ் சோலைமலைக்கரசே'' என்று போற்றியுள்ளார்.

முற்காலப்பாண்டியர் வரலாற்றில் அழகர்கோயில் சீரும், சிறப்பும் பெற்றுக் கோட்டை சூழ்ந்த கோயிலாகவும், தென்னன் கொண்டாடும் திருமாலிருஞ் சோலையாகவும் இருந்தது என்பதைப் பெரியாழ்வார் பாசுரங்கள் உறுதி செய்கின்றன.

சோழர்கால வரலாற்றில் இக்கோயில் இருந்திருக்கின்றது. சிவபாத சேகரனான இராஜராஜ சோழன் இக்கோயிலுக்குத் தனது 22–வது ஆட்சி ஆண்டில் நிலங்களைத் தானமாகக் கொடுத்துள்ளான். (இ.க.ஆ.அ 80/1910)

ஜடாவர்மன் சுந்தர சோழ பாண்டியனின் கி.பி. 1022 கல்வெட்டு ஒன்று அழகர்கோயிலில் சுந்தர பாண்டியன் மண்டபத் தூணில் உள்ளது. (தெ.இ.கல் தொகுதி XIV 173). இக்கல்வெட்டு இவனது 22 வது ஆட்சியாண்டுக் கல்வெட்டாகும். இவனுக்குப் பின்னுள்ள சோழ பாண்டியர் தம் கல்வெட்டுகள் கிடைக்கவில்லை. இக்கல்வெட்டுகள் வாயிலாகச் சோழர் வரலாற்றில் அழகர்கோயில் நல்ல நிலையில் இருந்துள்ளது என்று கூறலாம்.

பிற்காலப் பாண்டியர் கல்வெட்டுகள் 60–க்கு மேல் அழகர்கோயிலில் உள்ளன. இக்கல்வெட்டுகள் வாயிலாகப் பிற்காலப் பாண்டியர் இக்கோயிலுக்குச் செய்த சிறந்த தானங்கள், திருப்பணிகள் பற்றி விரிவாக அறிகிறோம்.

முதலாம் சடையவர்மன் குலசேகரன் (கி.பி.1190 – 1218)

இவனது 2 ஆம் ஆட்சி ஆண்டு முதல் கல்வெட்டுகள்

உள்ளன. பூவின் கிழத்தி எனும் மெய்க்கீர்த்தியுடன் தொடங்குகின்றன. இவனுடைய கல்வெட்டுகள் சுமார் 18–க்கு மேல் உள்ளன.

முதலாம் மாறவர்மன் விக்ரம பாண்டிய தேவன் (1218–1232)

இவனுடைய கல்வெட்டுகள் நான்கு உள்ளன. (கி.பி.1249–1255) "திருமகள் ஜயமகள்" என்று இவன் கல்வெட்டுகள் தொடங்குகின்றன.

முதல் மாறவர்மன் சுந்தர பாண்டியன் (கி.பி.1216–1244)

இவனது மூன்று கல்வெட்டுகள் அழகர் கோயிலில் உள்ளன. "பூமருவிய திருமடந்தையும்" என்றும், "சோணாடு கொண்டான்" என்றும் இவனது கல்வெட்டுகள் தொடங்குகின்றன.

இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் 1238–1255:

பூமலர்திருவும் பொருசெயமடந்தையும் என்று இவனது கல்வெட்டுகள் தொடங்குகின்றன. இவனது 15–க்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் அழகர்கோயிலில் உள்ளன.

முதலாம் ஜடாவர்மன் வீரபாண்டியன்:

இவனுடைய கல்வெட்டுகள் நான்கு உள்ளன. இவன் கி.பி.1253–1283 வரை ஆண்டான்.

ஜடாவர்மன் சுந்தர பாண்டிய தேவன்(கி.பி.1250–1284):

இவன் பெரும்புகழ் படைத்த மன்னனாவான். இவன் காலத்தில் பாண்டிய நாட்டு எல்லை விரிந்து இருந்தது. இவனுக்குத் துணையாக (1) ஜடாவர்மன் நாயனார் வீரபாண்டியன் (2) அண்ணாழ்வி குலசேகரன் போன்றோர் இருந்தனர். இவன் காலத்தில் அழகர்கோயில் சீரும் சிறப்புடன் உயர்ந்த நிலையில் இருந்தது எனலாம். (இ.க.ஆ.அ.84/29: 320:321/130)

முதலாம் மாறவர்மன் குலசேகரன் – (கி.பி.1268–1311):

இவனது கல்வெட்டுகள் மூன்று அழகர்கோயிலில் இதுவரை கிடைத்துள்ளன. அழகர்கோயில் கல்வெட்டுகளில் கிடைத்தவற்றில் இதுவரை முடிவு செய்யப்படாத கல்வெட்டுகள் சுமார் 46 கல்வெட்டுகள் எனலாம். இக்கல்வெட்டுகளுள் பிற்காலப் பாண்டியர் கல்வெட்டுகளும் இன்னும் பல இருக்கலாம்.

ஜடாவர்மன் இராஜராஜ சுந்தர பாண்டியன் (கி.பி.1310–1332):

இந்த சுந்தர பாண்டியன் காலத்தில் முகமதியரின் முற்றுகை ஏற்பட்டது. மாலிக்காபூர், பெண்டக் மாலிக் போன்றோர் தம் முற்றுகையால் அழகாபுரிக் கோட்டை மதில்கள் பொலிவிழந்துவிட்டன.

ஹொய்சளர் வரலாற்றில்:

திருமாலிருஞ்சோலை நின்றருளிய பரமஸ்வாமிகள் மீது, ஹொய்சள மன்னனான நிசங்க பிரதாபவீர சக்கரவர்த்தி சோமேஸ்வரன் மிகுந்த பேரன்பு பூண்டு விளங்கியுள்ளதை இவனது அழகர்கோயில் கல்வெட்டுகள் நன்கு விளக்கும். இவன் வீர சோமேஸ்வரன் என்ற ஒரு சந்தியினை அமைத்துக் கொடை கொடுத்துள்ளது குறிக்கத் தக்க ஒன்றாகும். (இ.க.ஆ.அ. 292, 293/30)

மேற்குறித்த கல்வெட்டுக் குறிப்புகளில் குறிக்கப்பெறும் மன்னன் இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் சமகாலத்தவன் ஆவான். இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன், சோழ மன்னன் மூன்றாம் இராசேந்திரனால் தோற்கடிக்கப்பட்ட பொழுது, இந்த வீரசோமேஸ்வரன் சோழ மன்னனைத் தோற்கடித்துப் பாண்டியன் முன்போல் தன்னாட்டை ஆள்வதற்கு உதவி செய்தான் என்பதும் இங்கு நினைவு

கூரத்தக்கது.

விஜயநகர மன்னர்கள் வரலாற்றில்:

கிருஷ்ண தேவராயரின் கல்வெட்டு (சகம் 1435) (கி.பி.1513) பதினெட்டாம்படிக் கோபுரத்தில் உள்ளது. இதில் இவரது கொடை குறிக்கப்பட்டுள்ளது. அச்சுத தேவராயரது மூன்று கல்வெட்டுகளும் (1454 சகம் – கி.பி.1532), சதாசிவ தேவராயரது நான்கு கல்வெட்டுகளும், வேங்கட தேவராயரது ஒரு கல்வெட்டும் (சகம் 1511 – கி.பி.1589) இங்குள்ளன.

இந்த விஜயநகரத்து மன்னர்கள் மாலிக்காபூரின் படையெடுப்பிலிருந்து இக்கோயிலைக் காப்பாற்றியவர்கள். இங்குள்ள இறைவனுக்கும் இக்கோயிலுக்கும் ஏராளமான கொடைகளைக் கொடுத்தவர்கள் என்பதை இவர் தம் கல்வெட்டுகள் நமக்குக் காட்டுகின்றன.

அரவீடு வம்சத்தார் வரலாற்றில் (கி.பி.1567–1644):

அரவீடு வம்சத்தார் வரலாற்றில் திருமாலிருஞ் சோலை சிறந்த இடத்தினைப் பெறுகிறது. அழிந்த நிலையில் உள்ள இராயர் கோபுரம் இவர்கள் கட்டியதே. (இ.க.ஆ.அ.93/29) இக்கல்வெட்டுக் குறிப்பில் அரவீடு வம்ச மன்னர் ஒரு சிலர் குறிக்கப்படுகின்றனர். (இ.க.ஆ.அ. 93/29 129/1932). இவர் வம்சம் கி.பி.1567 முதல் கி.பி.1644 வரை இருந்துள்ளது. மேற்குறித்த கல்வெட்டு இவர்தம் வரலாற்றினைக் கூறும் கல்வெட்டாகும். இக்கல்வெட்டின் வாயிலாக இவர் தம் பரம்பரை வெளிப்படுகிறது.

பாண மன்னர்கள் வரலாற்றில்

அழகர்கோயில் வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுபவர்கள் பாண மன்னர்கள் (வாணர்கள்). "திருமாலிருஞ் சோலை நின்றான்" என்ற இப்பாண மன்னர்

கல்வெட்டுகள் அழகர்கோயிலில் உள்ளன. இக்கல்வெட்டுகளின் வாயிலாக இவர்கள் திருமாலிருஞ்சோலைப் பெருமானிடம் பேரன்பு கொண்டிருந்தனர் என்பது அறியப்படுகிறது. அழகர் ஆண்டாளின் பாசுரங்களில் "சுந்தரத் தோளுடையான்" என்று கூறுவது போல், இவர்களும் தங்களைச் சுந்தரத் தோளுடையான் என்று கூறிக் கொள்வதை கல்வெட்டுகளால் அறிகிறோம். இவர்கள் திருமாலிருஞ் சோலையைத் தலைநகராகக் கொண்டு ஆண்டனர் என்பதற்கு அழகர்கோயிலில் உள்ள (இ.க.ஆ.அ.1, 12/1932, 85/1929, 307/1930) கல்வெட்டுக் குறிப்புகள் எடுத்துக்காட்டாக உள்ளன. இவர் தம் காலத்தில் அழகர்கோயிலில் உள்ள அழகாபுரிக் கோட்டையும், அழகர்கோயிலும், திருச்சுற்றுகளும், திருப்பணி செய்யப்பட்டன என்பதையும் இக்கல்வெட்டுக் குறிப்புகள் கூறுகின்றன.

இப்பாண மன்னர்களுடைய கல்வெட்டுகள் புதுக்கோட்டை, நெக்கோணம், ஸ்ரீவில்லிபுத்தூர், போன்ற இடங்களில் காணப்பட்டாலும், அழகர்கோயிலில் அதிகமான அளவ, இவர்களது கல்வெட்டுகள் காணப்படுகின்றன என்பது குறிக்கத் தக்க ஒன்றாகும்.

திருமாலிருஞ்சோலை நின்றான் மாவலி வாணாதிராயர், மாவலி வாணாதிராயர் உறங்காவல்லி தாசன், ஆகிய இவ்விரு பாண மன்னர்களும் அழகரிடம் பேரன்பு காட்டினர் எனலாம். இவர்கள் அழகாபுரியைத் தலைநகராகக் கொண்டு மதுரையைச் சுற்றியுள்ள பகுதிகளை ஆண்டனர். அரண்மனையும் அழகர்கோயிலில் இருந்தது (307/1930). அவர்களது கல்வெட்டு ஆர்யன் மண்டபத்தில் உள்ள தெற்குச் சுவரில் உள்ளது. இதில். சக ஆண்டு

1386(கி.பி.1464) குறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டுக் குறிப்பின் வாயிலாக இம்மன்னன் அதாவது திருமாலிருஞ் சோலை நின்றால் மாவலி வாணாதிராயர் காலத்தில் உபானம் முதல் ஸ்தூபி வரை அழகர்கோயிலில் திருப்பணி நடந்தது என்று அறிகின்றோம். இந்தத் திருப்பணி திருவாளன் சோமயாஜி என்ற வாணாதிராயரின் அரசுப் பணியாளரின் தலைமையின் கீழ் நடந்தது என்றறிகின்றோம். மற்றொரு கல்வெட்டு வாயிலாகத் ''திருமாலிருஞ்சோலை நின்றான் மாவலி வாணாதிராயன் மாத்திராங்குலம்'' என்ற நீட்டல் அளவைப் பெயரும் இறைவன் பெயரிலும் இவனது பெயரிலும் அமைந்திருந்ததை அறிகின்றோம்.(85/1929) இக்கல்வெட்டு தாயார் சன்னதியியல் உள்ளது. இவனது கொடி கருடக் கொடி. இவன் பாண்டியர்களுக்குப் பகைவன். கருடனைக் கொடியாக உடையவன் என்பதை நெக்கோணம் கல்வெட்டு கூறும். இவன் அழகர்கோயில் உகந்தருளும் பெருமாளான திருமாலிருஞ்சோலை நின்றாரிடம் அளவிலாப் பக்தி பூண்டவன். இவனது இரு கல்வெட்டுகளும் அழகர் திருவுள்ளம் என்றே தொடங்குகின்றன. இவனது பெயரே திருமாலிருஞ்சோலை நின்றான் என்பதாகும். இவன் தனது மகனுக்கும் திருமாலிருஞ்சோலை நின்றான் என்றே பெயர் கொடுத்துள்ளான்.

இவனது கொடி பற்றிய அழகிய பாடல்:

"சென்னிப் புலிக் கொடியும் தென்னன் கயல் கொடியும்
மின்னும் கழல் பிறையோன் விற்கொடியும் மன்னும்
வருசைக் கொடைத் திருமால் மாவலிவாணன் தன்
கருடக் கொடியே கொடியாம் காண்"

இத்தகைய பெருமகன் அழகர்கோயிலில் பல

திருப்பணிகளைச் செய்துள்ளான். அங்குள்ள நிர்வாகத்தைச் சரி செய்துள்ளான். அழகாபுரியையே தலைநகராகக் கொண்டு ஆண்டுள்ளான். தமிழக வரலாற்றில் மிகச் சிறந்த இடத்தைப் பெற்றுள்ளான் இவன் என நெக்கோணம் சேவலூர், புதுக்கோட்டை மாவட்டக் கல்வெட்டுகளும் குடுமியான்மலைக் கல்வெட்டுகளும் கூறும். இவன் திருமாலிருஞ்சோலைப் பெருமானுக்கு அம்மி கொடுத்துள்ளான். "சுந்தரத் தோளுடையான் சந்தி" எனும் பெயரில் அழகர்கோயிலில் சந்தியும் ஏற்படுத்தியுள்ளான்.

நாயக்கர் வரலாற்றில்:

விஸ்வநாத நாயக்கர் (கி.பி.1558 – 1563), சொக்கநாத நாயக்கர் முதலானவர் தம் கல்வெட்டுகள் இங்கு காணப்படுகின்றன. நாயக்க மன்னர்களில் முதல் மன்னனான விஸ்வநாத நாயக்கன் அழகரிடம் அளவற்ற அன்பு கொண்டவன் என்பதை அவனுடைய கல்வெட்டுகள் கூறுகின்றன. இவனது சேனைத் தலைவர் அரிய நாத முதலியார், அழகர்கோயிலுக்கு வேப்பங்குளம், குருத்தங்குளம் முதலான ஊர்களைக் கொடுத்துள்ளதாக இங்குள்ள கல்வெட்டுகள் கூறும். இக்கோயிலில் அரிய நாத முதலியார் கட்டளையை நிறுவியவரும் இவரே. முத்துக் கிருஷ்ணப்ப நாயக்கரும், முத்து வீரப்ப நாயக்கரும் அழகருக்குக் கொடைகள் கொடுத்துள்ளனர்.

திருமலை நாயக்கர் (கி.பி.1623 – 1659):

இவர் அழகரிடம் அளவற்ற பக்தி பூண்டவர். இவர் அழகர்கோயிலில் அழகான அரண்மனையைக் கட்டியுள்ளார். இந்த அரண்மனை ஹைதர் அலியின் தாக்குதலில் இடிக்கப்பட்டது. இதைப் பற்றி மதுரை கெஜட்டிலும்

குறிக்கப்பட்டுள்ளது. இந்த மண்டபம் திருமலை நாயக்கர் மகால் போன்று அமைக்கப்பட்டிருந்தாகக் கெஜட் கூறும். திருமலை அழகாபுரியை இரண்டாவது தலைநகராகப் பயன்படுத்தியுள்ளார். தமது கோடை காலத்தைத் திருமலை இங்கு தான் கழித்துள்ளார்.

இது பற்றிப் ஹீராஸ் பாதிரியாரும் குறித்துள்ளார். மேலும் ஹீராஸ் பாதிரியார் இந்த அரண்மனைக்கு எதிரில் அமைந்துள்ள, இப்பொழுது அழிந்த நிலையில் உள்ள திருமலையின் அழகிய உருவத்துடன் கூடிய மண்டபம் பற்றியும் குறிக்கின்றார்.

அழகர்கோயிலில் அமைந்துள்ள மூன்றாம் பிரகாரம் திருமலை நாயக்கர் காலத்தில் திருப்பணி செய்யப்பட்டது. இதற்குச் சான்று தரும் வகையில் அவர் தம் உருவச் சிலைகள் நான்கு இடங்களில் உள்ளன. திருப்பள்ளியறை அமைத்தவரும் இவரே. இதன் முன்பு வடக்குப்புறம் இவரது உருவச்சிலை உள்ளது. தந்த விமானம், தந்தப் பல்லக்கு முதலானவை இவரால் அமைக்கப்பட்டவை மற்றும் இங்குள்ள யாகசாலைகளும் இவரால் திருப்பணி செய்யப்பட்டவை.

சொக்கநாத நாயக்கர்:

இவர் இக்கோயில் திருவிழாவிற்கு நிலங்களைக் கொடுத்துள்ளார் என்பதை இவருடைய கல்வெட்டு ஒன்று குறிக்கின்றது. (இ.க.ஆ.அ.28/1932)

முகம்மதியர் வரலாற்றில்:

நாயக்க இனத்துக் கடைசி அரசியான மீனாட்சிக்குப் பின் கி.பி.1736-ல் மதுரை மாநகரமும், அழகாபுரிக் கோட்டையும், ஆர்க்காட்டு நவாப் ஆகிய சந்தாசாகிப்பின்

கைக்கு மாறியது. அப்போது அழகாபுரிக் கோட்டையும், அழகர்கோயிலும், அவனுடைய கொள்ளையடிப்பிற்கு இலக்காயிற்று. ஆர்க்காட்டு நவாப் காலம் முதல், கள்ளழகர் கோயில் இக்கட்டான நிலைக்கு ஆளானது எனலாம்.

ஹைதர் அலி (கி.பி.1757):

மதுரையைச் சுற்றியுள்ள ஊர்களைக் கொள்ளையடித்து, அழகர்கோயிலின் கல்யாண மண்டபத்துச் சிற்பச் செல்வங்களைச் சிதறடித்துள்ளான். மேலும் இவன் அழகர் கோயிலில் உள்ள ஏராளமான சொத்தையும் கைப்பற்றிக் கொண்டான். அழகாபுரிக் கோட்டை இவனால் மாலிக்காபூருக்குப் பின்பு மேன்மேலும் நாசமாக்கப்பட்டது. இங்குள்ள திருமலை நாயக்கர் அரண்மனையையும் இவன் இடித்துத் தள்ளினான்.

கி.பி.1758-ல் யூசுப்கான் எனும் முகமதிய வீரன் ஹைதர் அலியைத் தோற்கடித்துத் திண்டுக்கல் வரை விரட்டினான். இவன் அழகர்கோயில் சொத்துக்களைத் திருப்பிக் கொடுத்துப் பரிகாரங்கள் செய்துள்ளான். அழகரிடம் பக்தி கொண்ட இவனைச் சில துரோகிகள் கொன்றுவிட்டனர். கி.பி.1780-ல் மீண்டும் ஹைதர் அலி படையெடுத்து நாசமாக்கினான்.

ஆங்கிலேயர் ஆட்சியில்:

கி.பி.1875-ல் மதுரை கிழக்கிந்தியக் கம்பெனி வசமாக்கப்பட்டதும், கி.பி.1801-ல் அழகாபுரிக் கோட்டையும், அழகர்கோயிலும் ஆங்கிலேயர் ஆட்சிப் பொறுப்பில் வந்தது. கி.பி.1801-ல் மதுரைக் கலெக்டர் திரு ஹார்டிஸ் என்பர் அழகர்கோயில் தர்மகர்த்தாவாக ஆனார். இவர்

தம் தீர்மானத்தின் படியே அழகர்கோயிலில் சுமார் 17 ஆண்டுகள் நிர்வாகம் நடைபெற்றுள்ளது. இவர் செய்த சீர்த்திருத்தங்களே இக்கோயிலின் பெரிய உரிமைச் சாசனம் எனலாம்.

கி.பி.1817 – 1863 :

அழகர்கோயில் நிர்வாகம் கி.பி.1817–ல் நிலவரி வசூல் நிறுவனத்தின் கீழ் நடந்தது. கி.பி.1863–ல் மத ஸ்தாபனங்களை நடத்துவதற்கு ஏற்படுத்தப்பட்ட கோயில் நிர்வாகக் கமிட்டி இதன் நிர்வாகத்தை ஏற்றுக் கொண்டது. இக்கமிட்டி அழகர்கோயிலின் கோப்புகளைச் சரிவர ஆராய்ந்த பார்க்காது, அழகர்கோயிலுக்குரிய நிலங்களையும், கிராமங்களையும், ஸ்ரீஅழகர் பெயருக்கு எழுதி வைக்காமல், கோயில் திருப்பணி செய்பவர்கள் பெயருக்கு எழுதி வைத்துவிட்டது. இதனால் கோயில் சொத்துகளைப் பிறர் அனுபவிக்கலாயினர். சிப்பந்திகள் சரியாகக் கோயில் காரியங்களைச் செய்யவில்லை. அவர்களை ஒழுங்குபடுத்தவும், கட்டுப்படுத்தவும் இக்கமிட்டியாலும் இயலவில்லை. இதனால் இக்கோயில் சொத்துகள் பல போய்விட்டன.

இக்கோயிற் கல்வெட்டுகளிலும் ஆவணங்களிலும் உள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் மற்றும் ஸ்தாவர, ஜங்கம சொத்துகளும் இக்கோயிலுக்கு இப்பொழுது இல்லாமல் போனதற்கு ரெவின்யூ போர்டின் (நிலவரி வசூல் நிறுவனத்தின்) ஒழுங்கற்ற நிர்வாகமே காரணமாக இருந்துள்ளது.

கி.பி.1886 ஆம் ஆண்டு வரை அழகருக்குச் சொந்தமாக இருந்த அழகர்மலையும் ஆங்கிலேயர் ஆட்சியால் தேவஸ்தானத்தை விட்டு அரசினர் கைக்குச் சென்றது.

இக்கோயிலை ஆங்கில அரசு நிர்வாகம் செய்த காலத்தில் கோயிலின் அனைத்து வருமானமும், அரசிற்கே போய்ச் சேர்ந்தது. கோயில் தேவஸ்தானத்திற்கு எதுவும் வந்து சேரவில்லை.

பின்பு 1929–ல் இருந்து இந்தியாவிற்கு அரசியல் துறையில் ஓரளவு சீர்திருத்தங்களும், சுதந்திரங்களும் அளிக்கப்பட்ட பின்பு இக்கோயிலின் நிர்வாகம் ஓரளவு சீராக நடைபெற்று வருகிறது. தற்போது அறநிலைய ஆட்சித்துறை பொறுப்பேற்று நடத்தி வருகிறது.

11 கல்வெட்டுச் செய்திகள்

திருப்பணிகளாலும், குடநீராட்டுகளாலும் இங்குள்ள கல்வெட்டுகள் மறைந்துவிட்டன. மத்திய அரசின் தொல்பொருள் ஆய்வுத்துறையினரின் கல்வெட்டுக் குறிப்புகளை மையமாக வைத்தே கல்வெட்டுச் செய்திகளைக் காண வேண்டும். மத்திய அரசின் கல்வெட்டுக் குறிப்புகள் கீழ்க்காணும் ஆண்டுகளில் வெளி வந்துள்ளன.

வ.எ.	இ.கவெ ஆண்டறிக்கை	கல்வெட்டு எண்கள்	கல்வெட்டு எண்ணிக்கை
1	1908	334	1
2	1910	80	1
3	1910	70-79	10
4	1929	83-93	11
5	1930	271-331	62
6	1932	1-31	31
7	1938-39	213-114	12
		மொத்தம்	128

இனவாரியாகக் கல்வெட்டுகள்:

இங்கு பாண்டியர் கல்வெட்டுகளின் எண்ணிக்கையே அதிகம். பாண்டிய மன்னர்களுக்கு அடுத்து விஜயநகர மன்னர்களின் கல்வெட்டுகள் அதிகமாக உள்ளன. அடுத்து பாண அரசர் தம் கல்வெட்டுகளும், ஹொய்சளர் தம் கல்வெட்டுகளும், நாயக்கர் தம் கல்வெட்டுகளும் உள்ளன. சோழர் கல்வெட்டுகளே குறைவான எண்ணிக்கையில் உள்ளன.

பாண்டியர் தம்	கல்வெட்டுகள்	சுமார்	60
விஜயநகர மன்னர்	கல்வெட்டுகள்	சுமார்	9
பாண மன்னர்	கல்வெட்டுகள்	சுமார்	4
அரவீடு இனத்தவர்	கல்வெட்டுகள்	சுமார்	3
ஹொய்சளர்	கல்வெட்டுகள்	சுமார்	3
நாயக்கர்	கல்வெட்டுகள்	சுமார்	3
சோழர்	கல்வெட்டுகள்	சுமார்	2
		மொத்தம்	84

எந்த இனத்தவர் கல்வெட்டுகள் என்று உறுதி செய்யப்படாத கல்வெட்டுகள் 44. இக்கோயிலைச் சார்ந்த சுந்தர சோழ பாண்டியனின் ஒரு கல்வெட்டு மட்டும் தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி 14–ல் 173 ஆவது கல்வெட்டாக வந்துள்ளது. அக்கல்வெட்டு பின்வருமாறு:

1) கொச்சடைய
2) பன்மரான . . . ஸ்ரீசோ
3) ழ பாண்டிய தேவ
4) ற்கு யாண்டு (உயஉ) ஆவ
5) து ராஜராஜப் பாண்டி
6) நாட்டு ராஜேந்த்ரசோழ
7) வளநாட்டுக் கீழிரணி
8) யமுட்டத்துத் திருமா
9) லிருஞ் சோலை நின்ற
10) ருளிய பரமஸ்வாமிகளு

11) க்கு கருநீலக்குடி நாட்
12) டு பிரம்மதேயம் சோ
13) ழ பாண்டியச் சருப்பே
14) பதி மங்கலத்து கா
15) ஸ்யபன் நாராயணன்
16) அரைசின் ப்ராஉற்மணி
17) சோலை சேந்த பிரா
18) ட்டி இட்ட நிலை விள
19) க்கு ஒன்று.

முதலாம் இராஜேந்திரன் காலத்தில் மதுரையின் மீது படையெடுத்து வெற்றி கொண்டதால், பாண்டி நாட்டைத் தன் தந்தையின் பெயரால் இராஜராஜப் பாண்டி நாடு என்று வழங்கப்பட்டதை இக்கல்வெட்டால் அறிகிறோம் அடுத்து இராஜேந்திரனது வெற்றியைக் குறிக்கும் முகத்தான், இராஜராஜப் பாண்டி நாட்டில் உள்ள வளநாடு, இராஜேந்திரச் சோழ வளநாடு என்றழைக்கப்பட்டதையும் அறிகிறோம். இக்கல்வெட்டின் வாயிலாகச் சோழர்களின் பாண்டிய நாட்டு வெற்றியும் இராஜேந்திரன் காலத்தில் அவனது இரண்டாம் மகன் வீரராஜேந்திரன் சுந்தர சோழபாண்டியன் என்ற பட்டப்பெயருடன் ஆட்சிசெய்ததையும் அறிகிறோம். எனவே இக்கல்வெட்டு முக்கியத்துவம் வாய்ந்தது.

நாட்டுப் பிரிவு:

இராஜராஜப் பாண்டி மண்டலத்தில், இராஜேந்திர சோழ வளநாட்டில் உள்ள கீழிரண்ய முட்டத்தில் திருமாலிருஞ்சோலை அமைந்திருந்தது என்பதை அறியலாம்.

இக்கல்வெட்டில் இறைவன் பெயர்:

இக்கல்வெட்டில் இறைவன் பெயர் ''திருமாலிருஞ் சோலை நின்றருளிய பரமஸ்வாமிகள்'' என்று குறிக்கப் பெறுகிறது. கி.பி.11- ஆம் நூற்றாண்டு கல்வெட்டில் ஆழ்வார் தம் பாசுரங்களில் வரும் ''திருமாலிருஞ் சோலை'' என்ற பெயராலேயே வழங்கப்பட்டு வந்துள்ளது குறிக்கத் தக்கதாகும்.

சோழபாண்டியச் சருப்பேதிமங்கலம்:

இது சோழ பாண்டியனால் அந்தணர்கள் வசிப்பதற்கு விடப்பட்ட பகுதியாகும். இது பிராமணர்களுக்கு விடப்பட்டதாலும் அவர்கள் வசிக்கும் இடமாகையாலும் ''பிரமதேயம்'' என்றழைக்கப்பட்டது. இப்பிரமதேயம் கருநீலக்குடி நாட்டில் அமைந்துள்ளது. இப்பிரமதேயத்தின் பெயரும் சோழனின் வெற்றியைக் குறிக்கும் வகையில் இது அவனது பெயரே பூண்டு விளங்குகிறது.

இப்பிரமதேயத்தின் காஸ்யப கோத்திரத்தைச் சார்ந்த நாராயணன். என்பவனுடைய மனைவியின் பெயரே சோலை சேந்தபிராட்டியார். அவள் திருமாலிருஞ் சோலை நின்றருளிய பரமஸ்வாமிகளிடம் பேரன்பு பூண்டு விளங்கினாள் என்பதற்கு அவளது பெயரே எடுத்துக்காட்டாகும். இக்கல்வெட்டின் வாயிலாக இவள் சோலைமலைப் பெருமானுக்கு ''நிலைவிளக்கு'' ஒன்று கொடுத்தாள் என்ற செய்தி தெளிவாகிறது.

தமிழகக் கல்வெட்டு வரலாற்றில் திரிபுவனச் சக்கரவர்த்திகள் கோனேரின்மை கொண்டான் என்று அரசனின் நேரடி ஆணைக் கல்வெட்டுகள் முதலாம் இராஜராஜனின் காலத்திலிருந்து தொடங்கின எனலாம். அது போலவே

பாண்டிய மன்னர்களின் அழகர்மலைக் கல்வெட்டுகளின் பெரும்பகுதி அரசனின் நேரடி ஆணைக் கல்வெட்டுகளாகவே உள்ளன.

அமர்ந்து ஆட்சி செய்த அரியணைகளின் பெயர்கள்:

பிற்காலப் பாண்டிய மன்னர்கள் தாங்கள் அமர்ந்து ஆட்சி செய்த அரியணைகளுக்குச் சில சிறப்பான பெயரிட்டு கச்சிக்கு வாச்சான்(318, 319/30), மழவராயன்(275/30, 279/30), காலிங்கராயன்(302/30) என்று அழைத்துள்ளதைக் கல்வெட்டுக் குறிப்புகளிலிருந்து அறியலாம்.

கல்வெட்டுகளில் குறிக்கப் பெறும் அரசி, மந்திரி முதலான அரச குலத்தவர்கள்:

பெரும்பாலான பாண்டிய மன்னர் தம் கல்வெட்டுகள் வாயிலாக அவர் தம் அரச குலத்தவர், அரசுப்பணியதிகாரிகள் பற்றிய செய்தி கிடைக்கின்றது.

முதலாம் ஜடாவர்மன் குலசேகரன் மனைவி தரணி முழுதுடையார்(300, 301/30) என்பதை மேற்குறித்த கல்வெட்டுக் குறிப்புகள் காண்பிக்கின்றன.

இவனது அமைச்சர்கள்:

1) மழவராயர்
2) ஆதித்த தேவர் எனும் பல்லவரையர் இவன் பெருமணலூரைச் சார்ந்தவன்
3) ஆண்ட நாட்டினைச் சார்ந்த ஜெயங்கொண்ட சோழ ஸ்ரீவல்லபன்
4) வடகளவழி நாட்டில் உள்ள அழகிய மாநகரில் வசிக்கும் களவழி நாடாழ்வான்
5) மற்றொரு அரசுப் பணியாளர் காலிங்கராயர் (296/30) – இவர் அழகப்

பெருமாள் என்றும் அழைக்கப்படுவான். இவன் முத்தூர்க் கூற்றத்தில் உள்ள ஆண்ட நாட்டினைச் சார்ந்தவன்
6) அழகப் பெருமாள் – அரசன் மைத்துனன் 273, 274/30
7) முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் அமைச்சன் மழவராயன் எனப்படும் பல்லவராயர். (282, 288/30, 11/32)

அண்ணாழ்வி சொக்கநாதர்:

இவனது முத்த தமையன் பாண்டியர் காலக் கல்வெட்டுகளில் குறிக்கப்படுகின்றான். மேலும் ஹொய்சள மன்னர்கள் மாமன் மைத்துனன் உறவில் ''மாமடி'' என்று இவர்களுக்கு உறவினர்களாகக் குறிக்கப் பெறுகின்றனர். 291/30

விஜயநகர மன்னர் கல்வெட்டுகளில்:

கிருஷ்ணதேவராயரின் அரசுப் பணியாளராக இம்மடி வீரய்ய தண்டேஸ்வரன் என்பவன் குறிக்கப்படுகின்றார்.(90/1929)

அச்சுத தேவராயர் கல்வெட்டுகளில் அவர் தம் மனைவி (பட்டத்தரசி) வரதராஜஅம்மாள் குறிக்கப்படுகிறார் 330/1930. இதே கல்வெட்டில் அச்சுத தேவராயரின் மகன் இளவரசனாகக் குறிக்கப்படுகிறான். அவர் தம் பெயர் "சிக்கதேவமகாராயர்" 330/1930. இவர் தம் அரசுப் பணியாளர் வாரணாசி வரதப்ப அண்ணரய்யன் 330/1930 குறிக்கப்படுகிறான்.

செழுவத்தூரைச் சார்ந்த காலிங்கராயர் மகன் என்ற குறிப்பினை ஒரு கல்வெட்டு தெரிவிக்கிறது.(331/1930) இவ்வாறு அழகர்கோயில் கல்வெட்டுகள் அரசர்களையும், அவர் தம்

உறவினர்களையும் அரசுப் பணியாளர்களையும் குறிக்கின்றன.

கோயிலில் கண்டெடுக்கப்பட்டுள்ள பீடம்:

இப்பீடம் 1938 ஆம் ஆண்டு ஆர்யன் மண்டபம் என்று அழைக்கப்படும் சுந்தர பாண்டியன் மண்டபத்தில் கண்டு பிடிக்கப்பட்டது.

இப்பீடம் தற்பொழுது பரிவட்ட அறையில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இது மிகவும் நுட்பமான கருத்தைக் கவரும் வேலைப்பாட்டுடன் கூடியது. இதில் உள்ள கல்வெட்டுப் பொறிப்பான ''வீரன் அரசன்'' என்பது, இப்பீடத்தினைக் கொடுத்தவனாக இருக்கலாம்.

இப்பீடத்தின் நீளம் 6.1 அடி

இப்பீடத்தின் அகலம் 5.8 அடி

இப்பீடத்தின் உயரம் 1.5 அடி

பந்தல்கள்:

மனைகட்டுவதும், நிலங்களுக்கு மேல் பந்தல் போடுவதும் முற்காலத்தில் சிறந்த பரந்த கொடையாகக் கருதப்பட்டது. இப்பந்தல்களுக்கென்று பாண்டிய மன்னர்கள் சிறப்பான பெயரினையும் இட்டு அழைத்துள்ளனர் என்பதைக் குலசேகரன்பந்தல், திருமூர்த்தி பந்தல் ஆகிய பெயர்களால் அறியலாம்.(320/30)

திருப்பள்ளிக் கட்டில்கள்:

அழகப் பிரானார் பள்ளிகொள்ள அமைக்கப் பெற்ற திருப்பள்ளிக் கட்டில்களும் கல்வெட்டுக் குறிப்பில் காணப்படுகின்றன.

1. மழவராயன் திருப்பள்ளிக்கட்டில் 306/1930

2. பால கோபாலன் திருப்பள்ளிக்கட்டில். 1937 ஆம் ஆண்டு கோயிலில் கண்டெடுக்கப்பட்ட திருப்பள்ளிக் கட்டில்

இது. இதன் மேல் தங்கத்தகடு போர்த்தியுள்ளது குறிக்கத் தக்க ஒன்று. இதன் மேல் "பாலகோபாலன் திருப்பள்ளிக் கட்டில்" என்று கல்வெட்டுப் பொறிப்பு உள்ளது.

உரிமைகள் மற்றும் சலுகைகள் பற்றிய ஆவணம்:

அன்று முதல் இன்று வரை உரிமைகள் அல்லது சலுகைகள் பற்றிக் கருத்து வேறுபாடு ஏற்படுதல் என்பது அனைவரும் அறிந்ததே. அழகர்கோயிலில் ஆடித் திருவிழா நாள்களில் யாருக்கு முதலில் "தீர்த்தம்" கொடுக்க வேண்டும் என்பது குறித்து, சகம் 1573, கி.பி.1651 கர வருடம் ஆடி மாதம் 18 ந்தேதி சண்டை ஒன்று வந்தது. இது பற்றிய கல்வெட்டு மிகவும் சுவையானது.(286/1930) இச்சண்டை திருமலையாண்ட அய்யங்காருக்கும், பட்டர், ஐயங்காருக்கும் ஏற்பட்டது. இதனைத் தீர்த்து வைத்த வைத்தியப்ப தீட்சிதர், குப்பையாண்டி செட்டி, வசந்தராய பிள்ளை என்ற திருவேங்கடய்யா என்ற நடுவர்களின் பெயர்கள் இக்கல்வெட்டில் குறிக்கப்படுகின்றனர்.

நில விற்பனை, நிலப்பரிமாற்றம் பற்றிய கல்வெட்டு ஆவணங்கள்:

இக்கல்வெட்டு முதலாம் ஜடாவர்மன் குலசேகர பாண்டியனுடைய 15 ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு வாயிலாக இவன் காலத்திய நிலவிற்பனை முறையினை அறிந்து கொள்கிறோம்.(276/1930)

வடகளவழி நாட்டில் உள்ள அழகிய மாநகரில் வசிக்கும் களவழி நாடாழ்வான் என்பவனால், இடைக்காட்டூர் எனப்படும் அழகிய பாண்டிய நல்லூரானது ஜடாவர்மனின் மந்திரியான பல்லவராயர் என்று அழைக்கப்படும் ஆதித்த தேவனுக்கு விற்கப்பட்டதை அக்கல்வெட்டால் அறிகிறோம்.

நிதி நிர்வாகம் பதிவு செய்தல் (297/1930):

மாறவர்மன் விக்கிரமபாண்டிய தேவன் காலத்து நிதி நிர்வாகத்திற்கு எடுத்துக்காட்டாக இக்கல்வெட்டு உள்ளது. இக்கல்வெட்டு வாயிலாக நிதி முதலீடு செய்தல், அதில் கிடைக்கும் வட்டியினைக் கொண்டு இறைவனுக்குத் திருவிளக்கு எரித்தல் போன்ற செய்திகளை அறிகிறோம்.

அது போல கி.பி.13 ஆம் (1249–1255) நூற்றாண்டிலேயே (மாறவர்மன் விக்ரம பாண்டியன்) கேரள சிங்கவளநாட்டுத் திருக்கோட்டியூரைச் சார்ந்த அன்பர் ஒருவர் 11 அச்சு முதலீடு செய்து அதிலிருந்து கிடைக்கும் வட்டியினை அழகப்பிரானார்க்கு விளக்கேற்றிய நிலையினைக் காண்கிறோம். (297/1930)

கல்வெட்டின் வாயிலாகக் கிடைக்கும் காசுகளின் செய்திகள்:

அழகர்கோயில் கல்வெட்டுக் குறிப்புகளின் வாயிலாகக் கீழ்க்காணும் அந்நாளைய காசுகளைப் பற்றி நாம் அறிந்து கொள்ளலாம்.

1) ஈழக்காசு,
2) பழங்காசு,
3) அச்சு,
4) ஆனைஅச்சு ஆகியன வழக்கில் இருந்துள்ளன

1) பொன் காசுகள்: சகம் 1464 (கி.பி.1542) அச்சுத தேவ மகாராஜாவின் காலக் கல்வெட்டுக் குறிப்பால் அச்சுததேவ மகாராயரின் மகன் அழகர்கோயிலுக்கு 1200 பொன் காசுகளை அளித்தான் என்று தெரிந்து கொள்கிறோம்.

2) பணம்: பணம் 10 கொண்டது ஒரு பொன். இது விஜயநகரர் காலத்துக் கல்வெட்டுகளில் காணப்படுகிறது.

3) சக்கரம் என்ற காசும் சதாசிவராயர் கல்வெட்டுகளில் காணப்படுகிறது.

அளவுகள்:

திருமாலிருஞ்சோலை நின்றான் மாவலி வாணாதிராஜன் காலத்திய நீட்டல் அளவு ஒன்று கல்வெட்டில் குறிக்கப்படுகின்றது. (85/29) இந்த நீட்டல் அளவு அவனுடைய பெயராலே வழங்கியது. இது ''திருமாலிருஞ்சோலை மாவலி வாணாதிராயன் மாத்ராங்குலம்'' என்பதாகும். இவன் காலம் கி.பி.1474. இது கி.பி.15 ஆம் நூற்றாண்டு அளவு முறையாகும். தவிர வீரபாண்டியன் கோல், பன்னீர் அடிக் கோல், சுந்தரபாண்டியன் கோல், வாணாதிராயன் கோல் ஆகியன இருந்துள்ளதையும் கல்வெட்டுகளால் அறிகிறோம்.

நிறுத்தல் அளவுகள்:

கழஞ்சு, பொதி, பலம், தூக்கு, ஆகிய அளவுகளுக்குச் சோலைப்பிரான், திருமலைப்பிரான், வீரபாண்டியன், வலையிர்க்கல் போன்று சிறப்புப் பெயர்கள் இருந்துள்ளன.

முகத்தல் அளவுகள்:

குறுணி, பதக்கு, துணி, மரக்கால், கலம் முதலான அளவுகள் குறிக்கப் பெற்றுள்ளன.

வரிகள் **(Taxes) 276, 308, 315, 318, 319/1930 etc.**

அன்றைய வரிகள் பற்றி அழகர்கோயில் கல்வெட்டுக் குறிப்புகள் மூலம் நன்கு அறிகின்றோம். இக்கல்வெட்டுகளால் அன்றைய அரசின் பெரும் வருமானம் வரிப்பணம் என்று கூறுமளவுக்கு இருந்தன எனலாம்.

1) அச்சு வரி 2) ஆள் வரி
3) அணை வரி 4) அந்தராயம்

5) செக்கிறை	6) ஏரி வரி
7) ஏரி மீன்பாட்டம்	8) இடை வரி
9) இலச்சினை வரி	10) இன வரி
11) கடமை	12) கார்ய வாரட்சி
13) கற்பூர விலை	14) கார்த்திகை பச்சை
15) மண் வரி	16) மனை வரி
17) மரக்கலம்	18) மர வரி
19) மாசிப் பட்டம்	20) ஓலை எழுத்து விநியோகம்
21) ஒழுக்க வரி	22) பாடி காவல்
23) பஞ்சு பீலி	24) பசுவரிப் பாட்டம்
25) பெரு வரி	26) பொன் வரி
27) புற வரி	28) சந்திவிக்ரஹப்பேறு
29) தேரடிப் பதக்கு	30) தலைஓப்பு மனைவரி
31) தறி இறை	32) தட்டாரப் பாட்டம்
33) திடல் வரி	34) உலதன் குடி
35) உள் வரி	36) வண்ணாரக் காசு
37) வாசல் பேறு	38) வேண்டுகோள் விநியோகம்
39) வெட்டிப்பாட்டம்	40) விவாக வரி

வணிகமும் சுங்க வரியும் :

கி.பி.16 ஆம் நூற்றாண்டில் பண்டமாற்று முறையில் பொருட்கள் பரிமாறிக் கொண்ட விதம் நன்கு விளங்கும். பண்டமாற்றுப் பொருட்களுக்குரிய வரி விதிப்பும், சுங்க வணிகமும் ''அப்பன் திருப்பதியில்'' நன்கு நடந்தது. இந்த அப்பன் திருப்பதி முற்காலத்திய அங்காடிப் பட்டணமாக

விளங்கியது. 56 தேசங்களிலிருந்து வந்த வணிகர்கள் பற்றிய குறிப்பு (309/1930) இக்கல்வெட்டில் உள்ளது. பொருட்கள் நிர்ணயிக்கப் பெற்ற விலையில் விற்க வேண்டும் என்ற குறிப்பும் இக்கல்வெட்டின் வாயிலாக அறிகிறோம். 56 நாட்டு வணிகர்களும் வந்து குழுமி வியாபாரம் செய்த இந்த இடம் இன்றும் கல்வெட்டில் குறிக்கும் பெயரிலேயே ஒரு சிறு கிராமமாக அமைந்துள்ளது.

நாட்டுப் பிரிவுகள் :

நாடு மண்டலம் என்றும் கூற்றம் என்றும் பிரிக்கப்பட்டு இருந்தன. இவற்றின் பெயர்கள் அரசனின் சிறப்புப் பெயர்களையும், வெற்றிப் பெயர்களையும் கொண்டு விளங்கின. மண்டலம் (1) பாண்டிய மண்டலம் (2) சோழ மண்டலம் (3) தொண்டை மண்டலம் (4) மலை மண்டலம் என்று பிரிக்கப்பட்டு இருந்தன. இம்மண்டலங்கள் கோட்டங்களாகவும், கோட்டங்கள் நாடுகளாகவும் பிரிக்கப் பெற்றிருந்தன.

பிற்காலப் பாண்டியர் காலத்தில் கீழ்க்காணும் சிறப்புப் பிரிவுகள் இருந்தன எனலாம். மண்டலம் – வள நாடு – நாடு – முட்டம் – கூற்றம் என்று நாடு ஐந்து பிரிவுகளாக வழங்கியது.

விஜயநகர மன்னர்கள் காலத்தில் ''சீர்மை'' என்ற பிரிவு அமலுக்கு வந்தது.(86, 87, 88/1929) மேலும் விஜய நகர மன்னர்கள் காலத்தில் சிறுசிறு மாற்றங்கள் ஏற்பட்டன.

1) தெலுங்கு பேசும் மக்களைக் கொண்ட கிராமம் 'ஊர்' என்று அழைக்கப்பட்டது.
2) கள்ளர் குறைவாக உள்ள இடம் பட்டி அல்லது குறிச்சி

3) கள்ளர் மிகுதியாக வாழுமிடம் 'கள்ளநாடு'

4) கோட்டை சூழ்ந்த ஊர் – கோட்டை என்றும்

5) நெற்பயிர் விளையும் ஊர் – மங்கலம் என்றும்

அனைத்தும் சேர்ந்தது ''சீர்மை'' என்றும் விஜயநகர மன்னர் தம் காலத்தில் நாட்டுப் பிரிவு அமைந்திருந்தது எனலாம். சிறப்பு மிக்கு விளங்கும் சில வளநாடுகள் (297, 319/ 1930, 8/1932):

1) கேரளசிங்க வளநாடு

2) பாண்டிய வளநாடு

3) வீரபாண்டிய வளநாடு

4) இராஜகம்பீர வளநாடு

5) சுந்தரபாண்டிய வளநாடு

6) ஜெயங்கொண்டசோழ வளநாடு

7) நித்தவிநோத வளநாடு

8) சோழபாண்டிய வளநாடு

கல்வெட்டுகளில் காணப்படும் சில சிறப்பு மிக்க நாடுகள்:

1) வடபரப்பு நாடு	2) தென்பரப்பு நாடு
3) ஆண்ட நாடு	4) களவழி நாடு
5) ஆல நாடு	6) இரண்யமுட்ட நாடு
7) குட நாடு	8) துவரப்பட்டி நாடு
9) தென் வீடு நாடு	10) பேராவூர் நாடு
11) கரு நீலக்குடி நாடு	12) வேம்பு நாடு
13) திருமல்லி நாடு	14) பிரம்பில் நாடு
15) அரி நாடு	16) வடதலைச்(செம்பில்)நாடு

கூற்றங்களில் சில:

1) முதலிக் கூற்றம்

2) திருக்கானப்பேர் கூற்றம்

3) பாகனூர்க் கூற்றம்

சதுர்வேதி மங்கலங்கள்:

பிராணமர்களுக்கென்று அளித்த கிராமங்கள், கொடை கொடுத்த கோமானின் பெயருடன் இணைந்து காணப்படுகின்றன.

1) இராஜசூடாமணிச் சதுர்வேதி மங்கலம் 288/1930

2) சோழகுலாந்தகச் சதுர்வேதிமங்கலம் 300/1930

3) குலசேகர சதுர்வேதிமங்கலம் 314, 318/1930

4) சமந்தநாராணச் சதுர்வேதிமங்கலம் 322/1930

5) சோழ பாண்டியச் சதுர்வேதி மங்கலம்

6) சோழாந்தகச் சதுர்வேதி மங்கலம்

7) பராந்தகச் சதுர்வேதி மங்கலம் 22/1932

8) பெருங்கருணைச் சதுர்வேதி மங்கலம் 323/1930

9) வானவன் மாதேவிச் சதுர்வேதி மங்கலம் 9/1932

வீதிகள் முற்றங்களின் பெயர்கள்:

1) தியாகஞ்சிறயான் வீதி

2) சுந்தரபாண்டியன் திருமுற்றம்

3) யதிராஜன் திருமுற்றம்

முதலான பெயர்கள் சிறப்பாக, அழகாக அமைந்துள்ளமை குறிக்கத்தக்கனவாகும்.

கல்வெட்டுகளில் கோத்திரங்களும், சூத்திரங்களும்:

1) அச்யுத கோத்ரத்தைச் சார்ந்தவன் நாகய்ய நாயக்கன் – 327/1930

2) உத்தகிரியின் மகன் பெத்தராசனும் இவனது தாயார் வசவம்மாவும் காஸ்யப கோத்ரத்தையும் ஆபஸ்தம்ப சூத்ரத்தையும் சார்ந்தவர்கள் – 328/1930

3) இம்மடி வீரய்ய தண்டேஸ்வரர் காஸ்யப

கோத்திரத்தையும், ஆபஸ்பதம் சூத்திரத்தையும் சார்ந்தவர் – 90/1929

கோயில் நிர்வாகமும் கல்வெட்டுகளில் சிப்பந்திகளின் பட்டியலும்:

அழகர்கோயிலில் அமைந்துள்ள கல்வெட்டுகள் சிப்பந்திகளின் பெயரினைக் குறிப்பதில் சிறப்பிடம் பெறுகின்றன எனலாம். கோயிலின் இரண்டாவது பிரகாரத்தில் காணப்படும் மாவலிவாணாதிராயன் கல்வெட்டு வாயிலாக, தேவஸ்தான சிப்பந்திகளுக்குள் எழுந்த தொழில் மற்றும் பணி பற்றிய பிரச்னையை தீர்த்து வைத்த நிலையினைக் காணலாம். இது (கி.பி.1464) திருமலை தேவமஹாராஜர் என்று அழைக்கப்படும் அவரது இனத்து அரசால் திரும்பவும் படிக்கப் பெற்று, இந்நிலையினையே வருங்காலத்திலும் பயன்படுத்தப்பட வேண்டும் என்று குறிக்கின்றது. இது பாலாபத்ரம் 1/1932 என்று பதிவு பெற்றுள்ளது.

சிப்பந்திகளின் பணிகள் மற்றும் கோயில் தொடர்பானவர்களின் பணிகளும் கீழ்க்காணுமாறு கல்வெட்டுகளில் இடம் பெறுகின்றன எனலாம். (13, 18, 26/1932, 280, 284, 325/1930 இன்னும் பிற)

அலங்காரன் நம்பி, அணுக்கர், அபூர்விகள், அரையர், பட்டர் – இவரில் இரு வகை, சாமான்ய பட்டர், சோழிய பட்டர், தெய்வசிகாமணி நம்பி, கணக்கர் குலசேகர விழுப்பரையர், கணக்கர் சமயக் கணக்கு சேதிப்பரையர், கணக்கர் சௌந்திரராஜப் பிரியர், காணியாசி நிர்வாகஸ்தம்பர், கோவணவர், குடவர், குறையிடுவார், நம்பாடுவார், நம்பு செய்வார், பொன் இடுவார், பூ இடுவார்,

சாமான்யர், சம்ப்ராதி, சடகோப நம்பி, சேர நாராயண அமுதர், சிறுக்கர், சோலை மலை நம்பி, சோழியர், சௌந்திர தோள் அமுதர், ஸ்ரீபாதம், தழை இடுவார், திருமலை ஆண்டார் முதலியார், திருமலை நம்பி, திருமாலிருஞ்சோலை நம்பி, தோளப்பர், த்ரிதண்டிகள், த்யாகஞ்சிறய பெருமாள் அமுதர், வடமாமலை அமுதர்

கொடைகளைப் பற்றிய கல்வெட்டுகள்:

அழகர்கோயிலுக்குக் கிராமங்களும், கிராமங்களில் உள்ள நிலங்களும், கொடையாகக் கொடுக்கப்பட்டதைக் குறிக்கும் கல்வெட்டுகள் மிகுதி. அடுத்து இங்கு விளக்கெரிப்பதற்கும் காசுகள் கொடுத்துள்ளனர். நிலை விளக்கு, துண்டா விளக்கு முதலான விளக்குகளைப் பற்றியும் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. திருவிழாக்களுக்கும், நித்திய பூஜை, விசேஷப் பூஜைகளுக்கும் கொடைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

இக்கொடை எங்கு, எப்பொழுது யாரால், எந்த மண்டபத்தில், எதற்காக என்பது பற்றியும், எந்த புனிதமான திருநாளில் எங்கு பெருமான் எழுந்தருளியிருந்தார், எந்த குறிப்பிட்ட பீடத்தில் அமர்ந்திருந்தார்? (306/1930) எந்த பாடல் யாரால் பாடப்பட்டுக் (14/1932) கேட்கப்பட்டது? என்பது பற்றியும் இங்குள்ள கல்வெட்டுகள் தெளிவான விரிவான செய்திகளை நமக்குத் தருகின்றன எனலாம். (320/1930, 26, 27/1932)

கொடை செயல்பெறும் முறை:

நிலைத்த செல்வம் என்பது கிராமம் முழுமை அல்லது ஒரு பகுதி அல்லது நிலங்கள், தோப்பு, பூங்கா, ஓடை முதலியனவாகும். பெரும்பாலும் நிதியாகவே கோயில்

நிர்வாகத்தில் சேர்க்கப்படும் அல்லது அதற்கான தனி நிறுவனத்தில் சேர்க்கப்படும். பின்பு அவற்றினின்று கிடைக்கும் வட்டி வருவாயினின்று கோயில் செலவுகள் செய்யப்படும். (297/1930)

கோயில் திருப்பணிக்குக் கட்டப்படும் கற்கள், தூண்கள், திருவிளக்குகள் அல்லது பூசை அல்லது ஆராதனைக்குரிய பொருட்கள் இவை போன்ற கோயில் அறக்கட்டளைக்குத் தேவையான அனைத்துப் பொருட்களுக்கும், மன்னர்களாலும், மன்னனைச் சார்ந்த மற்றவர்களாலும் கொடைகளாக அளிக்கப்பட்டன எனலாம்.

நிலைத்த செல்வங்கள் பற்றிய கல்வெட்டுகள் :

அழகர்கோயிற் கல்வெட்டுகள் வாயிலாக வைகைக் கரையின் வடக்குப் பக்கமுள்ள பசுமையான நிலங்கள் அனைத்தும் அழகர்கோயிலுக்குச் சொந்தமாக இருந்தன என்று அறிகின்றோம். இந்தியாவில் செல்வமிகுந்த கோயில்களுள் அழகர்கோயிலும் ஒன்று. 45 சதுர மைல் பரப்புள்ள அழகர்கோயிலுக்கு எண்ணிலடங்கா நிலங்களும், கிராமங்களும் சொந்தமாக இருந்தன என்றறிகின்றோம். இதற்குக் கீழ்க்காணும் பழமொழியும் எடுத்துக்காட்டு எனலாம்.

"அரங்கன் சொத்து அழகரின் ஓர் ஆபரணத்திற்கு ஈடாகாது"

அழகர்கோயிலின் சொத்துகள் பிற்காலப் பாண்டியர்களுக்குப் பிறகு மாலிக்காபூர் படையெடுப்பு, கிழக்கிந்தியக் கம்பெனியார் மற்றும் தனிப்பட்ட பலராலும் சூறையாடப்பட்டு, இன்று வளங்கொழிக்கும் அழகான மலையும், கோயிலும், கோட்டையுமே எஞ்சியுள்ளன.

ஊர்க் கொடை :

ஏராளமான கிராமங்கள் அழகர்க்கு அளிக்கப்பட்டிருந்ததைக்

கல்வெட்டுகள் பலவற்றால் அறிகிறோம்.

1) பராந்தக சோழனால் அளிக்கப்பட்ட இரப்பைக்குலம் வடமூரி 24/1930
2) முதலாம் ஜடாவர்மன் குலசேகரன் காலத்தில் கீழிரண்ய முட்டத்து அரசரின் மைத்துனரால் அளிக்கப் பெற்ற சேர நாராயணபுரம் 273, 274/1930
3) மாறவர்மன் விக்கிரம பாண்டியனால் கொடுக்கப் பெற்ற கழனிக்கரை
4) ஸ்ரீவல்லபனால் கொடுக்கப் பெற்ற குஞ்சாங்குடி
5) பாண்டிய மன்னின் மந்திரி ஒருவனால் கொடுக்கப் பெற்ற குறையற வழிவிட்ட பெருமாள் நல்லூர் 16/1932
6) மருதூர் தென்பரப்பு நாடு 11/1930. இது மாறவர்மன் சுந்தர பாண்டியனால் கொடுக்கப்பட்டது
7) சுந்தரபாண்டிய வளநாட்டில் உள்ள பெருங்கருணைச் சதுர்வேதி மங்கலம் 323/1930
8) ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் கொடுத்த புனர்குளம் 22/1932
9) பராக்கிராம பாண்டியன் கொடுத்த செங்குளம் 21/1932
10) மாறவர்மன் சுந்தரபாண்டியன் கொடுத்த சிறுதாவூர் 304/1930. இது மதுரை வட்டத்தில் உள்ளது
11) திருக்கோட்டியூர் – திருப்பத்தூர் மாறவர்மன் சுந்தர பாண்டியன் கொடுத்தது 29/1930
12) ஜடாவர்மன் குலசேகரன் கொடுத்த திருமலையுடையான் விளாகம் 275/1930
13) வீரபாண்டியன் விளாகம் 275/1930
14) பாண மன்னரால் அளிக்கப் பெற்ற மேலிரண்ய முட்டத்து குளமங்கலம் 307/1930

15) மாவலி பாண மன்னனால் கொடுக்கப் பெற்ற பண்ணைப்பச்சேரி பெருமாநல்லூர் 12/1932, 16/1932

16) நாகம நாயக்கனின் திருமகனும், அச்சுத தேவராயரின் தளபதியுமான விஸ்வநாத நாயக்கர் கொடுத்த ஊர் குன்றத்தூர் சீர்மையில் உள்ள ஆதஞ்சி 88/1929

17) சதாசிவராயர் ஆட்சிக் காலத்தில் (கி.பி.1544) பெத்தராசன் கொடுத்த களவேலி நாட்டில் உள்ள நாலுக்கோட்டைச் சீர்மை 86/1929

18) கவுண்டன்பட்டி எனும் இராமாநுஜ நல்லூர். இது கி.பி.1589 வேங்கட தேவ மகாராஜாவால் அளிக்கப் பெற்றது. 91/1929

19) கிருஷ்ண தேவராயன் தளபதி வீரய்யா தண்டேஸ்வரன் கொடுத்த சமய நல்லூர் சாத்தமங்கலம் 90/1929

20) கவந்தன்பட்டி இராமநுஜ நல்லூர்

21) கீழ்ப்பருத்தியூர் – திருவாடானை தாலுகா

22) மொசுக்குடி – சிவகங்கை தாலுகா

23) பெருங்கருணை என்ற ஊர் 312/1930

24) இராஜராஜ நல்லூர் எனப்படும் சுந்தரத் தோள் விளாகம்

25) சங்கத்தழக நல்லூர் 24/1932

26) தடங்கண்ணி 11/1932

27) விளாத்தூர் இளங்கோனேரிபுரம் 87/1929

கல்வெட்டுகள் வாயிலாக அறியப்படும் நிலக்கொடை:

கீழே குறிக்கப் பெறும் கிராமங்களில் உள்ள நிலங்கள் அழகர் கோயிலுக்கு உரிமையாக இருந்தன என்பதைக் கல்வெட்டுக் குறிப்புகளால் அறிகிறோம்.

ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் கொடுத்த ''வளவாய்''

எனும் ஊரில் நிலங்கள் 317/1930. இடைக்காட்டூர் எனப்படும் அழகிய பாண்டிய நல்லூர் 276/1930 – இது ஜடாவர்மன் குலசேகரன் கொடுத்தது. துவரப்பாடி கம்பாவூர் நாட்டிலுள்ள 315/1930, வைகைக்கரைச் சீர்மையிலுள்ள காரிச்சேரி 87/1929, காரியேரி 329/1930, கொல்லங்குலம் 10/1932, குலசேகரச் சதுர்வேதி மங்கலத்தில் உள்ள நிலங்கள் 318/1930, மேலிரண்ய முட்டம் 282/1930, நாலுக்கோட்டை 86/1929, தென்பரப்பு நாடு பாதிரிக்குடியின் கண் உள்ள நிலங்கள் 308/1930, அழகிய பாண்டியன் குளம், ஆண்டனூர், தேவிமங்கலம், பராந்தக சதுர்வேதி மங்கல சபையார் இளையவில்லிதாசர்க்கு அளித்த பெருமாள் நல்லூர் நிலம் 10, 22/1932, ராஜராஜ நல்லூர் எனப்படும் சுந்தரத்தோள் விளாகம். இது ஜடாவர்மன் குலசேகரன் கொடுத்த நிலமாகும் 279/1930, சமந்த நாராயணச் சதுர்வேதி மங்கலத்தில் உள்ள நிலங்கள் 322/1930, சுந்தர பாண்டியன் கொடுத்த சிலைமான், சிறுவெள்ளறை நிலங்கள் 319/1930, சோழ குலாந்தகச் சதுர்வேதி மங்கலம் ஜடாவர்மன் குலசேகரன் கொடுத்தது 319, 320/1930, ஜடாவர்மன் குலசேரகன் I 300/1930 இவன் கொடுத்த நிலங்கள் பிரமதேயத்திற்காக பாகனூர்க்கூற்றத்தில் உள்ள நிலங்களாகும். இந்நிலங்கள் இவனது பட்டத்தரசி தரணி முழுதுடையாளின் வேண்டுகோள்படி கொடுக்கப்பட்டவை, தேனூர 287/1930, வானவன் மாதேவிச் சதுர்வேதி மங்கலத்தில் உள்ள நிலங்கள் 9/1932. மேற்கண்ட ஊர்களில், இடங்களில் அமைந்துள்ள நிலங்கங் திருமாலிருஞ் சோலைமலை நின்றருளிய பரமஸ்வாமிக்கு கொடுக்கப்பட்ட நிலங்களாகும்.

அக்ரஹாரங்கள் பற்றிய குறிப்பு:

பெருமானின் திருப்பணியில் ஈடுபட்டவர்களுக்கு அக்ரஹாரங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டன. இவர்கள் வாழ்ந்த பகுதி பற்றிய குறிப்புகளும் கல்வெட்டில் இடம் பெறுகின்றன. 287/1930

மடங்கள், மடப்புறங்கள்:

மடங்கள் கட்டவும், அங்கு மாணாக்கர்க்குக் கல்வி போதிக்கவும், கொடையளிக்கப்பட்டன. இம்மடங்கள் வாயிலாகச் சமய வரலாறு, கல்வி, மருத்துவம் அனைத்தும் வளர்க்கப்பட்டன. இம்மடங்கள் சமுதாயத்திற்கு அருந்தொண்டு ஆற்றின. இம்மடங்களில் சன்னியாசிகளும், யாத்ரிகர்களும் தங்கினர். இம்மடங்களில் நிர்வாகம் நன்கு நடந்தது. இம்மடங்களில் இராமர்யணம், மகாபாரதம் படித்தல், அதை விவரித்தல் ஆகியன நடைபெற்றன. கி.பி.13 ஆம் நூற்றாண்டில் சுந்தர பாண்டியன், குருகுலத்தரையன் என்பவனுக்குத் திருத்தங்கலில் கட்டிக் கொடுத்த மடம் குறிக்கத் தக்கது.

இனி கல்வெட்டுகளில் குறிக்கப் பெறும் மடங்கள் பற்றிக் காண்போம்:

1) குலசேகரன் மடம்:

ஸ்ரீமான் உய்ய வந்தான் எனும் முனையதரையரால் ஒரு மடம் நிறுவப் பெற்றது என்று அறிகிறோம். இவர் கப்பலூரைச் சார்ந்தவர். இம்மடம் ஆடி, ஐப்பசி, மார்கழி போன்ற மாதங்களிலும் கோயில் திருவிழா நாள்களிலும் வேதியற்கு அன்னதானம் செய்வதற்கு என்று கட்டப்பட்ட மடம் என்று தெரிகின்றது. இம்மடம் ஜடாவர்மன் குலசேரகனின் 13 ஆவது ஆட்சியாண்டில் கட்டப் பெற்ற

மடம். இதற்கான கொடை நிலம் ராஜராஜ நல்லூரில் உள்ள திருக்கானப்பேர்க் கூற்றத்தின் கண் இருக்கும் சுந்தரத்தோள் விளாகமாகும். (279, 280/1930)

2) திருநாடுடையான் மடம்(277/1930):

இம்மடம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்து மடமாகும். இம்மடம் திருநாடுடையான் நீலங்கனால் கட்டப்பட்டது. இவன் மதுரோதய நல்லூரைச் சார்ந்தவன். இவன் த்ரிதண்டி சன்னியாசிகள், ஏகாங்கிகள் முதலான வைணவர்களின் பசிப்பணி அகற்ற இம்மடத்தை நிறுவினான். சுந்தரபாண்டியன் இம்மடத்திற்குரிய நிலங்களுக்கு வரி விலக்கு அளித்துள்ளான் என்பதும் குறிக்கத்தக்கது.

3) அமைத்த நாராயணன் மடம் (13/1932):

இம்மடம் அழகன் என்று அழைக்கப்படும். அகளங்க நாடாள்வனால் கட்டப்பட்டது. த்ரிதண்டி சன்யாசிகளுக்கும், வைணவர்களுக்கும் உணவிடுவதற்காக அமைக்கப் பெற்ற மடம். இம்மடத்திற்குரிய நிலங்கட்கும் வரிவிலக்கு அளிக்கப்பட்டன.

4) வாணாதிராயன் மடம் (13/1932):

இக்கல்வெட்டுக் குறிப்பின் வாயிலாக வாணாதிராயன் என்று ஒரு மடம் இருந்தது என்பதையும் இதன் அதிகாரி வாணாவிச்சாதரன் என்பதையும் அறிகிறோம்.

5) இராமானுஜர் கூடம் (கி.பி.1535)(81/1929):

கொண்ட செட்டியும், இராமய்யா செட்டியும் இக்கூடத்தில் இருந்தவர்க்குக் கொடை கொடுத்துள்ளனர். இக்கூடத்தின் செலவுகளுக்கும், பெருமானின் திருவாராதனைகளுக்கும், கரிச்சேரி என்ற ஊரின் வருவாயினைக் கொடுத்துள்ளனர்.

அன்னதானங்கள், தண்ணீர்ப் பந்தல்கள்:

அழகர்கோயில் கல்வெட்டுகள் சில அன்னதானங்கள், தண்ணீர்ப்பந்தல் பற்றிக் குறிக்கின்றன.

1) குலசேகரன் மடத்தில் உள்ளவர்கள் - ஆடித்திருவிழா, ஐப்பசித் திருவிழா, மார்கழித் திருவிழாவில் வருவோர் போவோர்க்கு அன்னதானம் வழங்கியதைக் காண்கிறோம். (279/1930)
2) இக்கல்வெட்டுக் குறிப்பின் வாயிலாக அண்ணாவி பெருமாள் பிள்ளை என்பவர் குறிப்பிட்ட விழா நாள்களில், வைணவர்களுக்கு உணவளித்த செய்தியினைக் காணலாம். (285/1930)
3) வைணவர்களுக்கு உணவளிப்பதற்காகச் செல்லூரில் உள்ள ஆண்ட நாடு கொடையாகக் கொடுக்கப்பட்ட செய்தியினைக் கல்வெட்டுக் கூறுகிறது. (31/1932)
4) ''இராமா செட்டியார் உபயக் கட்டளை'' – ஏழைகளுக்கு உணவு கொடுப்பதற்கு என்று உருவாக்கப்பட்டது. இக்கட்டளை இராமாநுஜக் கூடத்தில் இருந்த வைணவர்களுக்கு உணவளித்தது (87/1929)

மேற்குறித்த கல்வெட்டுச் சான்றுகள் வாயிலாக அழகர் கோயிலில் விழா நாள்களிலும் உற்சவ நாள்களிலும் உணவளிக்கப்பட்டது தெரிய வருகிறது. இன்றும் சில கட்டளைகளும், இன்றுள்ள இராமாநுஜர் கூடமும் விழா நாள்களிலும், உற்சவ நாள்களிலும் உணவளித்து வருவது குறிக்கத் தக்கது.

அடுக்களைப்புறம் 325/1930, 14/1932:

திருக்கோயிலில் அமைந்துள்ள திருமடப்பள்ளிக்கென்றே சில கொடைகள் அளிக்கப்

பெற்றுள்ளமையும் குறிக்கத் தக்க ஒன்று. வீரபாண்டியன் எனும் பாண்டிய மன்னனால் 13–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இராமானுஜன் என்பவருக்காக அளிக்கப்பட்டதைக் காண்கிறோம். இவர் அடுக்களையில் பணியாற்றுபவர் என்பதும் குறிக்கத்தக்கது. 325/1930

திருநந்தவனப்புறம்: 89/1923, 271, 272, 300, 302, 303/1930, 13/1932

திரு ஓடைப்புறம்: 282, 295, 296, 298, 299, 300, 302, 303/1930, 17/1932

திரு மாலைப்புறம்: 308, 315, 316/1930

மேற்குறித்த பத்தொன்பது கல்வெட்டுக் குறிப்புகள் வாயிலாக திருமாலிருஞ்சோலை மலையில் அமைந்திருந்த திருநந்தவனங்கள், மலர்த் தோட்டங்கள், ஓடைகள் முதலானவற்றை நாம் அறிந்து கொள்கிறோம். அழகர் கோயில் புராணங்களில் ''உத்யான சைவம்'' ''சோலைமலை'' என்ற அமைப்பும், இன்று வரை அமைந்துள்ள இதன் பெயரமைப்பும், மலையமைப்பும், பலவகைப் பூந்தோட்டங்களும், நந்தவனங்களும் மேற்கூறிய கல்வெட்டுச் செய்திகளை உறுதி செய்கின்றன எனலாம்.

மேற்குறித்த நந்தவனங்களும், மலர்த் தோட்டங்களும், திரு ஓடைகளும், அரசன், அரசனின் பட்டத்தரசி, நண்பர், உறவினர் என அனைவரும் அமைத்துள்ளனர். அரச குலத்தவர் அல்லாது சாதாரண நிலையில் உள்ளோரும் எம்பெருமான் மீதுள்ள இணையற்ற காதலால், அவனுக்கு மலர்த் தோட்டங்களை உருவாக்கியமைக்கு மேற்குறித்த கல்வெட்டுகள் சான்று பகரும். நந்தவனம் அமைக்கவும், இருக்கும் மலர்த்

தோட்டங்களைப் பாதுகாக்கவும், நந்தவனங்களில் கிணறு வெட்டவும், மலர் பறிப்பதற்கும், பறித்த மலரை மலையாக்குவதற்கும் கொடைகள் அளிக்கப்பட்டுள்ளன. இவற்றின் பெயர்ச்சிறப்பு:

1) நந்தவனங்களுக்காக அளித்த கொடை நந்தவனப்புறம் என்று கல்வெட்டுகளில் அழைக்கப்பட்டது.

2) அல்லி, நீலோற்பலம் முதலான மலர்களுக்காக அளித்த ஓடைகள் திரு ஓடைப்புறம் என்று அழைக்கப்பட்டன

3) மாலைகள் முதலியன கட்டுவதற்காக அமைத்த மலர்த் தோட்டங்கள் திருமாலைப்புறம் என்றும் அழைக்கப்பட்டன.

நித்திய திருவாராதனைகளுக்கும், விசேஷப் படிகளுக்கும், உற்சவங்களுக்கும் வேண்டிய திருமாலைகளையும், அலங்கார மாலைகளையும், திருத்துழாய் மாலைகளையும் கொடுக்கும் வகையில் இக்கொடைகள் அமைந்திருந்தன.

திருப்பணிப்புறம்:

கல்வெட்டுகளின் வாயிலாகக் கோயில்களில் திருப்பணி நிகழ்வதற்கென்று கொடைகள், நிவந்தங்கள் கொடுக்கப்பட்டன என்பதை நாம் அறிகின்றோம். இது ''திருப்பணிப்புறம்'' என்ற பெயரால் அழைக்கப்பட்டது.

1) இறைவன் அழகிய மணவாளன் திருமண்டபத்தில் மழவராயன் திருப்பள்ளிக் கட்டிலில் அமர்ந்திருந்த பொழுது, மன்னரால் திருவாளன் என்பவருக்கு கோபுரங்கள், மண்டபங்கள் திருப்பணி செய்யுமாறு கட்டளை இடப் பெற்றது 306/1930

2) கி.பி.15 ஆம் நூற்றாண்டு சகம் 1386 (கி.பி.1464) மாவலி வாணாதிராயன் உறங்காவில்லிதாசன்

என்பவன் கட்டளைப்படி திருவாளன் சோமாஜி என்பவனால், அழகர்கோயில் முழுவதும் திருப்பணி செய்யப்பட்டது. ''உபானம் முதல் ஜகதி'' வரை திருப்பணி செய்யப்பட்டதற்குக் கல்வெட்டுச் சான்று உள்ளது. 307/1930 இச்செலவுகளுக்குக் குருமங்கலம் என்ற கிராமம் இறையிலியாகக் கொடுக்கப்பட்டது

3) மாறவர்மன் குலசேகரனின் எட்டாவது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு ஒன்றும் திருப்பணி பற்றிக் குறிக்கின்றது 323/1930 – இக்கல்வெட்டு இவனது காலத்தில் அழகர் திருசினுக்கர் என்பவரால் கோயில் இரண்டாவது பிரகாரத் திருச்சுற்று மதிலின் மேற்குப் பகுதி திருப்பணி செய்யப் பெற்று, பின்பு அம்மதிலுக்கு ''கோதண்டராமன் திருமதில்'' என்று பெயர் சூட்டப்பட்டதைத் தெரிவிக்கிறது. இம்மதில் கட்டுவதற்கு இறையிலியாக சுந்தர பாண்டிய வளநாட்டில் உள்ள பெருங்கருணைச் சதுர்வேதி மங்கலம் கொடுக்கப்பட்டது

4) ஜடாவர்மன் குலசேகரன் காலத்திலும் கோயில் திருப்பணி குறிக்கப்படுகிறது. இத்திருப்பணி புரிந்தவர் இளைய வில்லிதாசர். இக்கோயில் திருப்பணிக்குப் பராந்தகச் சதுர்வேதி மங்கலத்தில் உள்ள புனற்குளம் தேவதானமாகக் கொடுக்கப்பட்டது. 22/1932 மேலும் திருப்பணி பற்றிப் பல கல்வெட்டுகள் குறிக்கின்றன. 12/1932, 83/1929 (83/1929). மூன்றாவது திருச்சுற்றின் தெற்குப்புறம் உள்ள படியேத்த மண்டபம் தோமரசய்யன் காலத்தில் திருப்பணி செய்யப்பட்டது. அங்குள்ள தூணில் அவருடைய உருவம் மேற்குப் பார்த்த வண்ணம் இரு கரங்களையும் கூப்பிய வண்ணம் அமைந்துள்ளதைக் காணலாம்.

சந்திகள் :

1) உத்திராடம் சந்தி (3/1932):

இந்தச் சந்தி அரசனின் மூத்த தமையனார் (அண்ணாழ்வியினது) பிறந்த நட்சத்திரமான ஒவ்வொரு மாத உத்திராடத்தன்றும் நடத்தப் பெற்றது. இதற்கு ஆகும் செலவுகட்குக் கொடையாகச் சோழபாண்டிய வளநாட்டில் உள்ள இளங்கோனேரி எனும் ஊர் கொடுக்கப்பட்டுள்ளது.

2) சதயம் சந்தி 9/1932:

சுந்தரபாண்டியன் தமையனார் (அண்ணாழ்வி) சொக்கநாதரின் பிறந்த நட்சத்திரமான மீன மாதத்தில் வரும், சதய நட்சத்திரத்தில் திருமாலிருஞ் சோலை நின்றருளிய பரம சுவாமிகளுக்குத் திருமஞ்சனம், வழிபாடு ஆராதனை நிகழும். இதைக் குறிக்கும் சந்தியே சதயம் சந்தி. (9/1932)

இக்கல்வெட்டு மாறவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி சுந்தர பாண்டியனின் இரண்டாவது ஆட்சி ஆண்டில் பொறிக்கப்பட்டது. மேற்குறித்த சதயம் சந்திக்கு ஆகும் செலவுக்கு வானவன் மாதேவிச் சதுர்வேதி மங்கலத்தில் உள்ள வேண்பு நாடு கொடையாகக் கொடுக்கப்பட்டது.

3) குருகுலத்தரையன் சந்தி 11/1932:

முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் 23 ஆவது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டின் வாயிலாகச் சிற்றூருடையான் சோரன் உய்ய நின்றாடுவான் எனும் குருகுலத்தரையனால், வடதலைச் செம்பில் நாட்டில் உள்ள மதுரோதய நல்லூரானது அரையன் திருவாலவாயுடையான் எனும் சுந்தர பாண்டிய சேதிராயனிடமிருந்து வாங்கப் பெற்றுக், கோயிலுக்கு இறையிலியாக அளிக்கப்பட்டது. அவ்வாறு அளிக்கப்பட்ட இறையிலியிலிருந்து குருகுலத்தரையன் சந்தி

கோயிலில் நடந்து வந்தது என்பதை அறிகிறோம்.

4) அரசமைக்காமன் சந்தி, அழகன் அகளங்க நாடாள்வான் சந்தி:

அழகர்கோயிலில் ஆடி மாதம் நிகழும் 9 ஆவது திரு நாளான தேர்த்திருவிழாவன்று ''அமைத்த நாராயணன்'' என்னும் அழகரது திருத்தேர், தியாகஞ்சிறயான் என்னுந் தெருவில் வந்து கொண்டிருந்தது. அப்பொழுது சடகோபன் பாட்டுக் பாடிக் கொண்டு வந்தான். அப்பொழுது முதல் கோயிலுக்கு கொடுக்கப்பட்ட சந்தியே இது என்பதை இக்கல்வெட்டின் வாயிலாக 14/1932 அறிகிறோம். இந்தச் சந்திக்குரிய கட்டளையினை இட்டவன் பெயர் இருஞ்சிறையுடையான் எனும் சுந்தரத்தோளுடையான் அமரனாவான். இவனது கட்டளைப்படி ''அரசமைக்காமன் சந்தி'' அழகர் கோயிலில் ஆடித் திருவிழா முதல் நிகழ்ந்து வந்தது.

இக்கல்வெட்டின் வாயிலாக அழகன் அகளங்க நாடாள்வான் அடுக்களைப்புறத்திற்கு அளித்த மற்றொரு கொடைக் குறிப்பும் குறிக்கத் தக்க ஒன்றாகும். ''சுந்தரத் தோள் விளாகம்'' என்று புதிதாக உருவாக்கப்பட்ட ஊரினை அடுக்களைப்புறத்திற்கு அளித்தான்.

5) குலசேகரன் சந்தி:

மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் இறைவனுக்கு நிகழ்த்தப்பட்ட சந்தி இது. 289/1930

6) சுந்தரபாண்டியன் சந்தி:

சுந்தரபாண்டியன் தனது பெயரிலும் ஒரு சந்தியினை ஏற்படுத்தி இறைவனுக்கு வழிபாடு நடத்தினான். இந்த சந்தி இவனது 10 ஆவது ஆட்சியாண்டில் அமைக்கப்பட்டது. இதற்காக

கிராமங்களும், விரிவிலக்கப்பட்ட நிலங்களும், சதக்குடி என்னும் கிராமத்தில் பாடி காவலும் அளிக்கப்பட்டன. 289/1930

7) ஹொய்சள வீரசோமேஸ்வரன் சந்தி:

இவனும் தனது பெயரில் அழகருக்கும் அவரது உற்சவர்களுக்கும் வழிபாடு செய்வதற்காகவும், அபிஷேக ஆராதனை செய்யவும் சந்தி ஒன்றினை ஏற்படுத்தியுள்ளதைக் கல்வெட்டுகள் காட்டுகின்றன (291,293/1930).

பிரபந்தங்கள் பாடுதல்:

இக்கல்வெட்டுக் குறிப்பின் வாயிலாகக் கோயில்களிலும் திருவிழாக் காலங்களிலும் 'சடகோபன்' என்பவரால் பிரபந்தங்கள் பாடப்பட்டன என்பதையும் அறிகிறோம். 14/1932

அழகரின் திருவிடையாற்றம் பற்றி:

வழிபாட்டுப் பொருட்களுக்கும், வழிபடுதலுக்குங் கூடக் கொடையளிக்கப் பெற்றது. அழகருடைய திருவிடையாற்றத்திற்கும் கொடை கொடுக்கப்பட்டதற்கு நிசங்கபிரதாப சக்கரவர்த்தி வீர சோமேஸ்வரனின் 10 ஆவது ஆட்சியாண்டிலும் சுந்தரபாண்டியன் காலத்திலும், அச்சுததேவ மகாராயரின் காலத்திலும் கொடுத்த நிலக் கொடைகளால் அறியப்படுகின்றன. (292/1930, 317/1930,88/1929) தூண்கள், கற்களும் கொடயாகக் கொடுக்கப்பட்டதை ஒரு சில கல்வெட்டுகளால் அறிகிறோம். சுந்தரபாண்டியன் மண்டபத்தில் உள்ள ஒரு தூண் கூத்தன் அத்தியூர் என்னும் சுந்தர பாண்டிய விழுப்பரையனால் கொடுக்கப்பட்டது.

அடுத்துள்ள தூண் வண்குருகூர் நகரான் பட்டன் என்பவனால் கொடையாகக் கொடுக்கப்பட்டது. மேலும் இறைவனது கோபுரங்களில் அமைந்துள்ள கற்களும் கொடைகளாகக் கொடுக்கப்பட்டன. (6/1932)

திருவிளக்குப்புறம்:

அணையா விளக்குகளுக்கெனக் கொடை கொடுத்தல் பண்டு நிலவி வந்த பண்பாகும். விளக்கெரிப்பதற்கு நிலங்களும் காசும் தானமாக அளிக்கப்பட்டதற்குக் கீழக்காணும் கல்வெட்டுகள் சான்று தருகின்றன.

1) 288, 290, 296, 297, 302, 309, 310, 326, 327/1930

2) 4, 17, 21/1932

உலாவரும் தீபங்கள்:

இறைவன் உலாவரும் பொழுது தீப்பந்தங்கள் எரிக்கப்பட்டதால், அவற்றிற்குக் கொடுத்த கொடை பற்றிய குறிப்பும் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளன. 17/1932

கிணறுகள்:

கோயில் நிலங்களையும் மலர்த் தோட்டங்களையும் பராமரிக்கப் பாசன வசதி செய்யப்பட்டது. கிணறுகள் தோண்டப்பட்டன என்பதைப் பல கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

ஜடாவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி முதலாம் குலசேகரன் காலத்தில் மலர்த் தோட்டங்களின் பாசன வசதிக்காக கிணறு வெட்டப்பட்டதை நாம் அறிகின்றோம். ஏரி வரி என்று ஒரு வகை வரியும் குறிக்கப்பட்டுள்ளது. 295/1930

முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் காலத்தில் மந்திரி ராமன் என்ற பல்லவராயர் கிணறு வெட்டியதை ஒரு கல்வெட்டால் அறிய முடிகிறது. 282/1930

கோயில் நிர்வாகக் கொடைகள்:

கோயிலைத் திறம்பட நடத்தவும், அவ்வாறு நடத்துவதற்கு ஆகும் செலவிற்கும் கொடை அளிக்கப்பட்டன. 12, 26, 27/1932.

யக்ஞோபவீதம் :

இக்கல்வெட்டுக் குறிப்பின் வாயிலாகப் பெருமானுக்குத் தினந்தோறும் அணிவிக்கப்படும் முப்புரி நூலினை இடைக்காட்டூரைச் சார்ந்த அரையன் சடகோபதாசன் என்பவன் தினந்தோறும் அளித்து வந்தான். 284/1930

புனுகு :

மூலவரான ஸ்ரீபரமேஸ்வாமிகளுக்கு நித்தமும் புனுகு சாத்து நடக்க வேண்டியிருந்ததால், இதற்காகும் செலவுகளுக்கென, ஜெயங்கொண்ட சோழ வளநாட்டின் பெருவூர் நாட்டிலுள்ள விக்ரம சோழன் மாதிரிமங்கலத்தைச் சார்ந்த விசையன் தேவர் என்பவர் காரியேரி எனும் கிராமத்தை நன்கொடையாக அளித்திருந்தார். 329/1930

மண்டகப்படி திருவாராதனைகள் :

அழகர் சித்தரைத் திருவிழாவிற்கு மதுரை செல்லும் பொழுது அப்பன் திருப்பதியில் உள்ள திருவேங்கடமுடையான் கோயிலில் தங்கிச் செல்வார். இக்கோயிலில் அழகர் தங்கும் பொழுது நிகழும் அபிஷேக ஆராதனை செய்வதற்காக கொடுக்கப்பட்ட நிலக்கொடை பற்றி சகம் 1527 (கி.பி.1605) வைகாசி மாதம் 21-ந் தேதிக் கல்வெட்டு கூறுகின்றது. 311/1930

திருமஞ்சனம் பற்றிய கல்வெட்டுகள் :

அழகருக்கு நிகழும் நித்தியத் திருமஞ்சனத்திற்குரிய கொடைகளும் கல்வெட்டுகளில் குறிக்கப்படுகின்றன.

1) முதலாம் ஜடாவர்மன் குலசேகரன் காலத்தில் நித்தியக் திருமஞ்சனத்திற்குரிய செலவுகளை மன்னனின் தேவியான தரணிமுழுதுடையாரே கொடுத்துள்ளார் என்பதை ஒரு கல்வெட்டால் அறிகிறோம். 301/1930

2) திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீவல்லபதேவன்

காலத்தில் இவனது சகோதரியின் நல்வாழ்வு கருதி அழகப்பிரானார்க்கு ஆனி மாதத்தில், விசாகத் திருநாளில் திருமஞ்சனமாட்டப்பட்டது. இதற்காக மன்னனது அமைச்சனான, குடநாட்டிலுள்ள கொற்கையூரில் வாழும் தமிழ பல்லவரையன், குஞ்சாங்குடி எனும் கிராமத்தினைக் கொடையாக அளித்துள்ளான். 313/1930

திருமாலிருஞ் சோலை நின்றருளிய பரம ஸ்வாமிகளுக்கு நிகழும் நித்யத் திருவாரதனைகளைப் பற்றி பல கல்வெட்டுகளில் குறிப்புகள் உள்ளன. 86, 87, 88, 89/1929; 271, 272, 276, 285. 287, 293, 301, 313/1930

இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் 10 ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு, இவனது அமைச்சர் மழவராயன் நித்திய திருவாரதனை செலவுகளுக்காக சோழ பாண்டிய வளநாட்டில் உள்ள சிறுதாவூர் என்ற ஊரினைக் கொடுத்தார். 304/1930

சகம் 1530 (கி.பி.1608) சித்திரை மாதம் 2 தியதி கல்வெட்டொன்று அழகரின் சித்திரைத் திருவிழாவிற்காக இரப்பையூரில் உள்ள தோட்டங்களில் கிடைக்கும் வருவாயினைக் கொண்டு ரெங்க அய்யங்காரின் மகன் அப்பய்யங்கார் என்பவர் அழகருக்குத் திருவாராதனைக்குரிய தேங்காய் பழங்களை வாங்கிக் கொடுத்ததைத் தெரிவிக்கின்றது. 89/29

திருமாலைகள் பற்றிய கல்வெட்டுகள் :

ஜடாவர்மன் குலசேகரனின் இரண்டாவது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டின் வாயிலாக இராமன் கண்ணப்பிரான் எனும் கலிகடிந்த பாண்டிய தேவன் மலையின் மீது மலர்த்

தோட்டம் ஒன்றை அமைத்து அதிலிருந்து மலர்கள் பறிக்கப்பட்டுச் சாதாரண நாள்களிலும் மற்றும் விசேஷ நாள்களிலும் பெருமானுக்கு மாலையாக அணிவிக்கப் பெற்றுள்ளது என்பதையும், இம்மலர்த் தோட்டத்தைக் காவல் புரிபவனுக்கு உணவு கோயிலிருந்து கொடுக்கப்பட்டது என்பதையும் ஒரு கல்வெட்டு தெரிவிக்கிறது. 271/1930

பெத்தராசன் தனது அன்னையின் சுகத்திற்காக தாமரை மாலைகளை இறைவனான அழகருக்குத் தினமும் அளித்து திருவாராதனை செய்தான். இதற்காகக் களவேலி நாட்டில் உள்ள நறுக்கோட்டைச் சீர்மையைத் தானமாகக் கொடுத்தான். 86/1929

இக்கல்வெட்டுச் செய்தி மிகவும் சுவை பொருந்தியது. கள்ளழகர் மீது மாறாக் காதல் கொண்ட காஷ்மீர தேசத்தார் மூவர், கோயிலில் மூன்று பணியாட்களை அமர்த்தி அழகருக்குப் பூமாலைகள் கட்டிக் கொடுக்கச் செய்தனர். இதற்கு ஆகும் ஊதியத்திற்காக துவாரபதி நாட்டில் உள்ள கம்பவூரினைக் கோயிலுக்குக் கொடையாகக் கொடுத்தனர். 315/1930

இறைவனுக்குத் திருவமுது படைக்க:

பொதுவாக வைணவக் கோயில்களில் விஜயநகர மன்னர்கள் திருவமுதுக்கெனக் கொடுக்கும் கொடை செவிக்கும் சுவையூட்டுவதாகவே உள்ளன என்பது மறுக்கவியலா உண்மை.

ஏகாதசி, துவாதசி, அமாவாசை பௌர்ணமி, மாதப்பிறப்பு உத்திராடம் ஆகிய நாள்களில் பெருமாள் திருஉலாவாக எடுத்துச் செல்லப்பட்டு நாற்றூண்கள் தாங்கிய யதிராஜன் கூடத்தில் திருவாராதனைகள் சிறப்புற நடைபெற்றன. இதற்கெனக் கொடைகள் பல கொடுக்கப்பட்டுள்ளன. 301/30, 90/29

கிருஷ்ணதேவ மகாராயர் காலத்தில் கொடுக்கப்பட்ட கல்வெட்டில் அரிசியினால் தயாரிக்கப்பட்ட 18 வகைப் பண்டங்களும் ஐந்து வகைக் காய்கறிகளும் ஐந்து வகைத் திருப்பணியாரங்களும் குறிக்கப்படுகின்றன.

கட்டளைகள் பற்றிய கல்வெட்டுகள்:

கோயிலுக்குரிய தர்ம கட்டளைகள் இறைவனுக்கு நித்தியத் திருவாராதனைகளைக் செய்தன என்றும் சில கல்வெட்டுகள் வாயிலாக நாம் அறிந்து கொள்கின்றோம். அவை அர்த்த ஜாமக் கட்டளை, அர்ச்சனா பாகக் கட்டளை என்ற சொற்களால் புலப்படுகின்றது.

அழகர்கோயில் நிகழும் திருவிழாக்கள் உலகப் புகழ் பெற்றவை. அன்று முதல் இன்று வரை நித்ய உற்சவம் காணும் சிறப்பு அழகருக்கு உண்டு. சித்திரை மாதம் தொடங்கி மாதந்தோறும் நடைபெறும் விழாக்கள் பற்றிக் கல்வெட்டுகள் விரிவாகக் கூறுகின்றன.

பணக் கொடைகள்:

கல்வெட்டுக் குறிப்புகளின் வாயிலாகக் காசு, பொன், அச்சு, திரமம், சக்கரம் போன்றவை கோயில் வழிபாட்டிற்காகவும், திருவிழாவிற்காகவும் நிதியாக அளிக்கப்பட்டன என்று நான் அறிகின்றோம்.

அம்மிக் கொடையும் அதில் உள்ள கல்வெட்டும்:

திருமாலிருஞ்சோலை நின்றான் மாவலி வாணாதிராயன் அழகர் பெருமானுக்குக் கொடுத்த அம்மியும், அதில் பொறித்துள்ள கல்வெட்டும் குறிக்கத் தக்கது. அம்மியின் பக்கங்கள் எழிலுற அமைக்கப்பட்டுள்ளன. அடிப் பகுதியில் சிம்மங்கள் கடைந்த அணிகள் அழகுபடுத்துகின்றன. கல்வெட்டில் காணப்படும் பகுதி பின்வருமாறு:

"திருமாலிருஞ்சோலை நின்றான் மாவலி வாணாதராயர் உறங்காவில்லி ஆன சமர கோலாகலன்" இம்மன்னன் கி.பி.15 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பாண மன்னனாவான்.

செல்வக் கலசப் பானையும் கல்வெட்டும்:

சுவாமி அழகன் ஆண்டவனுக்கு மாவலி வாணாதிராயன் கொடுத்த குறிக்கத்தக்க மற்றொரு கொடை வெள்ளிக் கலசப் பானையாகும். இதில் உள்ள எழுத்துப் பொறிப்பு "சுவாமி ஆண்டவன் அழகருக்கு காளை மாவலி வாணாதிராசா உபயம் வெள்ளிக் கலசப் பானை தூக்கம் மதுரை விறகன் படிக்கு வீ. பணவடை ரு"

பெயர்ப் பலகைகள்:

அழகர்கோயிலின் வடக்கு வாயிலில் உள்ள சிறிய துண்டுக் கல்வெட்டுகள் ''இத்திருமாளிகை தியாகம் சிறிய பெருமாள்'' என்று பொறிக்கப்பட்டள்ளது. எனவே கோயிலின் திருமாளிகைப் பகுதியை எடுத்தவன் பெயராக இதனைக் கருதலாம்.

தமிழகக் கல்வெட்டுகளில் திருமாலிருஞ் சோலைமலை, அழகர் கோயில் பற்றிய செய்திகள்:

சீவலப்பேரியில் உள்ள கல்வெட்டு திருமாலிருஞ் சோலையில் உள்ள அழகர்கோயிலைப் பற்றிக் குறிக்கின்றது. (கி.பி.1021) 408/1906. புதுக்கோட்டை மாவட்டக் கல்வெட்டுகளில் "திருமாலிருஞ் சோலை நின்றான்" என்று இம்மலை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

விருத்தாசலத்தில் உள்ள ஒரு கல்வெட்டில் '"திருமாலிருஞ் சோலை நின்றான் மழவராயர்" என்று குறிக்கப் பெற்றுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம் திருமெய்யம் தாலுகா

நெக்கோண கல்வெட்டில் "திருமாலிருஞ் சோலை நின்றான்" என்று ஒருவனுக்குப் பெயரிடப்பட்டதை, "பூசத்து நாள் நாம கரணஞ் சாத்தின நம்முடைய புத்ரன் ஆன நாயினார் திருமாலிருஞ் சோலை நின்றார் ஜனன காலத்தில் முந்நாள் புத்ர முகதர்சனம் பண்ணிய காலத்தில் உதகம் செய்து (நீர் வார்த்து) கொடுத்த தர்ம சாஸன பட்டயம்" என்ற வரிகளால் அறிகிறோம்.

காஞ்சிபுரத்தில் உள்ள இரு கல்வெட்டுகள் (531, 538/1919) வாயிலாக விஜயநகர மன்னர் தம் ஆட்சி திருமாலிருஞ் சோலை வரை பரவி இருந்தது என்று அறிகின்றோம்.

கோயம்புத்தூர் மாவட்டம் உடுமலைப் பேட்டையில் உள்ள 135/1909 கல்வெட்டுக் குறிப்பின் வாயிலாக வீரபாண்டிய தேவனின் ஆட்சிக் காலத்தில் ராஜராஜ வளநாட்டில் உள்ள உலகுடைப் பிராட்டி சதுர்வேதி மங்கலத்தில் உள்ள சில நிலங்களைப் பாண்டி மண்டலத்தில் உள்ள, கீழிரண்ய முட்டத்தில் உள்ள திருமாலிருஞ் சோலையின் கண் வீற்றிருக்கும் பத்து ஆழ்வார்களுக்கு விற்ற செய்தியினை அறிகின்றோம்.

திருவல்லிபுத்தூரில் உள்ள ஸ்ரீகாட்டழகர் கோயிலிலுள்ள கிருஹத்தில் உள்ள ஒரு கல்வெட்டு ''திருமாலிருஞ்சோலை மலை'' என்று குறிக்கின்றது.

கி.பி.1799 ல் கருணை வள்ளல் பச்சையப்ப முதலியார் காலக் கல்வெட்டு திருமாலிருஞ்சோலை வரும் யாத்ரிகர்களுக்கு அன்னதானத்திற்கு ஒரு லட்சம் பொன் கொடுத்ததைக் குறிக்கின்றது.

அழகர்கோயில் பற்றிய செப்பேடுகள்:

1) பசுமலை என்ற ஊரில் ஜோன்ஸ் பாதிரியாரிடம் உள்ளது இச்செப்பேட்டில் அழகர்மலையில் உள்ள வைணவ மடத்திற்குக் கொடுத்த நிலக்கொடை குறிக்கப்பட்டுள்ளது.

உ) திருமலை நாயக்கர் காலத்துச் செப்பேடு – இச்செப்பேடு அழகர்கோயிலுக்கு அருகில் உள்ள வெள்ளியக்குன்றம் என்ற ஜமீன்தாரிடம் உள்ளது. திருமலை நாயக்கர் காலத்திலிருந்து வெள்ளியக் குன்றம் ஜமீன்தாரின் முன்னோர்கள் ''அழகர்கோயில்'' பாதுகாவல் உரிமையினைப் பெற்றிருந்தனர் என்பது இச்செப்பேட்டின் செய்தியாகும். இன்றும் வெள்ளியக் குன்றம் ஜமீன்தாருக்கு அழகர்கோயிலில் மண்டபம் உண்டு. ஆடித்திருவிழா, சித்திரைத் திருவிழா நாள்களில் முதல் மரியாதை அளிக்கப்படுவது குறிக்கத்தக்கது.

12 இலக்கியச் செய்திகள்

தேனாறு பாயும் தென் திருமாலிருஞ் சோலைமலை பண்டைத் தமிழ் இலக்கியமான பரிபாடலில் தென்னன் இளம்பெருவழுதியால், பலவாறு கூறிப் பரவப்படுகின்றது. காப்பிய இலக்கியத்தில் வாழ்த்தி வணங்கப்படுகின்றது. பத்துப்பாட்டுள் முதற்பாவின் ஆசிரியர் நக்கீரரால் ஏத்தப்படுகின்றது. இதிகாசங்களால் பலவாறு இயம்பப்படுகின்றது. புராணங்களால் போற்றப்படுகின்றது. இம்மலையைப் பற்றியும், இங்குள்ள இறைவனின் எழில் பற்றியும், கலம்பகமும், சிற்றிலக்கியங்களான பிள்ளைத் தமிழ் நூலும், தூதும், அம்மானையும் பலவாறு போற்றும், சிலம்பாற்றின் சிறப்பினைப் பற்றிப் பாடாத பனுவலே இல்லையெனலாம். இம்மலை பற்றிய இலக்கியச் செய்திகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம். சைவ வைணவ இரு இலக்கியங்களும் இம்மலையைப் பாடும்.

1) சங்க இலக்கியங்கள்:

அ) பரிபாடல்

ஆ) பத்துப்பாட்டுள் திருமுருகாற்றுப்படை

2) காப்பிய இலக்கியம்:

அ) சிலப்பதிகாரம்

3) இதிகாசங்கள்:

1) வான்மீகி இராமாயணம்

2) மகாபாரதம்

4) ஆழ்வார் பாசுரங்கள் :

அ) நம்மாழ்வார் – 46 பாசுரங்கள்
ஆ) திருமங்கை – 30 பாசுரங்கள்
இ) பெரியாழ்வார் – 34 பாசுரங்கள்
ஈ) ஆண்டாள் – 10 பாசுரங்கள்
உ) பூதத்தாழ்வார் – 3 பாசுரங்கள்
ஊ) பேயாழ்வார் – 1 பாசுரங்கள்
மொத்தம் 124 பாசுரங்கள்

5) வடமொழி இலக்கியங்கள் :

1) சுந்தரராஜ ஸுப்ரபாதம்
2) சுந்தரபாஹு ஸ்தவம்
3) சுந்தரராஜ ஸ்தோத்திரம்
4) சுந்தரராஜ மங்களம்

6) அந்தாதி இலக்கியம் :

அ) அழகர் அந்தாதி

7) பிள்ளைத் தமிழ் இலக்கியங்கள் :

அ) அழகர் பிள்ளைத் தமிழ்
ஆ) பழமுதிர்சோலைப் பிள்ளைத் தமிழ்

8) குறவஞ்சி இலக்கியம் :

அ) அழகர் குறவஞ்சி

9) தூது இலக்கியம் :

அ) அழகர் கிள்ளை விடுதூது

10) கலம்பக இலக்கியம் :

அ) அழகர் கலம்பகம்

11) அம்மானை இலக்கியம் :

அ) அழகர் அம்மானை

12) தெலுங்கு வரலாற்று நூல் :

அ) இராய வச்சகமு

13) அருணகிரி நாதரின் திருப்புகழ்

14) புராணங்கள் :

அ) வாமன புராணம்
ஆ) பிரமாண்ட புராணம்
இ) வராக புராணம்
ஈ) ஆக்னேய புராணம்
உ) ஸ்கந்த புராணம்
ஊ) வில்லிபுத்தூர் ஸ்தல புராணம்
எ) பழநி ஸ்தல புராணம்
ஏ) ஹாலாஸ்ய மகாத்மியம்
ஐ) ஜகந்நாத மகாத்மியம்
ஒ) ஸ்ரீசனத் குமார சம்ஹிதை
ஓ) பிரம்ம சம்ஹிதை

14) பிற இலக்கிய நூல்கள்:

1) ஸ்ரீகோதை பரிணயம்
2) நவரத்ன சிந்தாமணி சருக்கம்
3) ஊசி முறி
4) ஜனன சாகரம்
5) சோடச கலாமாலை
6) ப்ராபண்ணமிர்தம்
7) திவ்யசூரி சரிதம்
8) ஸ்ரீஹம்ச சந்தேசம்
9) பாரத வெண்பா
10) கூடல் புராணம்
11) சமணப் பாடல் ஒன்று
12) "அழகர் பெருமாள் வண்ணம்"-ஓலைச்சுவடி இலக்கியம்
13) சோலைமலை சிங்கப் பெருமாள் சந்த விருத்தம்

மேலே குறித்துள்ள இலக்கியங்களில், திருமாலிருஞ்

சோலைமலை, அழகர், இங்குள்ள சிலம்பாறு தொடர்பான செய்திகளை மட்டும் சுருக்கமாகக் காண்போம்.

1) சங்க இலக்கியங்கள்:

பரிபாடல்: இப்பரிபாடல் பாட்டினை நாம் ஏற்கெனவே பார்த்துவிட்டோம்

இப்பாடலின் ஆசிரியர்: இளம்பெருவழுதி – இவர் பரிபாடலுள் 15 ஆவது பாடலாக, திருமாலிருஞ் சோலையையும், இங்குள்ள சிலம்பாற்றின் சிறப்பையும், இங்கு கோயில் கொண்டுள்ள பலராமன், திருமால் போன்றோர் தம் அருட்டிறத்தையும் பாடியுள்ளார்.

மாலும் பலதேவனும்:

சங்க காலத்தில் இங்கிருந்த கோயிலில் மாலும், பலதேவனும் இணைந்து இருந்து, அனைவர்க்கும் அருள் மழை பொழிந்தனர் என்று பரிபாடல் பகரும். இவர்கள் நிறமோ கடலும் கானலும் போல் தான். ஆனால் தொழிலோ சொல்லும் பொருளும் போல் ஒரே தன்மைத்து ஆகும். கலப்பை, தண்டு, சங்கு, சக்கரம், வில், பாராவளை போன்ற படைக்கலன்களுடன் இங்கு எழுந்தருளியுள்ளனர். இங்குள்ள திருமால் தாமரைக் கண்ணன். இன்னல் எவ்வுலகில் தோன்றினும் அங்கு இவன் தோன்றுவான். அவர் தம் துயர் துடைப்பான். அத்தோடு மட்டுமா! அவர் தம் பிறவித் துன்பத்தையும் அடியோடு அழிக்கும் அண்ணல் அல்லவா அவன்! ஆகையால் மண்ணுலக மாந்தர்களே இந்த மாலினை மனத்துள் எண்ணுங்கள்! அந்தத் திருமாலைத் 'தொழ இயலாவிட்டாலும், அவனுறையும் திருமலை நோக்கியாவது தொழுங்கள்! அதுவும் இயலாவிட்டால் அக்குன்றையே தெய்வமாகக் கொண்டு,

அது இருக்கும் திசை நோக்கியாவது தொழுங்கள்! வேதம் அவன் இன்னவன் என உரைக்கின்றது! நாங்களும் எங்களுக்கு தெரிந்த வகையில் போற்றுகின்றோம்.

"இருங்குன்றத்து அடியுறை இயைக எனப்
பெரும் பெயர் இருவரை பரவுதும் தொழுதே"

என்று தென்னன் இளம்பெருவழுதி இம்மலையின் சிறப்பினைப் பலவாறு கூறிப் பரவுவான்.

திருமுருகாற்றுப்படையில் நக்கீரர்,

"இழுமென இழிதரும் அருவி
பழமுதிர் சோலை மலைகிழவோனே"

என்று சோலைமலையில் அருள்தரும் முருகப் பெருமானையும் மலையினையும் சிலம்பாற்றினையும் இரு வரிகளில் இனிது ஏத்தியுள்ளார்.

சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள்

காடுகாண் காதையில், இம்மலையினையும், இங்கு உள்ள அழகனையும், சிலம்பாற்றினையும் பின்வருமாறு பாடுவார்.

இம்மலையினைப் பற்றி:

"கடம்பல கிடந்த காடுடன் கழிந்து
திருமால் குன்றத்துச் செல்குவிராயின்" (11–90,91) என்றும்

சிலம்பாறு பற்றி:

"நிலம்பக வீழ்ந்த சிலம்பாற்றகன்றலை" என்றும்

மலைவாழ் மால் பற்றி:

"மற்றவை நினையாது மலைமிசை நின்றோன்
பொற்றாமரைத்தாள் உள்ளம் பொருந்துமின்"
(11–133,134) என்றும்

இறைவன் முன்புள்ள கொடிமரம் பற்றி:

உள்ளம் பொருந்துவிராயின் மற்றவன்

புள்ளணி நீள்கொடி புணர்நிலை தோன்றும்

(11, 135 – 136) என்றும்

விளக்கமாக எடுத்துரைக்கப்படுகிறது.

இறைவனின் சிறப்புப் பற்றிக் குறிப்பிடுகையில் திருமாலின் தாளினை

"தோன்றிய பின்னவன் துணை மலர்த்தாளினை"

(11, 137) என்று தாமரை மலர்க்கு ஒப்பாக்கிக் கூறுவதை அறியலாம்.

இங்குள்ள பொய்கைகள்:

மேலும் இங்கு புண்ணிய சரவணம், பவகாரணி, இட்டசத்தி எனும் சிறப்புமிகு தெய்வாம்சமுள்ள மூன்று பொய்கைகள் இருந்தன என்றும் கூறுவார்.

இதிகாசங்கள்:

வான்மீகி இராமாயணத்தில்

அனுமன் இலங்கை செல்லும் போது இம்மலையைக் கடந்து சென்றதாகக் கிஷ்கிந்தா காண்டத்தில் செய்தியுள்ளது. அதில் இம்மலை ஏனைய மலை போல் மிக உயரமில்லாமல், தாழ்வாக நீண்டிருந்தது என்று குறிக்கப் பெற்றுள்ளது. (41 – 21)

மகாபாரதத்தில்

வனபர்வதத்தில் இம்மலை பற்றிய செய்தியுள்ளது. யுதிஸ்திரா என்பவன், தனது தீர்த்த யாத்திரையின் போது விருஷபாத்ரி என்றழைக்கப்படும், இம்மலை வந்து இங்குள்ள பல தீர்த்தங்களில் தீர்த்தமாடினான் என்று கூறப்பட்டுள்ளது. (83 – 21)

ஆழ்வார்தம் பாசுரங்களில்:

"வளரிளம் பொழில் சூழ் மாலிருஞ் சோலை"

"மதிதவழ் குடுமி மாலிருஞ் சோலை"

"மயல்மிகு பொழில்சூழ் மாலிருஞ் சோலை"

"வருமழை தவழும் மாலிருஞ் சோலை"

"மனுவில் வண்சுனை சூழ் மாலிருஞ் சோலை"

"மறியொடு பிணைசேர் மாலிருஞ் சோலை"

"மழக் களிற்றினம் சேர் மாலிருஞ் சோலை"

"மாதுறு மயில்சேர் மாலிருஞ் சோலை"

என்றெல்லாம் இயற்கை எழில் கொஞ்சும் இம்மலையைப் பலவாறு பாடுகின்றனர். மேலும்

"கிளரொளி இளமை கெடுவதன் முன்னம்
வளரொளி மாயவன் மருவிய கோவில்
வளரிளம் பொழில் சூழ் மாலிருஞ் சோலை
தளர் விலராகில் சார்வது சதிரே" என்று

வியந்து போற்றுகின்றார்.

நம்மாழ்வார் நெஞ்சை நோக்கி, "நெஞ்சே, நினது நினது இளமையொழியுமுன் மாலிருஞ்சோலை மாயவனைப் பார். முதுமை வந்தால் இயலாது" என்று கூறுவது குறிக்கத் தக்க ஒன்றாகும்.

"திருமாலிருஞ் சோலை மலையென்றேன் என்ன
திருமால் வந்து என்னெஞ்சு நிறையப் புகுந்தான்"

என்று இவர் தன் நெஞ்சில் இறைவன் புகுந்ததை வியந்து போற்றுகிறார்.

"திருப்பேர் நகரான் திருமாலிருஞ் சோலைப்
பொருப் பேயுறைகின்ற பிரான் இன்றுவந்து
இருப்பேனென்று என்னெஞ்சு நிறையப் புகுந்தான்
விருப்பே பெற்று அமுதமுண்டு களித்தேனே"

என்று இறைவன் நெஞ்சில் புகுந்ததும் களிக்கின்றார்

இறைவனின் பரத்துவம் குறித்துப் பின்வருமாறு கூறுவார்:

“பரஞ்சோதி நீ பரமாய் நின்னிகழ்ந்து பின் மற்றோர்
பரஞ்சோதி யின்மையின் படியோவி நிகழ்கின்ற
பரஞ்சோதி நின்னுள்ளே படருகம் படைத்த எம்
பரஞ்சோதி! கோவிந்தா! பண்புரைக்க மாட்டேனே”

திருமங்கை ஆழ்வார்:

இம்மலை பற்றி 30 பாசுரங்கள் பாடியுள்ளார். இவர்தம் பாடலில் 14 இடங்களில் திருமாலிருஞ் சோலை என்றும், 14 இடங்களில் மாலிருஞ் சோலை என்றும் ஒரு இடத்தில் “வேயிருஞ் சோலை” என்றும் பாடுவார்.

பெரியாழ்வார்:

இவர் திருமாலிருஞ் சோலைப் பெருமானைத் ‘‘தென் திருமாலிருஞ் சோலைப் பெருமான்’’ என்று 8 இடங்களில் பாடுவார்

“சிலம்பாறு, திருமாலிருஞ் சோலை, மாலிருஞ்சோலை, தண் திருமாலிருஞ் சோலை” எனப் பெரியாழ்வார் திருமாலிருஞ் சோலை மலை பற்றி மொத்தம் 30 பாசுரங்களில் பாடியுள்ளார்.

“உனக்குப் பணி செய்திருக்கும் தவமுடையேன்
இனிப்போய் ஒருவன்
தனக்குப் பணிந்து கடைத்தலை நிற்கை நின்சாயை
யழிவு கண்டாய்
புனத்தினை கிள்ளிப் புதுவழி காட்டி
உன்பொன்னடி வாழ்கவென்று
இனக்குறவர் புதிய துண்ணும் எழில்மாலிருஞ்
சோலை எந்தாய்”

உனக்குப் பணி செய்த நான் வேறு ஒருவருக்குப் பணி

செய்யேன்! இறைவா! உனக்குப் பணி செய்வதே எனது சிறந்த தவமாகும். வேறு எவருக்கும் பணிந்து நடக்க மாட்டேன்! என்று உளமுருகப் பாடுகின்றார்.அழகர்மலையின் பல பெயர்கள் பற்றி பின்வருமாறு பாடுவார் பெரியாழ்வார்.

“பலபல நாமம் சொல்லிப் பழித்த சிசுபாலன் தன்னை
அலவலைமை தவிர்த்த அழகன் அலங்காரன் மலை
குலமலை கோலமலை குளிர்மாமலை கொற்ற மலை
நிலமலை நீண்டமலை திருமாலிருஞ் சோலையதே”

ஆண்டாள்:

ஆண்டாள் இங்குள்ள பெருமான் மீது ஆராக் காதலுற்று 10 பாசுரங்கள் பாடியுள்ளார். மாயவன் மலை மீது காணும் பொருளில் எல்லாம், அவன் நிறத்தைக் காண்கின்றார். கருவிளைபொண் மலர்களையும், காயாம் பூக்களையும் கண்டு உங்களுக்கெல்லாம் எப்படி எம்பெருமானின் நிறம் வந்தது என்று கேட்கின்ற பாடல் அவரது இறை காதலை வெளிப்படுத்துவதாக உள்ளது.

ஆண்டாள் அழகனைத் தம் கணவனாக வரித்துக் கொண்டாள் என்பதற்குக் கீழ்க்காணும் பாசுரம் எடுத்துக்காட்டு:

“நாறும் நறும்பொழில் மாலிருஞ் சோலை நம்பிக்கு நான்
நூறு தடாவில் வெண்ணெய் வாய்நேர்ந்து பராவி வைத்தேன்
நூறுதடா நிறைந்த அக்கார அடிசில் சொன்னேன்
ஏறுதிருவுடையான் இன்று வந்து இவை கொள்ளுங் கொலோ!”

பூதத்தாழ்வார்:

இவர் மூன்று பாசுரங்கள் பாடியுள்ளார். மூன்றிலும் இறைவனையும், மலையினையும் இணைத்தே பாடியுள்ளார்.

“பயின்றது அரங்கம் திருக்கோட்டி பன்னாள்
பயின்றதுவும் வேங்கடமே பன்னாள் பயின்றது”

“அணிதிகழும் சோலை அணிநீர் மலையே

மணிதிகழும் வண்தடக்கை மால்"
"வேயிருஞ் சாரல் வியலிரு ஞாலம் சூழ்
மாயிருஞ் சோலை மலை"

"வெற்பென்றிருஞ் சோலை வேங்கடமென்றிவ்விரண்டும்
நிற்பென்று நீமதிக்கும் நீர்மை போல் நிறபென்று
உளங் கோயில் உள்ளம் வைத்துள்ளினேன் வெள்ளத்
திளங் கோயில் கைவி டேலென்று"

(3 ந் திருவந்தாதி – 61 பாசுரம்)

பேயாழ்வார்:

இவர் இம்மலை பற்றிப் பாடியுள்ள ஒரு பாசுரத்தில் திருமாலிருஞ் சோலையின் இயற்கை வளத்தையே குறிப்பிட்டுப் பாடியுள்ளார்.

சமஸ்கிருத இலக்கியங்கள்:

சுந்தரபாஹுஸ்தவம்:

இந்நூல் கூரத்தாழ்வாரால் இயற்றப்பட்டது. இந்நூலுள் இங்குள்ள மலை, தீர்த்தம், இங்குள்ள இறைவன் புகழ் அனைத்தும் பேசப்படுகின்றது. இவர் 11 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பர். இந்நூல் கண்ணனின் லீலைகள், தசாவதாரச் சிறப்புகள், சோமச்சந்த விமானத்தின் சிறப்பு, இங்குள்ள ஏனைய தீர்த்தங்களின் சிறப்புகள் எல்லாம் முறையே கூறப்பெற்றுள்ளன. மேலும் சுந்தரராஜர் மலையத்துவஜ பாண்டியனுக்குக் காட்சி கொடுத்ததைப் பற்றியும் பாடியுள்ளார்.

ஸுந்தரராஜ ஸுப்ரபாதம்:

இதுவும் கூரத்தாழ்வார் இயற்றியது. அழகப் பெருமானை அதிகாலையில் எழுப்பும் வடமொழி இலக்கியம். இதில் இறைவனையும், தாயாரையும் இணைத்துப்

பள்ளியெழுப்பும் பாடல் பின்வருமாறு:

"மாதஸ் ஸமஸ்த்த ஜகதாம் அவநாய லஷ்மி
தத்வைஷ்ணவம் பதமுபேக்ஷய வநாத்ரி தாம
ப்ராப்தாஸு நவசாகர ஸந்தி மக்நாம்
தம்தார யாத்ய கமலே தவ ஸுப்ரபாதம்"

அடுத்து ஸுந்தரனை மட்டும் தனித்துத் துயில் எழுப்புதல்:

"ஸ்ரீபூதயோகி மஹதாஹ்வய பட்டநாத
கோதா சடாரி களஜித் கவயஷ் ஷடதே
த்வாம் ஸுரயஸ்ஸவக் ருதிபி: கலுஸம்ஸ்து வந்த:
ஆயாந்தி ஸுந்தர மஹாபுஜ ஸுப்ரபாதம்"

சுந்தரராஜ ஸ்தோத்ரம்:

இதுவும் கூரத்தாழ்வாரால் இயற்றப்பட்டது. இங்குள்ள மலையின் சிறப்பினைப் பின்வரும் பாடல் பகரும்:

வனசைலபதே கிரிவப்ரலஸன்
நவநீரத நீலதானேஸுப
அபராதஸ தையிர் பரிதம் த்வரிதம்
சரணாகதவத் ஸல பாகிவிபோ

சுந்தரராஜ மங்களம்:

இங்குள்ள பெருமான் மீது பாடப்பட்ட இந்நூலும் கூரத்தாழ்வார் இயற்றியது. தாயாரையும் பெருமானையும், சோமச்சந்த விமானத்தையும் ஏற்றிப் பாடுகின்றது.

அழகர் அந்தாதி:

அழகிய மணவாளதாசர் எனும் பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் பாடிய நூல். இதில் 100 பாடல்கள் அமைந்துள்ளன. ஆழ்வார் தம் பாசுரங்களில் இவர் ஆழ்ந்த நிலையினை, அழகர் அந்தாதி வெளிப்படுத்தும். இவருடைய பாடல்கள் ஆழ்வார் பாசுரங்களைப் படிப்பது போன்றே

இருக்கும். இங்குள்ள அருவி, மலைபற்றிய வர்ணனைகளுடன், இங்குள்ள இறைவனைப் பலவாறு சொல்லி அழைத்து மகிழ்வார். அழகன் மீதுள்ள அளவற்ற காதலுடன், மாலலங்காரன் என்றும், 'அழகன்' என்றும், சுந்தரன் என்றும், 'சோலை மலையான்' என்றும், அவன் குடி கொண்ட மலையைச் 'சோலைமாமலை' என்றும் பாடுவார்.

அழகர் பிள்ளைத்தமிழ்:

இதன் ஆசிரியர் யார் என்று தெரியவில்லை. வேம்பத்தூர்ப் புலவர்கள் செய்த நூல் என்று இந்நூல் பாயிரம் கூறும். ஆனால் எந்தப் புலவர் என்று தெரியவில்லை.

பிள்ளைத் தமிழ் ஆசிரியர்கள் காப்புப் பருவம் முதல் சிறுதேர்ப்பருவம் வரையுள்ள நூறு பாடல்களில் மாலலங்காரனின் சிறப்புகளைக் கூறுகின்றனர். இந்நூறு பாடல்களும் இம்மலை பற்றியும், மால் பற்றியும், சிலம்பாறு பற்றியும் பேசுகின்றது.

இந்நூலாசிரியர் அவையடக்கம் பற்றிப் பதினைந்து பாடல்கள் பாடுகின்றார். அவற்றுள் பத்து இடத்தில் ''மாலலங்காரன்'' என்றும், இரண்டு இடத்தில் ''மலையலங்காரன்'' என்றும், ஒர் இடத்தில் ''குலமலை'' என்றும் குறிக்கின்றார்.

அழகர் கலம்பகம்:

கவிகுஞ்சரமய்யர் இயற்றிய நூல். நூறு பாடல்களில் அஷ்டபிரபந்த ஆசிரியரான அழகிய மணவாள தாசர் போன்று கவிகுஞ்சரமய்யர் தசாவதாரச் சிறப்பையும், கிருஷ்ணா அவதாரத்தில் கண்ணனது லீலைகளையும், உலகுய்யும் பொருட்டு திருமால் செய்த பல்வேறு வதங்களையும், பாகவதக் கதைகளில் உள்ள கிருஷ்ணனின் சிறப்புகளையும், அழகரது இயல்பாக்கி, அழகரது சிறப்புகளைப்

பதினெட்டு வகையான கலம்பக உறுப்புக்களில் வைத்து, ஏற்றிக் கூறும் நூலாகும்.

கவிகுஞ்சரமய்யர் பல்வேறு வகையான இசைப்பாக்களால் இறைவன் அழகனைப் பாடும் விதம் போற்றத்தக்கது.

அழகர் குறவஞ்சி:

இந்நூலினை இயற்றியவர் கவிகுஞ்சரபாரதி. இந்நூல் குற்றாலக் குறவஞ்சிக்குப் போட்டியாகப் பாடப் பெற்ற நூல் என்பர். இவர் அழகர் தம் சிறப்பு, மலைச் சிறப்பு, சிலம்பாற்றுச் சிறப்பு, சோமச்சந்த விமானச் சிறப்பு முதலான பல சிறப்புகளையும் குறவன், குறத்தி வாயிலாகத் தம் நூலுள் பேசுகின்றார்.

அழகர் கிள்ளை விடு தூது:

இந்நூலினைப் பாடியவர் பலபட்டடைச் சொக்கநாதர். இந்நூலாசிரியர் அழகர் சிறப்பு, மலைச் சிறப்பு, சிலம்பாற்றின் சிறப்பினையும், மொத்தம் 239 கண்ணிகள் வாயிலாக 478 வரிகளில் எடுத்துக் கூறுகின்றார். இந்நூலுள் ஆசிரியர் சித்திரைத் திருவிழா பற்றியும், திருமாலின் அவதாரச் சிறப்புகள், பாகவதக் கதைகளைப் பற்றிய செய்திகளையும், குறிக்கின்றார்.

அழகர் அம்மானை:

இந்நூலை எழுதியவர் யாரென்று தெரியவில்லை. இந்நூலுள் அழகர் தம் தசாவதாரச் சிறப்பு பேசப்படுகிறது. மேலும் இந்நூலில் ''குடமேந்திக் கோவலர்கள் கூத்தாடுங் குன்றுடையான்'' என்று கோவலர் தம் குடக்கூத்துச் செய்தி கூறப்படுகின்றது.

அருணகிரியார் – திருப்புகழில்:

அருணகிரியார் தமது பாடல்களில் சோலைமலைப் பெருமாள் என்று முருகனைப் பாடுங்கால், இம்மலையினை அவர் குலமலை என்றும், கோலமலை என்றும் அழைக்கின்றார்.

மேலும் போதை பரிணயம், நவர்தன சிந்தாமணி சருக்சம், ஊசிமுறி, சோடக கலாமாலை ஸ்ரீஹம்சசந்தேசம், பாரத வெண்பா, கூடல் புராணம் போன்ற நூல்களிலும் அழகர் மலை பற்றிய குறிப்பு வருகின்றது.

இவ்வாறு காலங்காலமாகச் சோலைமலையும், அம்மலையுறை தெய்வங்களும், ஆறும் போற்றப்பட்டன.

கோயில் ஒழுகு:

இந்த நூலின் வாயிலாகத் திருவரங்கத்தின் மீது இருமுறை (கி.பி.1327, 1371) முகமதியர் படையெடுத்த போது ஸ்ரீரங்கநாதர், சோலைமலையில் உள்ள அழகிய மணவாளன் கிணற்றில் தங்கி இருந்தார் என்று அறிகிறோம்.

5 SEP 2018
கோட்டூர்புரம்
சென்னை-85

13 நாகர் வழிபாடு

திருமாலிருஞ் சோலை மலையில் மூன்று இடங்களில்நாகர் சிலைகள் ஏராளமாகக் காணப்படுகின்றன.

1) மூன்றாம் திருச்சுற்றில் யோக நரசிம்மருக்கு அடுத்த சிறிய சன்னதி. இதில் ஏராளமான நாக உருவங்கள் உள்ளன.

2) நாராயண வாவிக்குத் தென்புறம் உள்ள மிகப்பெரிய அரச மரத்தின் அடியில் ஏராளமான நாக உருவங்கள் உள்ளன.

3) திருமாலிருஞ் சோலை மலையில் நூபுர கங்கைத் தீர்த்தத்தின் மேல் மண்டபத்தில் இராக்காயி அம்மன் கோயிலுக்குப் பின்புறம் நூற்றுக்கணக்கான நாக உருவங்கள் உள்ளன.

நூபுர கங்கைத் தீர்த்தத்தின் மேலுள்ள மண்டபத்தை மாதவி மண்டபம் என்று வழங்குவர்.

நாகர் வழிபாட்டின் தொன்மை பிறநாடுகளின் வாயிலாக:

நாகர் வழிபாடு மிகவுந் தொன்மையானது. வேதகாலந்தொட்டு வழிபாட்டில் இருப்பது. இவ்வழிபாடு உலகம் முழுதும் பரவியுள்ள வழிபாடு என்றும் கூறலாம். இவ் வழிபாடு இன்றளவும் அனைத்தும் நாடுகளிலும் காணப்படுகின்றது. கிரேக்கர்கள் நாகரைத் தமது காவல் தெய்வமாகக் கருதினர். ரோம் நாட்டில் இது அனைத்துக் கோயில்களிலும் வைத்து வணங்கப்படுவதோடு மட்டுமல்லாமல் வீடுகளிலும் வைத்து வணங்கப்படுகிறது.

பாபிலோனிலும் நாகர்தம் வழிபாடு உள்ளது. ஆஸ்திரேலியாவில் உள்ள ''வரமுங்கா'' எனும் பழங்குடி மக்களிடம் இவ்வழிபாடு பரவலாக உள்ளது எனலாம். ஆப்பிரிக்க மக்களும் நாகரை வணங்கினர். அமெரிக்கச் சிவப்பு இந்தியரும், நாகர் வழிபாட்டினை ஏற்றுக் கொண்டவர்களேயாவர். மெக்ஸிகோவில் உள்ள பூர்வ குடிமக்கள் இவ்வழிபாட்டினைச் சிறப்பாகச் செய்துள்ளனர். சீனர்கள் நாகத்திற்குக் கோயில் கட்டி வழிபட்டுள்ளனர். ஜப்பானியர் நாகத்தைக் கடவுளின் அம்சமாகவே அன்று முதல் இன்றுவரை வழிபட்டு வருகின்றனர்.

வேதகால வழிபாடு:

நாக வழிபாடு வேதகால வழிபாடு எனலாம். ரிக் வேதத்திலும் இது பற்றிய குறிப்பு உள்ளது. இதில் வரும் அசுரர்களைப் பற்றியும், சர்ப்பங்களைப் பற்றியும் வரும் செய்திகள் குறிக்கத் தக்கன. ஆரியர் -நாகர் போராட்டத்தின் பிரதிபலிப்பே காளிங்க நர்த்தனம் என்று கொள்ளலாம்.

பிற செய்திகள் வழிபாடு பற்றி:

1) மகாபாரதத்தில் - நாகர்கள் அசுரர்களாகச் சித்திரிக்கப்பட்டுள்ளதும் கருதத்தக்க ஒன்றாகும்.

2) சங்கநூற் செய்திகளும் நாகர் தம் வழிபாட்டைப் பற்றி பலவாறும் பேசுகின்றன

3) மணிமேகலை நாகர் தம் வழிபாட்டினைப் பற்றிக் கூறும். நாககன்னியின் கதை நாம் அறிந்த ஒன்றே

4) இவ் வழிபாடு முதன் முதலில் மேற்குக் கரையோரத்தில் தொடங்கியது என்பர்.

சைவம், வைணவம், சமணம், பௌத்தம் இந்நான்கு மதத்தில் நாக வழிபாடு ஊடுருவியுள்ளது எனலாம்.

1) சிவன் நாகத்தை கழுத்தில் அணிந்துள்ளார்

2) திருமால் ஆதிசேஷனைப் படுக்கையாய்க் கொண்டுள்ளார்

3) சமணத்தில் பார்சவ நாதர் திருவுருவில் குடையாய் ஐந்தலை நாகம் உள்ளது என்பது கருதத்தக்கது.

அழகர்மலையின் மேலுள்ள நாகர்கோயில்:

இக்கோயிலும் இராக்காயி அம்மன் கோயிலும் இணைந்தே உள்ளன. இராக்காயி அம்மனின் வலப்புறமும், இடப்புறமும், மூன்று தலை, ஐந்து தலை, ஏழுதலை, ஒன்பது பதினொறு தலையுள்ள ஒரே கல்லில் ஆன நாகர் உருவங்கள் ஏராளமாக உள்ளன என்பது குறிக்கத்தக்க ஒன்றாகும். இரு நாகங்கள் இணைந்த நிலையிலும் காணப்படுகின்றன.

தற்பொழுது மலையின் மேலுள்ள நாகர் கோயிலானது கிராம மக்கள் வழிபாட்டு இடமாக விளங்குகின்றனது.

குழந்தைப்பேறு இல்லாதவர்கள் இங்கு வந்து ஏராளமான மரப் பொம்மைகள் செய்து வைத்துள்ளனர். இங்கு வரும் பெரும்பான்மையான மக்கள் நாகருக்குப் பால் வார்க்கின்றனர். உப்பு, நல்ல மிளகு முதலானவற்றைக் காணிக்கையாகச் செலுத்தி இராக்காயி அம்மனையும், நாகரையும் வணங்கி வருகின்றனர். இங்கு வருபவர்கள் தீராத நோயினைத் தீர்ப்பதற்கும். நாகதோஷங்களை நீக்குவதற்கும் வருகின்றனர். மகப்பேறு கிட்டியவர்கள் இங்கு நாகர் உருவத்தைச் செய்து வைத்து வணங்கிச் செல்கின்றனர்.

14 நாட்டுப்புறப் பாடல்களில் அழகர்

நாட்டுப்புற மக்களின் பாடல்களில் இன்றைய நடப்பியலைக் கூறுவதோடு, நம் மாயா அவதாரனின் மாண்புகளையும் மனம் விட்டுப் பேசுகின்றனர். நாற்று நடும் மக்களின் மனம் மழை இல்லையே என்று ஏங்குகின்றது. அப்போது பாடும் பாடலில் நம் அழகனின் புகழும் இரண்டறக் கலந்து ஓங்குகின்றது! “மாயா அவதாரா! மழைதனை வருவிப்பாய்! எங்கள் மக்கள் பசியைக் களைவாய்!” குழவிப் பாசத்தை கோபாலனிடம் எடுத்துரைத்த மக்கள் அத்தோடு அமைகின்றார்களா! இல்லை! இந்த நாடு செழித்தால் தானே நாங்கள் நாத்து நட்டு பிழைக்க முடியும்! ஆதலால் அழகா மழையைப் பெய்விப்பாய் என்று தன்னலத்தோடு கலந்த பொது நலத்தினைக் கூறுவதோடு அமையாது, தங்களது பசியினையும், பஞ்சத்தினையும் தங்கள் மக்கள் படும் துயரினையும் சொல்லாமல் சொல்லும் பாடல் பின்வருமாறு:

“மானம் மழை பேஞ்சுடனும் – மாலலங்காரா
எங்க மக்க வயிறு நெறைஞ்சுடனும் – மாலலங்காரா
நல்ல மழை பேஞ்சுடனும் – மாலலங்காரா
நாங்க நாத்த நட்டுப் பொழச்சுடனும் – மாலலங்காரா
பூமி செழிச்சுடனும் – மாலலங்காரா
எங்க புள்ளைக வயிறு நெறைஞ்சுடனும் – மாலலங்காரா

பேய்ச்சி உசிறு குடிச்சவனே – மாலலங்காரா
இங்கே பேய்மழை தான் பேஞ்சுடனும் – மாலலங்காரா
ஆச்சி வளத்தவனே – மாலலங்காரா
அனைவரையும் வாழ வைப்பாய் – மாலலங்காரா’’

கள்ளந்தரி என்ற கிராமப் பகுதியில் இது போன்ற பாடல்களைப் படித்துப் கொண்டு, நாற்று நடும் களைப்பினையும், தங்களது பசியையும் மறந்து வேலை செய்வர். கள்ளந்தரி என்ற கிராமம் அழகர்கோயிலுக்குப் போகும் வழியில் உள்ளது.

இடையர் பாடும் பாடல்:

ஆயர்பாடியில் வளர் அண்ணலின் சிறப்பு இன்று வரை ஆயர் தம் நெஞ்சிலே பசுமையாகப் படர்ந்திருக்கின்றது.

சீக்கரமாய் ஊத்தி வைப்போம்
பால் தயிர் அத்தனையும் என்னய்யனுக்கு
பாங்காய் படைச்சிடுவோம்
ஒட்டிய ஆடைத்தயிர் என்னய்யனுக்கு
சட்டி சட்டியாய் வைப்போம்
கட்டிய தேஞ்சாற்றை என்னய்யனுக்கு
முட்டி முட்டியாய் வைப்போம்
பழவர்க்கம் எல்லாத்தையும்
என்னய்யனுக்கு பயமுடனே
படைச்சிடுவோம்

இப்பாட்டும் அழகன் மீது அவர்கள் கொண்டுள்ள ஆரா அன்பிற்கு ஓர் எடுத்துக்காட்டு.

அழகர் அமர்ந்து வரும் குதிரையின் அழகு பற்றிய பாடல்:

எங்களய்யா ஏறிவரும்
குதிரையின் அழகெல்லாம்

கூறுவார் எவருமில்லை

பவளநிற முகத்தோடே

எங்களய்யா குதிரை

பாஞ்சு வருகுது பார்

பச்சை நிறக் காலோடே

எங்களய்யா குதிரை

பகட்டா வருகுது பார்

வெள்ளைநிற வயித்தோடே

எங்களய்யா குதிரை

விரசா வருகுது பார்

தங்கமேனி அழகோடே

எங்களய்யா குதிரை

தகதகனு வருகுது பார் (அட்டைப்படம்)

சித்திரைத் திருவிழாவின் போது, அழகர் வண்டியூர் சென்று அங்குள்ள வீரராகவப் பெருமாள் கோயிலில் தங்குவது பற்றி நாட்டுப்புறப் பாடலில் பின்வருமாறு கூறப்படுகிறது:

வண்டியூர் வந்திடுவார்

அய்யா வரிசைகளைப் பெற்றிடுவார்

வெள்ளைப் பரிவட்டத்துடன் ஐயா

வேஷம் பல போட்டிடுவார்

சிகப்புக் கல்லுக் கடுக்காணை

அய்யா சிக்கீரமாய் மாட்டிடுவார்

நெற்றியிலே திருநாமம்

அய்யா நேர்த்தியாய் போட்டிடுவார்

சந்தனமும் கஸ்தூரியும்

ஐயா சூடுதியிலே பூசிடுவார்

மோகனா அவதாரத்திலே

எங்களுக்கு மோட்சம் குடுத்திடுவார்

இத்தனையும் செய்வதற்கு

எங்களய்யா வாராரு

அத்தனை பேரையும் காப்பாரு

அனைவர்க்கும் சோகம் குடுப்பாரு

இப்பாடலின் வாயிலாக அழகரின் அலங்காரமும், அவரது அவதாரச் சிறப்பும், ஏழை எளியவரின் உள்ளத்தில் எப்படிப் பதிந்துள்ளது என்பது நன்கு புலப்படும். கள்ளர் போடும் கடுக்காணை கள்ளழகர் போட்டதைக் கண்ட கள்ளர்தம் நெஞ்சு எத்தகைய இனிய பாடலைத் தந்துள்ளது? ஆற்றில் இறங்கும் அழகர் தம் ஆடைச் சிறப்பும், அதனால் விளையும் வேளாண்மைப் பலனும்

அழகர் அல்ங்காரப் பிரியர் என்பது நாம் அறிந்த ஒன்றே. அவர் ஆற்றில் இறங்கும் பொழுது ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு வண்ணத்தில் ஆடைதனை அணிந்து வருவார். அவர் அணிந்து வரும் ஒவ்வொரு வண்ணத்திற்கும், ஒவ்வொரு விதமான வேளாண்மைப் பலனை மதுரை மாவட்ட மக்கள் கூறுவர். கீழ்க்காணும் பாடல் இதனை நன்கு விளக்கும்.

தங்கக் குதிரையிலே எங்களய்யா

தகதகனு வாராரு – அவரு

வெள்ளைப்பட்டு போட்டு வந்தா

மழைவெள்ளம் பொரண்டு வரும்

எங்களுக்கு வேண்டியது வெளைஞ்சுவரும்

அவரு நீலப்பட்டு போட்டு வந்தா

எங்களுக்கு நிம்மதி பொறந்திடுமே

தமிழிக் கல்வெட்டுகள்



1. "மதிரய் பொன் கொல்வன் அதன் அதன்"
கி.மு. 2ம் நூற்றாண்டு



2. "பணித வணிகன் நெடுமலன், கொழுவணிகன்"
கி.மு.2 ம் நூற்றாண்டு



3. கனக அதன மகன் அதன அதன

கவின்மிகு கட்டடங்கள்



4. பதினெட்டாம்படிக் கருப்பர் சன்னதி
கி.பி.16, 17ஆம் நூற்றாண்டு



5. இராஜகோபுரம்
கி.பி.16, 17ஆம் நூற்றாண்டு



6. திருமலைநாயக்கர் மண்டபம் கி.பி. 17- ஆம் நூற்றாண்டு



7. இராக்காயி அம்மன் சன்னதி
மாதவி மண்டபம் நூபுரகங்கை

8. "சுந்தரத்தோளுடையான்"
விஷ்ணு - கி.பி.14,15 - ஆம் நூற்றாண்டு



9. "நலந்திகழ் நாரணன்"
நித்ய உத்சவர்(வெள்ளியிலானது)
கி.பி.15 - ஆம் நூற்றாண்டு

10. "ஏறுதிருவுடையான்"
சீனிவாசன் (வெள்ளியிலானது)
கி.பி.14,15-ஆம் நூற்றாண்டு

11. விஸ்வக்ஷேனர் - ஜெயதேவி
கி.பி.15-ஆம் நூற்றாண்டு

12. ஆண்டாள்
கி.பி. 15 -ஆம் நூற்றாண்டு

13. நர்த்தன கிருஷ்ணன்
கி.பி.15 -ஆம் நூற்றாண்டு

சீர்மிகு சிற்பங்கள்

14. திருமலை நாயக்கர் தேவியருடன்
திருமலை நாயக்கர் மண்டபம்
கி.பி.17 - ஆம் நூற்றாண்டு

15. "அந்தரம் ஏழினூடு செலவுய்த்த பாதம்"
திருவிக்கிரம அவதாரம்
கி.பி.16, 17ஆம் நூற்றாண்டு

16. "ஆளியாய் இரணியன் ஆகம் கீண்ட பெருமான்"
நரசிம்ம அவதாரம்
கி.பி.16, 17ஆம் நூற்றாண்டு

எழில்மிகு ஓவியங்கள்

17. புத்திர காமேஷ்டி யாகம்
கி.பி.17ஆம் நூற்றாண்டு

18. இராமர் முதலானோர் பிறத்தல் - நீராட்டுதல்
கி.பி.17ஆம் நூற்றாண்டு



19. "தூங்குமஞ்சம்" இராமலட்சுமணர் முதலானோரைத்
தொட்டிலில் இட்டுத் தாலாட்டுதல்
கி.பி.17 - ஆம் நூற்றாண்டு

கோட்டையும் கோபுரமும்



20.இரண்யன் கோட்டை

21.இராயர் கோபுரம்

T.7450